

# சாதாரண மக்களுக்கு நலம் தர முதல்வர் கலைஞர் வழங்கிய 1975-76 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1975-76ஆம் ஆண்டுக்கான நிதி நிலை மதிப்பீடுகளையும், 1974-75ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகளையும் இம்மன்றத்தின் முன் ஒப்புதலுக்காக வைக்கின்றேன்.

கட்டுக்கடங்காத நிலையில் விலைவாசி ஏறிக் கொண்டு போவதும், அதனை எட்டிப் பிடிக்க முடியாத அளவுக்கு வாங்கும் சக்தி இருப்பதுமான ஏற்றத்தாழ்வான பொருளாதார நிலைக்குத் தீர்வு காண முடியாமல், இந்திய நாடு குழம்பிக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் வெளியிடப்படும் நமது மாநிலத்து நிதிநிலை அறிக்கையில், அந்த வேதனையின் நிழல் விழுவதைத் தவிர்க்க முடியாது என்பதை மன்றத்து மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள்.

உலகெங்கும் - விலைவாசி உயர்வு கடுமையாக இருந்த போதிலும், ஏழ்மை மிக்க இந்திய நாட்டுக்கு அதனைச் சமாளிக்கும் சக்தி இன்னும் முழுமையாக ஏற்படவில்லை. நிலையற்ற தன்மையில் பணத்தின் மதிப்பு ஊசலாடும்போது, வருமானத்தின் உண்மை மதிப்பு ஒளியிழந்து விடுகிறது. முதலீடுகளுக்கும் சேமிப்புகளுக்கும் அதே கதி தான். களையப்பட வேண்டுமென்று கருதுகிற சமுதாய ஏற்றத்தாழ்வுகள், சற்றும் அசைந்து கொடுக்காமல் நிற்பதற்கும் இந்தப் பொருளாதாரச் சிக்கல் தான் காரணமாகிறது. விலை ஏறுகிறது. ஊதியங்கள் உயர்த்தப்படுகின்றன. விண்ணில் ஏறிப் பறக்கும் காற்றாடிபோல் ஏறுகிற விலைவாசிக்கு, உயர்த்தப்படுகிற ஊதியங்கள், மேலும் உயரப் பறப்பதற்கு உதவுகிற நூல்கயிறாக அமைகின்றது. ஊதிய உயர்வுக் கோரிக்கை வைப்பதற்கு வாய்ப்பற்ற பல கோடி மக்கள் இந்திய நாட்டில் இருக்கிறார்கள். காரணம் —அவர்களுக்கு எந்த ஊதியமும் இல்லை! ஊதியம் இருந்தால் தானே உயர்த்த வேண்டுமென்ற குரலே எழப் போகிறது? அவர்களுக்கும் சேர்த்துத் தான்—சரியாகச் சொல்வதானால், அவர்களை முக்கியமாக வைத்துத்தான், நமது பொருளாதாரப் புரட்சியையே உருவாக்க வேண்டும்.

அறிஞர் அண்ணா அவர்கள் இந்த அவையில் பன்முறை எடுத்துக் காட்டியது போல, விலைவாசியைக் கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரங்கள் அனைத்தும் மத்திய அரசிடம் குவிந்திருக்க, விலை உயர்வுகளின் காரணமாக எழும் குமுறல்களுக்குப் பொறுப்பேற்க வேண்டிய நிலை பெரும்பாலும் மாநில அரசுகளுக்கே ஏற்பட்டுவிடுகிறது. ஓரிரு திங்களுக்கு முன்பு ரிசர்வ் வங்கியே வெளியிட்டுள்ள தனது ''நாணய-நிதி அறிக்கை'' என்னும் நூலில், ''தொடர்ந்து இருந்து வருகிற விலையேற்றத்தை, நிர்வாகக் காரணங்களினாலோ அரசியல் காரணங்களினாலோ, அரசு, சரிவரச் சமாளிக்க முடியவில்லையோ என்ற அச்சம் உருவாகியுள்ளது'' எனக் குறிப்பிட்டிருப்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்த ஆண்டு நமது மாநிலத்தில் ஏற்பட்டுள்ள வறட்சிக் கொடுமை, விலைவாசி உயர்வுக்கு மேலும் ஒரு காரணமாக

அமைந்துள்ள போதிலும், இந்த உயர்வுக்கு அடித்தள மாக, சில ஆண்டுகளாக மத்திய அரசு கடைப்பிடித்து வரும் நிதி நிர்வாகக் கொள்கை அமைந்துள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. விறு விறுப்புடன் அணுகி, விரை வாக எடுக்க வேண்டிய பொரு ளாதாரக் கொள்கை முடிவுகள் பல இருப்பினும், இப்போது குறிப்பாக,

—திட்ட முதலீடுகளது தன்மை பற்றியும், அளவு பற்றியும் தீர்வு காண்பது;

—உணவுப் பெருக்கத்திற் கும், தொழில் பெருக்கத்திற் கும் உடனடி நடவடிக்கைகளை மேற் கொள்வது;

—பொதுத் துறை, தனியார் துறை என எல்லாத் துறை களுக்கும் பொருந்துவதாக தேசிய அளவில், ஊதியங்கள், வருமானங்கள், ஆதாயங்கள் பற்றிய கொள்கைகளை வகுத் துச் செயல்படுத்துவது.

ஆகிய இவற்றிலாவது உட னடி அக்கறை காட்டிட வேண் டும். விலைவாசியேற்றத்தால் ஏற்படும் வேதனை விளைவுகளைத் தவிர்ப்பதாகச் சொல்லி, மத் திய அரசு எடுக்கும் நடவடிக் கைகள் பொது மக்களுக்கு உகந்ததாக அமையவில்லை. எனவே, அத்தகைய நடவடிக் கைகளை எடுக்குமுன்னர், மக்க ளோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்ட மாநில அரசுகளுடன் கலந்து விவாதித் துச் செயல்படுவதே நலம் பயக்கும். மத்திய அரசு, முதல் அமைச்சர்கள் மாநாடு ஒன் றைக் கூட்டி, நாட்டின் பொரு ளாதார நிலையையும், அதன் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை யும் பற்றி மனங்கலந்து பேச வேண்டும் என்ற கருத்தைப் பல முறை நான் வற்புறுத்தியுள் ளேன். இதனை மத்திய அரசு இதுகாறும் ஏற்க முன்வர வில்லை என்பதும் வழக்கமாகக் கூட்டப்பட வேண்டிய தேசிய வளர்ச்சிக் குழுவுங்கூட கடந்த 15 மாதங்களாகக் கூட்டப்பட வில்லை என்பதும் வருந்தத் தக்கனவாகும்.

மத்திய அரசு தனது வரவு-செலவுத் திட்டங்களில், பெருத்த துண்டு விழுவதைத் தவிர்க்க முடியாமல் இருக்கும் போது, மாநில அரசுகள் தத் தம் வரவு செலவுகளைச் சரிக் கட்ட வேண்டும் என்றும்,




பற்றாக்குறை ஏதும் ஏற்பட விடலாகாது என்றும், அறி வுறுத்துவதும், அச்சுறுத்துவ தும் முரண்பாடானதாகும். இதனால் மாநில அரசுகள் பற்றாக்குறையைச் சரிக்கட்டா மல் விட்டுவிட வேண்டும் என்று நான் கூறுவதாகக் கருதி விடக்கூடாது. நான் வேண்டு வதெல்லாம், மத்திய அரசா னாலும், எந்த மாநில அரசானா லும், நிதி நியாயம் ஒன்றாக இருக்க வேண்டுமென்பதே. மாநிலங்களது வளர்ச்சிப் பணிகள், துயர் தணிப்புப் பணிகள், இவற்றுக்குத் தேவை யான உதவிகளைக் குறைத்தோ, அல்லது பொதுக் கடன்களில் மாநிலங்களின் உரிய பங்கை மறுத்தோ, மத்திய அரசு தனது பற்றாக்குறையை ஈடு செய்ய முயற்சி செய்வது சரி யல்ல.

மத்திய-மாநில அரசுகளுக் கிடையிலான நிதி உறவுகள் இவ்வாறு உறுதியாக அமை யாத நிலையில், ஒரு புறம் வளர்ச்சித் தேவைகளையும், மறுபுறம் சீரான நிதி நிர்வா கத்தையும் கருத்தில் கொண்டு சூழ்நிலைக்கேற்ப வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிக்க வேண் டியிருக்கிறது. நமது மாநிலத் தைப் பொறுத்தவரை, பின் வரும் முக்கிய குறிக்கோளுடன் வரும் ஆண்டின் வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள் ளது:—

திட்டப்பணிகள்;

திட்டத்திற்கு அப்பாற் பட்ட வளர்ச்சிப் பணிகள்;

வறட்சி நிவாரணப் பணிகள்;

சமூக நலச்சிறப்புப் பணிகள்;

சமதர்ம சமுதாய அமைப்புப் பணிகள்;

இவை அந்தக் குறிக்கோள்கள் ஆகும்.

### ஐந்தாண்டுத் திட்டம்

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையான 25,000 கோடி ரூபாயை விட, ஐந்தாவது ஐந் தாண்டுத் திட்டத்திற்கு இரு மடங்குக்கு மேலாக, அதாவது 53,400 கோடி ரூபாய் ஒதுக் கப்படும் என்ற மத்திய அர சின் அறிவிப்பு, நமக்கெல் லாம் பூரிப்பை வழங்கியதோடு இந்திய நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கும், வேலை வாய்ப் புக்கும், வறுமையை வெளி யேற்றும் கொள்கைக்கும் உறு துணையாக அமையும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் நிலைமை அதற்கு மாறாக அமைந்துவிட்டது. திட்டங் களுக்கு விடுமுறை அளிக்கப் பட வேண்டும் என்கின்ற ஒரு சாராரின் வாதம் பிற்போக்கு வாதம் என்று சொல்லப்பட்ட போதிலும், மத்திய அரசு, செயல் அளவில், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு விடுமுறை அளித்து, அந்தச் சாராரோடு தன்னை இணைத்துக் கொண்டிருக்கிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான வரைவு குறிப்புகள் எல்லா மாநில முதலமைச்சர்களுக் கும் அனுப்பப்பட்டு, அதுபற் றிய ஆய்வுக்கூட்டம் டெல்லி யிலே நடைபெற்று, அதன் பிறகு மாநிலங்களுக்கான திட் டங்களைப் பற்றி மாநில அரசு களோடு தனித்தனியாக மத் தியத் திட்டக்குழு கலந்து பேசி, அதனைத் தொடர்ந்து திட்டத்திற்கான முழு வடிவு காணப்படும் என்பதற்கு தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டம் கடந்த ஆண்டே நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு, இப்போது ஆண்டுத் திட்டங்களே நிறை வேறினால் போதும் என்கிற அளவிற்கு ஐந்தாண்டுத் திட் டம் குறுகிப் போய் இருக்கிறது.

### 1975-76—ஆம் ஆண்டுத் திட்டம்

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் நடைமுறைக்கு வரும் என்பது பற்றிய நம்பிக்கையை இழந்துவிட்ட நமது மாநிலம், 1975-76-க்கான ஆண்டுத் திட் டத்திற்கு 163 கோடி ரூபாய் ஒதுக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டது. 1973-74ல் நமது மாநிலத் திட்டத்தின் அளவு 129 கோடி ரூபாய். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டாக இருக்க வேண்டிய இந்த நடப் பாண்டில், மத்திய அரசு ஒப்பு தல் அளித்த திட்டத்தின் அளவு 112 கோடி ரூபாய். இருப்பினும், நாம் அந்தத் திட் டத்தின் அளவை 142 கோடி ரூபாயாக உயர்த்திக் கொண் டோம். வரும் ஆண்டு, நாம் கேட்ட 163 கோடி ரூபாய்த்


திட்டத்திற்கு மாறாக, 143 கோடி ரூபாய் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதில் மத்திய அரசின் உதவியாக இதுவரையில் உறுதி அளிக்கப்பட்டிருப்பது 41.15 கோடி ரூபாய். இந்த உதவியை மேலும் உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தி வருகிறோம். இந்த 143 கோடி ரூபாய்த் திட்ட அளவில், வாரியங்கள், அரசுத் துறை நிறுவனங்கள் பலவற்றின் சொந்த நிதி வசதிகள், அவை பெற்றுள்ள கடன்கள் ஆகியவை அடங்கா. மாநில வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் வராமல் ஏனைய வருவாய்கள் மூலமாக, இந்த நிறுவனங்கள் வளர்ச்சிப் பணிகளுக்குச் செலவிடும் தொகைகளையும் திட்டச் செலவின் பகுதியாகக் கணக்கில் எடுத்துக் கொண்டால், திட்டத்தின் அளவு, இவ்வகையில் மேலும் 27 கோடி ரூபாய் உயர்ந்து, மொத்தம் 170 கோடி ரூபாயாக இருக்கும்.

### வறட்சித் துயர் தணிப்பு

நமது மாநிலம், என்றுமே கண்டிராத வகையில், கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதன் காரணமாக, திட்ட வளர்ச்சியின் வேகம் குன்றிவிடக் கூடாது என்பதில் நாம் கவனமாக இருக்கிறோம். கிராமப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கும், கணிசமான வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய பல்வேறு திட்டங்களுக்கும் இயல்பாகச் செய்துள்ள நிதி ஒதுக்கீடுகளிலிருந்து, அடுத்த ஏழு திங்கள்களில் வறட்சிப் பகுதிகளில் செலவிட, இயன்ற அளவுக்கு வகை செய்யப்படும். இந்த வகையில், திட்டப்பணிகளுக்காகச் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கங்களிலிருந்து, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நடப்பாண்டில் 7 கோடி ரூபாயும், 1975-76ல் 18 கோடி ரூபாயும் செலவிடப்படுமென்று நாம் மதிப்பிட்டுள்ளோம். இத்துடன் நடப்பாண்டில் வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்காக, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வாயிலாக 10 கோடி ரூபாயும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு 2 கோடி ரூபாயும் நாம் வழங்கியுள்ளோம். வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்காக திட்டத்திற்கு அப்பால், மேலும் 20 கோடி ரூபாய், 1975-76 வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டிலும், வரும் நிதி ஆண்டிலும் திட்டத்தின் பகுதியாகவும், திட்டத்திற்கு அப்பாற்பட்டதாகவும் மொத்தம் 57 கோடி ரூபாய் வறட்சிப் பணிகளுக்காகச் செலவிடப்படும். இதற்கென நாம் மத்திய அரசிடம் கேட்டுள்ள நிதி உதவி 30 கோடி ரூபாயில், நடப்பு நிதி ஆண்டுக்கு 7.5 கோடி ரூபாய் அளிக்குமென்று உறுதி கூறப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையும் கிடைக்குமென்று நம்புகிறோம்.

1969ல் ஏற்பட்ட வறட்சியை ஒட்டி நாம் 18.64 கோடி ரூபாய் செலவில் துயர் தணிப்புப் பணிகளை மேற்கொண்டோம். அவை கிராமக் குடிநீர் வழங்கு திட்டங்கள், சிறிய பாசனத் திட்டங்கள், சாலை அமைப்புத் திட்டங்கள் போன்ற நிலையான பணிகளுக்குச் செலவிடப்பட்டு, மாநிலத்தில் பரவலாகப் பயன் தந்து வருகின்றன. அவ்வாறே, 1972-ல் ஏற்பட்ட வெள்ளத்தின் பிறகும், நாம் 13.61 கோடி ரூபாய் செலவில் துயர்தணிப்புப் பணிகளை மேற்கொண்டு, அதன்கீழ், மண்மேடிட்ட நிலங்களைச் சீர் செய்தல், சாலைகளை மேம்படுத்தல், பாசன ஆதாரங்களைப் புதுப்பித்தல் போன்ற வேலைகளைச் செய்து முடித்து, நிரந்தரப் பலன்கள் மக்களுக்குக் கிட்டுமாறு செய்தோம். அதே அடிப்படையில், இப்போது மேற்கொள்ளப்பட்டுள்ள வறட்சித் துயர் தணிப்புப் பணிகளும் கிராமப் பகுதிகளுக்கு நிலையான பயன் தரும் வேலைத் திட்டங்களாகவே வடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, துயர் தணிப்புப் பணிகளுக்காக மத்திய அரசிடம் நாம் கோரும் உதவி, கூடுதல் நிதி வசதியாகவே அமைய வேண்டும். மத்திய அரசிடம் நாம் கேட்கும் தொகை, வரும் ஆண்டுகளில் மத்திய அரசு தரும் இயல்பான திட்டநிதி உதவியை முன்னதாகவே தருவது என்று அமைந்து, அடுத்த ஆண்டுத் திட்டத்தில் குறைக்கப்பட்டு விட்டால், நமக்குப் பயன் ஏதும் இராது. வெறும் கணக்கு வழக்காக ஏட்டளவில் இல்லாமல், உண்மையான நிதி உதவி மத்திய அரசிடமிருந்து நமக்குக் கிட்ட வேண்டுமென்பதே நமது கருத்து.

இயற்கையின் புறக்கணிப்பால் ஏற்பட்டுள்ள இப்படிப்பட்ட நெருக்கடியான நிலையிலும், நமது வளர்ச்சிப் பணிகளுக்குக் குந்தகம் விளையாத அளவிற்கு நமது திட்டப்பணிகளும், திட்டத்திற்கு அப்பாற்பட்ட ஏனைய வளர்ச்சிப்பணிகளும், செம்மையாக நடைபெற இந்த நிதிநிலை மதிப்பீட்டில் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.




### வேளாண்மையும் அதனுடன் இணைந்த துறைகளும்


வேளாண்மையே தமிழகப் பொருளாதாரத்தின் உயிர் நாடியாக விளங்குகிறது. வேளாண்மை வளர்ச்சிக்குத் தலையாய முன்னுரிமை அளிப்பது நமது கொள்கையாகும். கடந்த ஆண்டுகளில் புதிதாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ள நெற்பயிர்களைப் போலவே, நடப்பாண்டில் ஆடுதுறை 31 (A.D.T. 31), பூசா 33 (Pusa 33) என்ற இரு புதிய நெல் வகைகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. 90 நாட்களுக்குள் பலனளிக்கும் குறுகிய கால நெற்பயிரான 6543 என்ற புதிய நெல்வகை வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. சோளமணி, தீவனத் தட்டை ஆகிய இரண்டும் பெருமளவில் அளிக்கின்ற கோவில்பட்டி நெட்டை எனப்படும் புதிய கலப்பினச் சோள வகை ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. C.B.S. 156 என்ற புதிய பருத்தி வகை ஒன்றையும் நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம். இவ்வகைப் பருத்தியைக் கொண்டு 120 ஆம் எண் நூல் வரை நூற்க முடியும்; ஏக்கர் ஒன்றுக்கு 15 முதல் 20 குவிண்டால் வரை பருத்தி கிடைக்கும்.


தமிழகத்தில் தற்போது 11 இலட்சம் ஏக்கர் பரப்பிற்கு விளை நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. இவற்றைப் படிப்படியான விளைநிலங்களாக மாற்ற வேண்டி, அரசுப் பண்ணை நிறுவனம் ஒன்றை இந்த ஆண்டில் அமைத்துள்ளோம். விதை உற்பத்தியைப் பெருக்க, அரசு விதைப்பண்ணைகளில் பல்வேறு வசதிகள்

அமைக்கப்பட்டு வருகின்றன. ஒரு இலட்சம் ஏக்கர் பரப்பில், மரவள்ளிக் கிழங்கு பயிரிடும்பொருட்டுக்கடற்கரை யோர மாவட்டங்களில் 1975-76ல் மூன்று விதைப்பண்ணைகள் ஏற்படுத்தப்படும். ஒவ்வொரு பண்ணையும் 100 ஏக்கர் பரப்பைக் கொண்டதாக இருக்கும். நாம் மேற்கொண்டிருக்கும் முக்கியமான பணிகளில் ஒன்று, வேளாண்மை முனைப்புத் திட்டமாகும் (I. A. A. P. ). இது, சேலம், தருமபுரி முகவை, குமரி மாவட்டங்களில் இதுவரை செயல்படுத்தப்படவில்லை. வரும் ஆண்டு, இந்தத் திட்டத்தை மேற்கூறிய நான்கு மாவட்டங்களிலும் விரிவுபடுத்துவதன் வாயிலாக, 1975-76—ஆம் ஆண்டு இறுதிக்குள் தமிழ் மாநிலம் முழுவதும் இது நடைமுறைக்கு வரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வறட்சி நிலவும் தற்போதைய நிலையில், 5 இலட்சம் ஏக்கரில் நெல்லும், 6 இலட்சம் ஏக்கரில் சிறு தானியமும், 6 இலட்சம் ஏக்கரில் பயறு வகைகளும் விளைவிக்கக் கோடைக்காலப் பயிரிடும் பெருந்திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. கோடைப் பயிர் விளைவிக்க உழவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் பல வசதிகளும் சலுகைகளும் அளிக்கப்பட்டு வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கெனவே அறிவர். வேளாண்மைத் துறை நிர்வகித்து வரும் மண்வளப் பாதுகாப்புத் திட்டங்களும், சிறு பாசனத் திட்டங்களும், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குப் பயனளிக்கும் வகையில் விரிவுபடுத்தப்படும். 1975-76 - ஆம் ஆண்டில் வேளாண்மைத்துறை 2,500 குழாய்க் கிணறுகளையும், 2,000 வடிமுனைக் கிணறுகளையும், 800 துணைக் கிணறுகளையும் அமைப்பதோடு, 1,800 கிணறுகளை ஆழப்படுத்தவும் செய்யும். இதற்காகத் துளையிடு கருவிகள், பாறையைத் தகர்க்கும் சாதனங்கள் ஆகியவற்றை வாங்கப் போதிய அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ள கால்நடை வளர்ப்பு முனைப்புத் திட்டம், வரும் நிதி ஆண்டில், தஞ்சை மாவட்டத்திலும் செயல்படுத்தப்படும். வரும் ஆண்டில், நமது மாநிலத்தில் 8 புதிய மையக் கிராம



வட்டாரங்களும், 25 கூடுதல் கால்நடை மருந்தகங்களும் திறக்கப்படும். அதிகப் பால் தருகின்ற 240 உயர் இனப் பசுக்களையும், 10 பொலி காளைகளையும், டென்மார்க்கிலிருந்து தருவித்து வளர்க்கும் திட்டம், தஞ்சாவூர் மாவட்டத்தில் ஈச்சன் கோட்டைப் பண்ணையில் வரும் ஆண்டில் செயல்படுத்தப்படும். கடந்த ஆண்டு தொடங்கப்பெற்று, தனது பணிகளை விரிவாக்கி வருகின்ற கோழி வளர்ப்புக் கழகத்திற்கு 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட மீனள வளர்ச்சி நிறுவனம் செவ்விய வகையில் செயல்பட்டு வருகிறது. 1975-76ஆம் ஆண்டில் வேளாண்மை மறு நிதி உதவி நிறுவனத்திடமிருந்தும், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்தும் நிதி உதவி பெற்று, 250 மீன் பிடி விசைப் படகுகள் தயாரித்து வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக, 70 இலட்சம் ரூபாய் அரசின் நிதி அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. ஆழ்கடல் மீன்பிடி திட்டத்திற்காக நான்கு இழுபடகுகள் உள்நாட்டிலிருந்தும், இரண்டு இழுபடகுகள் வெளி நாடுகளிலிருந்தும் வாங்குவதற்கு இந்த நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது. தமிழ்நாடு வனத் தோட்ட நிறுவனம், வனத் துறைப் பொறுப்பிலிருந்து சுமார் 1.87 இலட்சம் ஏக்கர் காட்டு நிலங்களைமேற்கொண்டு, புதிய காடுகளை உருவாக்கி வருகிறது. இந்த நிறுவனத்திற்கு நிதி வழங்க வரவு-செலவுத் திட்டத்தில் 12 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

### பாசனம்

நமது அரசு ஒவ்வொரு ஆண்டும், பெரிய, நடுத்தர, சிறிய பாசனப் பணிகளுக்குத் தக்க முன்னுரிமை கொடுத்து வருகின்றது. மொத்தம் 112.5 கோடி ரூபாய் செலவில் 5.5 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பயன் பெறும் வகையில் 23 பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களைக் கடந்த எட்டு ஆண்டுகளில் மேற் கொண்டுள்ளோம். அதே நேரத்தில் சிறப்புச் சிறு பாசனத் திட்டத்தின் கீழும் தூரெடுத்துச் சீரமைக்கும் திட்டத்தின் கீழுமாக மொத்தம் 30 கோடி ரூபாய் செலவில், 6,600 பணிகளைச் செய்து முடித்து, 10 இலட்சம் ஏக்கர் நிலங்களுக்குப் பலன் தந்திருக்கிறோம். பொருளாதார அடிப்படையில் கட்டுபடியாகக்கூடிய பாசனத் திட்டங்கள், நமது மாநிலத்தில் நிறைவேற்றப்பட்டு விட்டதால், வழக்கமாகக் கணக்கிடும் செலவு—பயன் வீதங்களை மட்டும் கொள்ளாமல், குறிப்பாக, பிற்பட்ட பகுதிகளைப் பொறுத்தவரை உணவு உற்பத்தியையும், மக்களுக்குப் புதிதாகப் பாசன வசதியினால் ஏற்படும் நன்மைகளையும் கருத்தில் கொண்டு, புதிய பாசனத் திட்டங்களை மேற்கொண்டு வருகிறோம்.




பாசன வசதியை மேம்படுத்துவதற்காகவும், தற்போதுள்ள பாசன வரயில்களை நல்ல முறையில் பராமரித்து வருவதற்காகவும் வரவு-செலவுத் திட்டத்தில் 31.51 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 1975-76ல் மொத்தம் 20.2 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பின்வரும் எட்டுப் புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்படும். இவற்றால் 33,000 ஏக்கர் நிலம் புதிதாகப் பாசன வசதி பெறுவதோடு, 18,000 ஏக்கர் பரப்பில் பாசனம் உறுதி பெறும். இத்திட்டங்கள் :

1. வீராணம் ஏரியையும் வடவாறு கால்வாயையும் சீரமைத்தல் (தென் ஆர்க்காடு மாவட்டம்);

2. செண்பகத் தோப்பு நீர்த்தேக்கம் (வட ஆர்க்காடு மாவட்டம்);

3. தொட்டஹள்ளா நீர்த்தேக்கம் (தருமபுரி மாவட்டம்);

4. சித்தமல்லி நீர்த்தேக்கம் (திருச்சி மாவட்டம்);

5. உப்பாறு நீர்த்தேக்கம் (திருச்சி மாவட்டம்);

6. சிறுமலையாறு நீர்த்தேக்கம் (மதுரை மாவட்டம்);

7. பொய்கை அணைக்கட்டு (கன்னியாகுமரி மாவட்டம்);

8. கௌண்டியா நதி நீர்த்தேக்கம் (வட ஆர்க்காடு மாவட்டம்).

மேலும், நொய்யல் நீர்த்தேக்கம் (கோவை மாவட்டம்) ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கம் (வட ஆர்க்காடு மாவட்டம்), பாலாறு நீர்த்தேக்கம் (திருச்சி மாவட்டம்) கிருதமால் ஆற்றுக்கு நீர் வழங்கு கால்வாய் அமைக்கும் திட்டம் ஆகிய நான்கின் பரிசீலனையும் விரைவில் முடிந்துவிடும்.

நீராறு வாயிலாகக் கிடைக்கும் தண்ணீரைப் பயன்படுத்திப் பரம்பிக்குளம், ஆளியாறு திட்ட ஆயக்கட்டுப் பகுதி மேலும் 89,000 ஏக்கர் அளவுக்கு விரிவாக்கப்படும். தற்போது ஆயக்கட்டாக உள்ள பகுதிகளுக்குத் தரப்படுவது போல், புதிய பகுதிகளிலும் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை தண்ணீர் மாற்றி வழங்கப்படும். புதிய ஆயக்கட்டுப் பகுதிகள், பொள்ளாச்சி வட்டத்தில் 24,000 ஏக்கர்; உடுமலைப் பேட்டை வட்டத்தில் 25,000 ஏக்கர்; பல்லடம் வட்டத்தில் 15,800 ஏக்கர்; தாராபுரம் வட்டத்தில் 24,000 ஏக்கர் என்ற அளவில் அமையும். இதற்கான கால்வாய்களை வெட்டும் வேலைகள், வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலையளிப்பதற்காகவும், அடுத்த பருவத்தில் தண்ணீர் விடுவதற்கு வசதியாகவும் உடனடியாகத் தொடங்கப்படும்.

சிறுபாசனச் சிறப்புத் திட்டத்திற்கு 1975-76 ஆம் ஆண்டில் 3.5 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம். இத்துடன், விரைவுப்படுத்தப்பட்ட சிறுபாசனத் திட்டம், தூரெடுத்துச் சீரமைக்கும் திட்டம் இவற்றுக்காக மொத்தம் 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் முதன் முறையாக எடுத்துக் கொள்ளப்பட்ட ''பழைய ஜமீன் ஏரிகளைச் சீரமைக்கும் திட்டம்'' 25 இலட்ச ரூபாய் செலவில் அடுத்த ஆண்டும் தொடர்ந்து நடத்தப்படும். வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் பாசனத் திட்டங்கள் பல எடுத்துக் கொள்ளப்படும். அடுத்த 6 முதல் 7 மாதங்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் வகையில் அவை விரைவுப்படுத்தப்படும். பாசனத்திற்காகச் செய்யப்பட்டுள்ள ஒதுக்கீடுகளிலிருந்து 1974-75 ஆம் ஆண்டில் சுமார் 5.5 கோடி ரூபாயும், 1975-76ஆம் ஆண்டில் 12 கோடி ரூபாயும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில், செலவிடப்படும் என்றும் எதிர்பார்க்கிறோம்.

## மின்சக்தி

நமது மாநிலத்தின் மின் சக்தி உற்பத்தித் திறனை 2,254 மெகாவாட், இந்தியாவின் வேறு எந்த மாநிலத்தைக் காட்டிலும் அதிகமானது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். 1975-76 ஆம் ஆண்டில், 110 மெகாவாட் திறன் கொண்ட மற்றொரு பிரிவு எண்ணூர் அனல் மின் நிலையத்தில் அமைக்கப்படும். நீலகிரி மாவட்டத்தில் உள்ள நடு வட்டம் நீரைத் திருப்பிவிடும் திட்டமும், வரும் ஆண்டில் முடிக்கப்பட்டுவிடும். இந்தத் திட்டத்தினால் ஆண்டு ஒன்றுக்குக் கூடுதலாக 6.9 கோடி யூனிட் மின்சாரம் கிடைக்கும். குந்தா நான்காம் நிலை (110 மெகாவாட்), சுருளியாறு (35 மெகாவாட்). தூத்துக்குடி அனல் மின் நிலையம் (400 மெகாவாட்) இவற்றிற்கான பணிகள் நடந்தேறி வருகின்றன. குந்தா நான்காம் நிலைத்திட்டம் 1976-77—ஆம் ஆண்டிலும், சுருளியாறு திட்டம், தூத்துக்குடி மின்நிலைய முதல் இயந்திரம், இவை இரண்டும் 1978-79-ஆம் ஆண்டிலும் செயல்படத் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பாரத் கனரக மின்சார நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் எண்ணூர் அனல் மின் நிலையத்தின் திறனளவைப் பயன்படுத்துவதை (Capacity Utilisation) அதிகப்படுத்துவதற்கான திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது, எண்ணூரிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவை இரட்டிப்பாக்க, அடுத்த சில மாதங்களில் நாம் மேற்கொள்ளும் பெரு முயற்சியாக இருக்கும்.

## தொழில்கள்

சமதர்ம சமுதாயம் அமைக்கும் முயற்சிகளுக்கு, பொதுத் துறையின் வளர்ச்சியே உறுதுணையாக விளங்கும் என்பது நமது கொள்கையாகும். தனியார் துறை முயற்சிகள் தக்க கட்டுப்பாட்டில் இருக்கும் வகையில் கூட்டுத் துறையில் பல புதிய தொழில் முயற்சிகளையும் நாம் தொடங்கியுள்ளோம். பொருளாதாரச் சக்தி குவிந்துவிடாமல், பரவலாகும் வண்ணம், கூட்டுறவுத் துறையும், சிறு தொழில்களும் நன்கு வளர்வது அவசியம் என்பதும் நமது கருத்தாகும்.


நமது மாநிலத்தில், பெரிய, நடுத்தரத் தொழில்களின் மேம்பாட்டுக்குத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO) முதன்மையான நிறுவனமாக இலங்குகிறது.

இந்த நிறுவனம், கடந்த நான்கு ஆண்டுகளில் 37 திட்டங்களைத் தொடங்க முயற்சி எடுத்துள்ளது. இவை, பெட்ரோலிய இரசாயனம், மருந்தாக்கவியல், இரசாயனம், பொறியியல் மற்றும் பிற தொழில்களில் நமது தொழிலமைப்பில் இருக்கின்ற குறைவுகளை நிறைவு செய்வதற்காகத் தீட்டப்பட்டவை. இந்தத் திட்டங்களுக்கான மொத்த மூலதனச் செலவு ரூ. 340 கோடியாகும். மொத்தம் 17,000 பேர்களுக்கு, இவற்றல் நேரடியாக வேலை வாய்ப்பு ஏற்படும். இத்துடன் பல்லாயிரக்கணக்கானோர் மறைமுகமாகப் பயனடைவர். இவற்றுள், உரம், இரசாயனப் பொருட்கள், உப்பு, தொலைக்காட்சி (Television), சிகரெட்டு, நிக்கல்-காட்மியம் மின்கலங்கள் (Nickel Cadmium Cells) கனமான வார்ப்படங்கள் ஆகிய இவற்றை உற்பத்தி செய்யும் ஒன்பது கூட்டுத் துறைத் திட்டங்கள் 1975-76—ல் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றில் எல்லாம் முக்கியமானது மாநில அரசின் கூட்டுத் துறையில் 90 கோடி ரூபாய் முதலீடு செய்து தூத்துக்குடியில் மேற்கொள்ளப்பட்டு வரும், இந்தியாவிலேயே பெரிய உரத்தொழிற்சாலைத் திட்டமாகும். இந்தத் தொழிற்சாலை விரைவில் உற்பத்தியைத் தொடங்கிவிடும். மத்திய அரசின் ஒதுக்கீட்டு முறைப்படி, தூத்துக்குடி உரத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் உரத்தில் 60 சதவீதம் தமிழ்நாட்டில் பங்கீடு செய்யப்படும்.

நொடித்த நிலையில் இருந்து அரசால் ஏற்று நடத்தப்பட்டு வரும் சக்தி பைப்ஸ் (Sakthi Pipes), லாஸ்கோ ஸ்டீல்ஸ் (Lasco Alloy Steels) டெக்ஸ்டூல்ஸ் (Textools) ஸதர்ன் ஸ்ட்ரக்சரல்ஸ் (Southern Structurals) ஆகிய நான்கு நிறுவனங்களை அரசுடைமை ஆக்கும் நோக்கத்தைச் சென்ற நிதிநிலை அறிக்கையின் போது வெளியிட்டேன். இதற்கான சட்ட வரைவுகள் மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு விட்டன. மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்தவுடன், இந்த நான்கு நிறுவனங்களும், அவையின் ஒப்புதல் பெற்று நாட்டுடைமையாக்கப்படும்.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (SIDCO) ஒரு கோடி ரூபாய் மொத்தச் செலவில், 100 தொழிற்கூடங்கள் அமைப்பதற்கான திட்டத்தை 1975-76—ஆம் ஆண்டில் மேற்கொள்ளும். இதற்காக, வரவு-செலவுத் திட்டத்தில், அரசின் பங்காக, 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சிறுதொழில் கழகம் (TANSI), இந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் நிறுவனத்தின் உடனுழைப்புடன், இயந்திரக் கருவிகள் தயாரிப்புத் திட்டத்தையும், (Mopeds) மோபெட்ஸ் உற்பத்தித் திட்டத்தையும் வரும் ஆண்டில் மேற்கொள்ளும். தமிழ்நாடு தொழில் ஊக்கக் கழகம் (SIPCOT) பல்வேறு திட்டங்களின் கீழ் 9.8 கோடி ரூபாய் வரையில் தொழில்களுக்கு உதவி அளித்துள்ளதன் மூலம், 12,800 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பு ஏற்படுத்தியதுடன் மொத்தம் 73 கோடி ரூபாய் முதலீட்டிற்கும் வழி செய்துள்ளது. இக்கழகம் இராணிப்பேட்டை தொழில் தொகுதியின் மேம்பாட்டுப் பணியை முடித்து வருகிறது. மேலும் ஒசூரிலும் மானமதுரையிலும் உள்ள தொழில் தொகுதிகளின் மேம்பாட்டுப் பணியை இக்கழகம் மேற்கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் சர்க்கரைத் தொழில் மேம்பாட்டில் நாம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளோம். நடப்பாண்டில், வேலூர், திருப்பத்தூர், கோவை ஆகிய இடங்களில் புதிதாக அமைக்கப்பட இருக்கின்ற மூன்று சர்க்கரை ஆலைகளுக்காக, மொத்தம் 11 கோடி ரூபாய் செலவில் தளவாடங்கள், இயந்திரங்கள் தருவிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் 14 கோடி ரூபாய் செலவில் விரிவாக்கத் திட்டங்களையும் நமது கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மேற்கொண்டுள்ளன. நமது மாநிலத்தில் இனி அமைய இருக்கும் சர்க்கரை ஆலைகள், பொதுத் துறையில் கரும்பு உற்பத்தியாளர்களைப் பங்குதாரர்களாகச் சேர்த்துக் கொண்டு தொடங்கப்படும் என்ற அரசின் கொள்கை முடிவினைச் சென்ற ஆண்டு அறிவித்திருந்தேன். இதற்கேற்ப, ஐந்து புதிய சர்க்கரை ஆலைகளை நிறுவுவதற்கு விரைவிலேயே மத்திய அரசின் அனுமதி கிடைக்கும் என நம்புகிறேம். 1973-74—ஆம் சர்க்கரை ஆண்டில் (1973 அக்டோபர் முதல் 1974 செப்டம்பர் முடிய) தமிழ்நாட்டில் சர்க்கரை உற்




பத்தி 4.43 இலட்சம் டன் என்னும் உயர்ந்த அளவை எய்தியுள்ளது மனநிறைவு அளிக்கக்கூடிய ஒன்ருகும். இது, கடந்த ஆண்டைவிட 34 சத வீதம் அதிகமாகும். கரும்பு உற்பத்தி செய்யும் உழவர்களுக்கு ஊக்கமளிப்பதற்காக மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலைகளுக்குக் கூடுதலாக நமது மாநிலத்தில் சர்க்கரை ஆலைகள் கரும்புக்கு விலை தரவும் வழி வகுத்துள்ளோம்.

பொதுவாகப் பஞ்சாலைத் தொழிலில் நிலவும் மந்தப் போக்கும், பரவலான விலையேற்றமும் சேர்ந்ததால் கைத்தறித் துணி விற்பனை குறைந்து தேக்கநிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையைத் தவிர்க்க அரசு, தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி மூலமாகக் கைத்தறித் துறைக்கு மூன்று கோடி ரூபாய் வழிவகை முன்பணம் வழங்க ஏற்பாடு செய்துள்ளது. மேலும் மூன்று கோடி ரூபாய் நிதி உதவியளிக்குமாறு மத்திய அரசையும் கேட்டுள்ளோம்; மத்திய அரசின் இசைவு, கூடிய விரைவில் கிடைக்குமென்று நம்புகின்றேன்.

### கல்வி

வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கங்களில் கல்வித் துறை தொடர்ந்து தலையாய இடத்தை வகித்து வருகிறது. கடந்த எட்டு ஆண்டுகளில் கல்விப் பணிகளுக்கான செலவு 44 கோடி ரூபாயிலிருந்து 118 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இத்துடன், பள்ளிக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காகப் பல்வேறு முயற்சிகளையும் நாம் தொடர்ந்து மேற்கொண்டு வந்துள்ளோம். நிதி வசதி குறைவாக உள்ள நகராட்சிகள் நடத்தி வரும் 19 உயர்நிலைப் பள்ளிகள் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. 1975-76—ல் மேலும் ஐந்து உயர்நிலைப் பள்ளிகள் எடுத்துக் கொள்ளப்படும். உயர்நிலைப்பள்ளிகளைப்பொதுக்

கல்வியுடன் தொழிற்கல்வி, வணிகக் கல்வி எனப் பல்வகைப் பயிற்சி உயர்நிலைப்பள்ளிகளாக மாற்றும்திட்டம் மேலும் விரிவு படுத்தப்படும். இதற்காக, வரவு-செலவுத் திட்டத்தில் 14 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய 2,000 ஆசிரியர்கள் வரும் ஆண்டில் பள்ளிகளில் கூடுதலாக நியமிக்கப்படுவர். நடப்பாண்டில் மதிய உணவுத் திட்டத்திற்கு அரசு அளிக்கும் உதவித் தொகை, ஒரு மாணவருக்கு நாள் ஒன்றுக்கு ஆறு காசு என்பதிலிருந்து பத்துக் காசாக உயர்த்தப்பட்டுள்ளதை உறுப்பினர்கள் அறிவார்கள். இதற்காக வரவு-செலவுத் திட்டத்தில், மொத்தம் 4.5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த எட்டு ஆண்டுகளில், கலைக் கல்லூரிகளின் எண்ணிக்கை 105-லிருந்து 183 ஆக உயர்ந்துள்ளது; கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் எண்ணிக்கையும் 94,000-த்திலிருந்து இரண்டு இலட்சம் அளவுக்கு உயர்ந்துள்ளது. கிண்டியிலுள்ள பொறியியல் கல்லூரியைத் தரமுயர்த்தி, சென்னையில் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஒன்றை அமைத்து, ஏனைய சில தொழில் நுட்பக் கல்வி நிலையங்களை இப் பல்கலைக் கழகத்தின் ஆளுகைக்குக் கொண்டுவரும் திட்டத்தை அண்மையில் பல்கலைக் கழக மானியக் குழு, கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளதை இந்த அவையினருக்குப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மொழி வளர்ச்சியும் வரலாற்றுப் பாதுகாப்பும்


தமிழ் இலக்கியம், வரலாறு, கலை, பண்பாடு அனைத்தையும் மங்காது மறையாது காப்பாற்றித் தமிழ் மரபின் கீர்த்தியைத் தரணி முழுவதும் பரப்பிடுகின்ற பெரும் பணியினையும் இந்த அரசு மேற்கொண்டிருப்பதற்கு எடுத்துக் காட்டாகத்தான், எழில் மிகுந்த பூம்புகார்க் கலைக்கூடமும், ஏற்றமிகு பாஞ்சாலங்குறிச்சிக்கட்டபொம்மன் கோட்டையும் விளங்குகின்றன. வள்ளுவர் கோட்டம் சென்னைத் திருநகரில் வளரத் தொடங்கியுள்ளது.

அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், 'அகர முதலி' தயாரிக்கும் அரும் பெரும் முயற்சி, இவைபோன்ற தமிழ்ப் பணிகளுக்காக 76.82 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சிற்பக் கலையை வளர்க்கவும், நூற்றுக் கணக்கான சிற்பவேலைத் தொழிலாளர்களைப் பாதுகாக்கவும் திட்டங்கள் வகுக்கப்படுவதோடு, மாமல்லபுரத்தில் உள்ள பயிற்சி நிலையத்தில், வரும் ஆண்டில் கூடுதலாகப் புதிய பாட முறைகள் கொண்டு வரப்படும்.

மதுரை திருமலை நாயக்கர் மகால், வரும் ஆண்டில் ஓர் அரும்பொருட்காட்சிக் கூடமாக மாற்றப்படும். காரைக்குடியில் தமிழ்த்தாய்க் கோயில் ஒன்று எழுப்பும் முயற்சிக்கு அரசு, நிதி உதவி செய்யவும் முடிவெடுத்துள்ளது.

### மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள்

கடந்த எட்டாண்டுகளில் 18 மருத்துவ மனைகளையும் 22 மருந்தகங்களையும், 194 தொடக்க சுகாதார நிலையங்களையும் புதிதாகத் துவங்கி




யுள்ளோம். 2,185 கூடுதல் படுக்கை வசதிகளை உருவாக்கியதுடன், 2,396 மருத்துவர்களையும் 1,912 செவிலியர்களையும் கூடுதலாக அரசு மருத்துவ நிலையங்களில் இதே எட்டு ஆண்டுக் காலத்தில் நியமித்துள்ளோம். மாவட்ட, வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கையைத் தொடர்ந்து அதிகரிப்பதும், அத்துடன் அந்த மருத்துவ மனைகளில் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சையின் தரத்தை மேம்படுத்துவதும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் முக்கிய நோக்கங்களாக இருக்கும். இதற்கேற்ப, 1975-76 ல் மேலும் 123 மருத்துவர்களையும், 155 செவிலியர்களையும் பல்வேறு மருத்துவ மனைகளில் நியமிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

1972 சூன் திங்களில் தொடங்கப்பட்ட கண்ணொளி வழங்கும் திட்டம் முழுவெற்றியடைந்துள்ளது. மொத்தம் 6.36 இலட்சம் பேர்கள் பயன் பெற்றுள்ள இத்திட்டத்தின் கீழ், இந்நாள் வரை 89,500 பேருக்கு இலவச அறுவைச் சிகிச்சைகள் 219 முகாம்களில் நடத்தப்பட்டு மூக்குக் கண்ணாடிகளும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இதற்கான சிறப்பு நிதிக்கு வந்த 55 இலட்சம் ரூபாய், நடப்பு ஆண்டில் முற்றிலும் செலவாகிவிடும். வரவு-செலவுத் திட்டத்தில் 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்வதன் மூலம், இத்திட்டம் 1975-76ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

கிராம மக்களின் மருத்துவத் தேவையை மனத்திற் கொண்டு 100 தொடக்க சுகாதார நிலையங்களில், ஒவ்வொன்றிலும், மூன்றாவது மருத்துவ அதிகாரி பதவி ஒன்று கூடுதலாக ஏற்படுத்தப்படும். இருபது தொடக்க சுகாதார நிலையங்களில், சிறு குழந்தைகளுக்கு முத்தடுப்பு ஊசி போடுவது செயற்படுத்தப்படும். வட்ட மருத்துவ மனைகள் பதினாறில், முன்னாள் படை வீரர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் 12 படுக்கை வசதிகள் கொண்ட வார்டுகள் கட்டப்படும். வட்ட மருத்துவ மனைகளில் நான்கில், பல் சிகிச்சைப் பிரிவுகள் நிறுவப்படும்; 15 இடங்களில் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்படும். உணவு கலப்படங்களைக் கண்டு பிடிக்க உதவும் ஆய்வுக் கூடங்கள் பாளையங்கோட்டை, சேலம் ஆகிய இடங்களில் நிறுவப்படும்.

நடப்பாண்டில் 1974 டிசம்பர் வரையில், 1,11,000 பேருக்குக் குடும்பநல அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன. குடும்ப நலத்திட்டம் தொடங்கப்பட்டது முதல் மொத்தம் 18 இலட்சம் பேருக்குக் குடும்ப நல அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன. ஒவ்வொரு குடும்பநல அறுவைச் சிகிச்சைக்காகவும் மத்திய அரசு, ஊக்கத் தொகையாக சராசரியில் நமக்கு 60 ரூபாய் மட்டும் அளிக்கும் போது, நாம் 100 ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கி வருகிறோம். நமது திட்டங்களின் முழுப் பயனை எய்துவதற்கு அடிப்படையாக அமைவது, குடும்பநலத் திட்டம் தான் என்பதை உணர்ந்துள்ள மத்திய அரசு, மாநில அரசுக்கு ஊக்கமளிக்கும் வகையில், நாம் இந்தத் திட்டத்திற்காக அதிகமாகச் செலவழிக்கும் தொகை

யையும் ஈடுகட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

## தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் நலன்

தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவதைத்தன் தலையாய கடமையாகக் கொண்டுள்ள இந்த அரசு, 1975-76 ஆம் ஆண்டு, 16.69 கோடி ரூபாய் இதற்கென ஒதுக்கியுள்ளது. அதன் விவரம் வருமாறு:

| | திட்டச் செலவில் சேராத மாநில அரசின் நிதி ஒதுக்கம் | திட்டச் செலவில் மாநில அரசின் நிதி ஒதுக்கம் | மத்திய அரசு பொறுப் பேற்கும் செலவு | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (கோடி ரூபாய்களில்) | | |
| தாழ்த்தப்பட்டோர் நலன் | 6.41 | 3.97 | 0.50 | 10.88 |
| பிற்படுத்தப்பட்டோர் நலன் | 5.17 | 0.64 | .. | 5.81 |
| மொத்தம் | 11.58 | 4.61 | 0.50 | 16.69 |

தற்போது, நமது மாநிலத்தில் 555 தாழ்த்தப்பட்டோர் மாணவரில்லங்களும், 231 பிற்படுத்தப்பட்டோர் மாணவரில்லங்களும் செயல்பட்டு வருகின்றன. 1975-76ஆம் ஆண்டில் தாழ்த்தப்பட்டவர்களுக்காக 20 புதிய மாணவர் இல்லங்களையும், பிற்படுத்தப்பட்டவர்களுக்காக 20 புதிய மாணவர் இல்லங்களையும் தொடங்குவதற்கான 8.54 இலட்சம் ரூபாய் மேற் குறிப்பிட்ட நிதி ஒதுக்கங்களில் அடங்குகிறது. தாழ்த்தப்பட்டோர் மேம்பாடு வீட்டு வசதி நிறுவனம், தாழ்த்தப்பட்டோருக்காகக் கிராமப் பகுதிகளில் ஒரு இலட்சம் வீடுகளைக் கட்டி முடிக்கும் பெரும் பணியில் ஈடுபட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நடப்பாண்டின் இறுதிக்குள் 15,000 வீடுகள் கட்டி முடிக்கப்படும். இதற்காக நாம் ஏற்கெனவே 3.5 கோடி ரூபாய்க்கு மேலாகச் செலவிட்டுள்ளோம். வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் நேரடியாக நிதி ஒதுக்கியும், நிதி நிறுவனங்களிடமிருந்து உதவி பெற்றும், இத்திட்டம் வரும் ஆண்டிலும் முனைப்பாக நிறைவேற்றப்படும். இந்த நிறுவனம் அரிசனக் குடியிருப்புகளில், 50 குழந்தைகள் காப்பகக் கட்டிடங்களை நடப்பாண்டில் கட்டி முடிக்கும். மேலும் இந்த நிறுவனம், வரும் ஆண்டில் 100 தாழ்த்தப்பட்ட மாணவர் இல்லங்களையும் 50 பிற்படுத்தப்பட்ட மாணவர் இல்லங்களையும் கட்டும் திட்டத்தைச் செயல்படுத்தும், தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் பிற்படுத்தப் பட்ட வகுப்பு மாணவர்கள் ஆகியோரது படிப்புதவிச் சம்பளங்களுக்காகவும் உணவு செலவு மானியங்களுக்காகவும் 1975-76 ல் மொத்தம் 6.56 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்டோருக்கு நடப்பாண்டில் வீட்டு மனைகளைக் கையகப்படுத்தி ஒப்படை செய்வதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்க, இதற்கென 48.5 இலட்சம் ரூபாய் திருத்த நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1975-76-இல் முதல் கட்டமாக இதற்கான நிதி ஒதுக்கம் 25 இலட்சம் ரூபாயாகும். தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளில் மின் வசதி செய்து கொடுப்பதற்காக 1975—76-இல் நாம் 82 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளோம். மொத்தம் சுமார் 25,000 குடியிருப்புகளில் 24,000 குடியிருப்புகளுக்கு 1974 டிசம்பர் இறுதிக்குள் மின் வசதி வழங்கப்பட்டுள்ளது. நமது கிராமப் பகுதிகளில் உள்ள தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளிலிருந்து இடுகாடுகளுக்குச் செல்வதற்குச் சரியான பாதைகள் இல்லை என்பது நீண்ட காலமாக உணரப்பட்டு வரும் அவசியத் தேவையாகும். சமூக நிலையில் காணப்படுகிற இந்தக் குறைபாட்டை நீக்குவதற்காக நடைமுறையில் உள்ள திட்டங்களின் கீழ் இதற்கென எடுக்கப்படும் நடவடிக்கைகளுடன், 1975-76-இல் 30 இலட்சம் ரூபாய் செலவில் அத்தகைய பாதைகளைப் போடுவதற்கான சிறப்புத் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளோம். முதல் நிலையில், நிலம் உடனடியாகக் கிடைக்கும் 6,800 கிராமங்களில் இப்பணி மேற்கொள்ளப்படும்.

### குடிசைப் பகுதிகளை மாற்றுதல்

1970-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், இது வரையில் 15,102 குடியிருப்புகளைக் கட்டியுள்ளது. இந்த வாரியம் 1975-76-ஆம் ஆண்டில், வரவு—செலவுத் திட்டத்திலிருந்தும், வீட்டுவசதி — நகர்ப்பகுதி மேம்பாட்டுக் கழகத்திடமிருந்தும் நிதி உதவி பெற்று மொத்தம் 3.5 கோடி ரூபாய் செலவிடும். இத்துடன், சென்னை மாநகரில் உள்ள குடிசைப் பகுதிகளின் சுற்றுப்புற மேம்பாட்டுக்கான பல்வேறு திட்டங்கள் குறித்து 45 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். மற்ற நகரங்களில் உள்ள குடிசைப் பகுதிகளில், வீட்டு வசதி வாரியம், வரும் ஆண்டில் மேலும் 40 இலட்சம் ரூபாய் செலவிடும். குடிசைப் பகுதிகளை மாற்றி அவற்றை மேம்படுத்துவதற்காக இந்திய அரசிடமிருந்து நிதி உதவி கிடைக்காத நிலையில், நமது நிதிப் பற்றுக்குறைக்கிடையே, இத்திட்டத்தைக் குன்றா ஊக்கத்துடன்நாம்தொடர்ந்து செயற்படுத்தி வருகிறோம்.

### சாலைகள்

1975—76-ஆம் ஆண்டில், சாலைகள் அமைக்கவும் அவற்

றைப் பராமரிக்கவும் நாம் மொத்தம் 28.74 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம். ஆயிரத்து ஐந்நூறுக்குக் குறையாத மக்கள்தொகைகொண்ட கிராமங்களை அடுத்துள்ள பெரிய சாலைகளுடன் இணைக்க, தார் போடப்பட்ட சாலைகள் அமைக்கும் திட்டமும், ஆயிரத்து ஐந்நூறுக்குக் குறைந்த மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கும் திட்டமும், நாம் மேற்கொண்டுள்ள இரு பெரும் திட்டங்களாகும். இவற்றுக்கென நடப்பாண்டிலும், வரும் ஆண்டிலுமாக மொத்தம் 7.5 கோடி ரூபாய் செலவிடப்படும். சாலைப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டில், உள்ளூர் சாலைகளின் மேம்பாடு, பராமரிப்புக்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்படும் 2.19 கோடி ரூபாய் மானியமும் அடங்கும். இத்துடன், இணைப்புச் சாலைகள் திட்டத்தின்கீழ் நாம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு 75 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளோம். சர்க்கரை ஆலைகளைச் சுற்றிலும் கரும்பு பயிரிடப்படுகின்ற பகுதிகளில் சாலைகள் அமைப்பதற்காக 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில், சாலைத் திட்டங்களும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும்.

திருச்சியிலும், பவானியிலும் காவிரிமீது கட்டப்பட்டுவரும் பாலங்கள், வேலூரில் கட்டப்பட்டு வரும் பாலாற்றுப்பாலம், புதிதாக அமைக்கப்பட்டு வரும் பழனி--கோடைக்கானல் சாலை ஆகியவை 1975—76-இல் முடிவு பெற இருக்கும் முக்கியமான பணிகளாகும்.

மாநிலம் முழுவதிலும் நடைபெறும் பயணிகள் போக்குவரத்தை நாட்டுடைமை ஆக்குவது என்ற நமது கொள்கை முடிவினையொட்டி, மொத்தம் உள்ள 9,938 பேருந்துகளில், 4,804 பேருந்துகளை நாட்டுடைமையாக்கியுள்ளோம். மாநில அரசு உச்ச நீதி மன்றத்தில் செய்துள்ள மேல் முறையீட்டின்மீது முடிவு தெரிவிக்கப்பட்ட பிறகே, நாட்டுடைமையாக்கும் பணியை விரைவுபடுத்த இயலும். நன்முறையில், சிக்கனமாக இயங்கும் சாலைப் போக்குவரத்து வசதிகளை உருவாக்குவதற்காக, ஆம்னி பஸ் என்று அழைக்கப்படும் ஒப்பந்தப் பேருந்துகள் (Contract Carriages) அனைத்தையும் நாட்டுடைமையாக்குவது என்ற முடிவினை அரசு எடுத்து உள்ளது. இதற்காக திட்டமும் வெளியிடப்பட்டுள்ளது.

## குடிநீர் வசதி

மாநில முழுவதிலும் குடிநீர் வழங்கு திட்டம், கழிவுநீர் அகற்று திட்டம் ஆகியவற்றை ஆய்வு செய்து அவற்றை நிறைவேற்றுவதற்காக 1970-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்குக் கடன்கள், மானியங்கள் கொடுப்பதற்காக 1975—76 வரவு—செலவுத் திட்டத்தில் 10.32 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு உள்ளது. இத்துடன், இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் ஐந்து கோடி ரூபாய் கடனுதவி அளிக்கும். தூத்துக்குடியில் உள்ள தொழில் அமைப்புகளுக்கு 4.7 கோடி ரூபாய் செலவில், நாளொன்றுக்கு இரண்டு கோடி காலன் நீர் வழங்கும் திட்டத்தை இவ்வாரியம் கூடிய விரைவில் நிறைவேற்றி முடித்துவிடும். சிறுவாணியிலிருந்து கோவை நகருக்கு நீர் வழங்கும் திட்டப் பணி தொடங்கப்பட்டுள்ளது. 1.71 கோடி ரூபாய் செலவில் கோவை நகருக்கு நாள் ஒன்றுக்கு மேலும் 30 இலட்சம் காலன் நீர் வழங்கும் உடனடித் திட்டத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் முதற் கட்டம் நிறைவேற்றப்பட்டு பயன் தந்து உள்ளது. இத் திட்டம் 1975-இல் நிறைவேற்றி முடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. வீராணம் திட்டத்திற்காக 1974-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய 14.85 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இத் திட்டத்திற்காக 7:7 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் வீராணம் திட்டத்திற்காகப் போடப்பட்டுள்ள குழாய்களைப் பயன்படுத்தி, பாலாற்றுப் படுகையிலிருந்து சென்னை மாநகருக்கு நீர் கொண்டு வரும் திட்டம் ஒன்றுக்கும் அனுமதி வழங்கியுள்ளோம். இத் திட்டத்திற்கு மொத்தம் 1.12 கோடி ரூபாய் செலவாகும். இத் திட்டத்தினால் சென்னை மாநகருக்கு நாள் ஒன்றுக்கு 30 இலட்சம் காலன் நீர் கூடுதலாகக் கிடைக்கும்.


மேலும் இந்த வாரியம் நடப்பு நிதி ஆண்டில் குடிநீர் பற்றுக்குறையாகவுள்ள 646 கிராமங்களுக்கும், நரம்புச் சிலந்தி முதலான நோய்கள் பரவியுள்ள 1,041 கிராமங்களுக்கும் குடி நீர் வழங்க ஏற்பாடு செய்யும். வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் வழங்கும் பணிகளை நடப்பாண்டில் மேற்கொள்வதற்காக வாரியத்திற்கு 2 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. கிராமப் பகுதிகளில் குடிநீர் வழங்குவதற்காக, வரும் ஆண்டில் 3.25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துடன், ''யூனிசெஃப்'' நிறுவனத்தின் உதவியோடு 1,500 துளைக் கிணறுகள் தோண்டப்படும். 1975—76-இல் கிராமங்களுக்குக் குடி நீர் வழங்குவதற்காக ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செலவிடப்படும் 1.9 கோடி ரூபாய்க்குக் கூடுதலாக இந்த நிதி ஒதுக்கங்கள் செய்யப்பட்டுள்ளன. கிராமங்களுக்குக்குடிநீர்வழங்குவதற்குச் செய்யப்பட்டுள்ள பல்வேறு நிதி ஒதுக்கங்களிலிருந்து, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நடப்பாண்டிலும், வரும் ஆண்டிலும் மொத்தமாக 6.25 கோடி ரூபாய் செலவிடப்படத் திட்டமிடப்பட்டு உள்ளது.




## சமூக நலன்

சமுதாயத்தின் அடித்தளத்து மக்களுக்கான பல்வேறு சமூக நல நடவடிக்கைகளை நமது அரசு அனைவரும் பாராட்டத் தக்க வகையில் நிறைவேற்றி வருகிறது. தொழுநோய் பிச்சைக்காரர்களுக்குப் புது வாழ்வு அளிப்பது, கண்ணொளி வழங்கும் முகாம்களைப் பரவலாக அமைப்பது, கை ரிக்ஷாக்களை நீக்கிவிட்டு சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்குவது, உடல் ஊனமுற்றோர்க்கு நல்வாழ்வு தருவது, ஆகிய அரிய திட்டங்களின் வாயிலாக நமது அரசு இந்தியாவிலேயே சமூகப் பணியில் முன்னணியில் நிற்கிறது. இந்த நல்ல நோக்கத்திற்கும், செம்மையான செயல் முறைக்

கும், பொது மக்களின் முழு ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைத்துள்ளன. இத் திட்டங்களுக்காகப் பொது மக்கள், மொத்தம் 3.13 கோடி ரூபாய் அளவுக்கு நன்கொடைகள் வழங்கியுள்ளனர். இந்த நன்கொடைகள் நிதித் துறையின் பொறுப்பில் நிர்வகிக்கப்பட்டு, செலவுகள் அரசின் மற்றச் செலவுகளை ஒப்பவே கணக்கு வைக்கப்பட்டு வருகின்றன. திக்கற்ற இளம்சிறார்களுக்கும் ஆதரவற்ற விதவைகளுக்குமாகப் புதிய திட்டம் ஒன்றை 1975-ஆம் ஆண்டில் மேற்கொள்ளவிருக்கிறோம். இத் திட்டம் குறித்த விவரங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. வரவு—செலவுத் திட்டத்தில் கண்டுள்ள முக்கியமானதொரு புதிய திட்டம், தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் ஆதாயமுள்ள வகையில் வேலைக்கமர்த்தப்படுவதற்காக அவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள இல்லங்களில் நிலம் பண்படுத்தல், பாசனக் கிணறுகள் அமைத்தல் போன்ற பல்வேறு வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்துவதாகும்.




சமுதாயத்தில் மிக வறிய நிலையில் உள்ளவர்களின் பிரச்சினைகளைப் பொது மக்களின் நாட்டத்திற்குக்கொண்டுவந்து அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்க வழி செய்வதே இத் திட்டங்களின் நோக்கமாகும். மக்களின் ஆதரவோடு, ஒவ்வோர் ஆண்டும் தொடங்கப்படும் திட்டங்களுக்குத் தேவைப்படும் தொடர் செலவை ஏற்றுக்கொண்டு, இந்தச் சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான வசதிகளை விரிவுபடுத்துவதை, அரசு தன் பொறுப்பாக மேற்கொண்டு உள்ளது.

### புதுத் திட்டங்கள்

1970-ஆம் ஆண்டில் பல நகரங்களில்குடிசைகளை மாற்றி நல்ல வீடுகள் கட்டித் தரும் திட்டத்தையும், சென்ற ஆண்டு அரிசன வீட்டு வசதி மேம்பாட்டு வாரியத்தின் வாயிலாக கிராமங்களில் அரிசனங்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தரும் திட்டத்தையும் தொடங்கி, அடித்தளத்து மக்களின் வீட்டுத் தேவையைத் தொடர்ந்து நிறைவு செய்து வரும் இந்த அரசு, இந்த நிதிநிலை அறிக்கையில் மற்றுமொரு சமதர்மத் திட்டத்தை அறிவிப்பதில் பெருமை கொள்கிறது. கடலை நம்பி வாழ்ந்து கடுங்காற்றுக்கும் கடல் கொந்தளிப்புக்குமிடையே குடிசைகளில் பாதுகாப்பின்றி வாடும் மீனவப் பெருங்குடி மக்களுக்கான வீடுகள் கட்டித் தரும் திட்டத்தை அரிசன வீட்டு வசதித் திட்டத்தைப் போலவே தொடங்க இருக்கிறோம் என்பதையும், முதல் கட்டமாக இரண்டு கோடி ரூபாய் செலவில் 5,000 வீடுகள் கட்டும் திட்டம் 1975—76-இல் மேற்கொள்ளப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூக மேம்பாடு, சமூகநலன் ஆகியவற்றில் மெத்த ஆர்வம் காட்டிச் செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிற நமது அரசு, சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் எவ்வளவு தேவையானவை என்பதையும் உணர்ந்து அதற்கான சாதனைகளைப் புரிந்து வருகிறது. அரசு அலுவலாளர் குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தை நாம் 1974-ஆம் ஆண்டில் தொடங்கியது முதல், இதுவரை ஏறத்தாழ ஆயிரம் குடும்பங்கள், ஒவ்வொன்றும் பத்தாயிரம் ரூபாய் பாதுகாப்பு நிதியாகப் பெற்று, ஓரளவு ஆறுதலை அடைந்துள்ளது. அதேபோல், அரசு அலுவல்களில் இல்லாத பொது மக்களும் கூட சேர்ந்து பயன் பெறத்தக்க வகையில் சமூகப் பாதுகாப்புத் திட்டம் என்ற ஒரு பரவலான திட்டத்தையும் அறிமுகப்படுத்தி,நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

இதன் தொடர்பாக, கைத்தறி நெசவாளர்களுக்கு ''கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் சேமிப்புப் பாதுகாப்புத் திட்டம்'' ஒன்றைத் துவக்குகிறோம் என்பதைப் பெருமகிழ்வுடன் அறிவிக்க விரும்புகிறேன். இந்தத் திட்டம், ஆயுள் ஈட்டுறுதிக் கழக ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின் படி, கூட்டுறவுச் சங்க நெசவாளர் ஒவ்வொருவரும் தன் ஊதியத்தில் ரூபாய்க்கு ஆறு காசு என்ற வீதத்தில் பங்குத் தொகை வழங்குவார். அவர் செலுத்தும் தொகையை ஒட்டி அரசு, அவர் ஊதியத்தில் ரூபாய்க்கு மூன்று காசு என்ற வீதத்தில் உதவித் தொகை அளிக்கும்; கூட்டுறவுச் சங்கம் இதற்கெனத் தன் பங்குத் தொகையாக ஏதும் தரவேண்டியதில்லை. நெசவாளி ஒருவர் 55 வயது நிறைவெய்துவதற்கு முன் மரணமடைய நேரிட்டால் அவரது குடும்பத்துக்கு, அவர் செலுத்திய தொகையும், அரசு செலுத்திய உதவித் தொகையுமாக சேமிப்புப் பாதுகாப்பு நிதியில் அவர் கணக்கிலுள்ள தொகையுடன் அதற்குச் சமமான இன்னொரு மடங்குத் தொகையும் சேர்த்துத் தரப்படும். இஃதன்னியில், நிதியில் நெசவாளர் செலுத்திய பங்குத் தொகைக்கு வட்டியும் கொடுக்கப்படும். எடுத்துக்காட்டாக, 100 ரூபாய் மாத ஊதியம் பெறும் நெசவாளர் மாதா மாதம் தன் பங்காக ஆறு ரூபாய் செலுத்துவார்; அரசு மூன்று ரூபாய் கொடுக்கும். அவர் 20 ஆண்டிற்குப் பின் இறந்துவிட நேரிட்டால், அவர் செலுத்திய தொகைக்கு வட்டி கிடைப்பது அன்னியில், அவரது குடும்பத்துக்கு அவரும் அரசும் கட்டியுள்ள தொகையான 2,160 ரூபாயுடன், மேலும் 2,160 ரூபாய் சேர்த்து 4,320 ரூபாயாக வழங்கப்படும். இது போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை இந்தியாவிலேயே முதன் முதலாக நாம் தான் தொடங்கியிருக்கிறோம். நமது நன் முயற்சிக்கு ஆயுள் ஈட்டு உறுதிக் கழகமும் தனது ஒத்துழைப்பை நல்குவதற்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

### அரசு அலுவலர் நலன்

அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சி நிறுவன அலுவலர்கள் நலனில் நமது அரசு என்றுமே நாட்டம் செலுத்தி வந்துள்ளது. அவ்வப்போது பல்வேறு சலுகைகளை அவர்களுக்கு அரசு அளித்து வந்துள்ளதை உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

1975 பிப்ரவரித் திங்கள் முதல் நாளுக்கு முன்பு கொடுக்கப்பட்ட அகவிலைப்படியை, ஓய்வு ஊதியத்தைக் கணக்கிடும் போது ஊதியத்துடன் சேர்த்து கணக்கிட வேண்டும் என்று நாம் அண்மையில் எடுத்த

முடிவின் பயனாக ஓய்வு பெறும் அலுவலர்களுக்குக்கூடுதலாகப் பலன் கிட்டியுள்ளது. அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள் அனைவருக்கும் 1975 பிப்ரவரி முதல், கூடுதலாக ஐந்துரூபாய் அகவிலைப் படி அளித்திருக்கிறோம். முன்னூறு ரூபாய் வரை ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஏழு மாவட்டங்களில் அரசின் செலவிலேயே தற்போது ஓய்வூதியம் பண அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வருகிறது. இந்த முறை, மாநிலம் முழுவதிலும், வரும் ஆண்டில் 6 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவில் செயல்படுத்தப்படும்.

1974—75 வரவு—செலவுத் திட்டத்தில் அரசு அலுவலர்கள் வீடு கட்டும் கடன்களுக்காக ரூ. 75 இலட்சம் மட்டும் ஒதுக்கப்பட்டிருந்தது; அதை வரும் ஆண்டில்இரட்டிப்பாக்கி 150 இலட்சரூபாயாக உயர்த்தி இருக்கிறோம்.

சென்னை, மதுரை, கோவை ஆகிய பெரிய நகரங்களில் தற்போது உள்ள நகர ஈட்டுப்படி, 1975 ஏப்ரல் மாதம் முதல் திருச்சி, சேலம் நகரப் பகுதிகளுக்கும் 35 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும். இதனால் இந்தத் திட்டம் தமிழ்நாட்டின் பெரிய நகரங்கள் அனைத்திலும் செயல்படுத்தப்படும்.

கிராம அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் சிறப்பு ஊதியத்தை பிப்ரவரி மாதம் முதல் ஏழு ரூபாய் உயர்த்தியிருக்கிறோம். 1975 ஏப்ரல் மாதத்திலிருந்து குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தை 55 வயதுக்கு உட்பட்ட கிராம அலுவலர்களுக்குப்பொருந்தும் வகையில் விரிவுபடுத்த முடிவு செய்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது கிராம அலுவலர் பல்லாயிரக்கணக்கானவர்களுக்குப் பலனளிக்கும்.

வளர்ச்சிப் பணிகளுக்கு அவசியமாகத் தேவைப்படுகின்ற நிதி வசதிகளும், வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்கான தேவைகளும், மது விலக்குக் கொள்கையைச் செயல்படுத்துவதன் விளைவுகளுமாகச் சேர்ந்து நடப்பு ஆண்டிலும், வரும் ஆண்டிலும் குறிப்பிடத்தக்க அளவு வருவாய்க் கணக்கில் துண்டு விழச் செய்கின்றன. நாம் கூடுதல் நிதி வசதிகளைத் திரட்டமுயற்சிகள் பலமேற்கொண்டுள்ளோம் என்ற போதிலும், அவ்வாறு கூடுதலாக நிதி திரட்டும் முயற்சி மேற்கொள்வதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமில்லை. மேலும் அம் முயற்சிகளைத் தொடர்ந்து எடுத்துக் கொண்டேயிருப்பதும் எளிதல்ல. மத்திய அரசு அலுவலர்களது அளவுக்குத் தாங்களும், ஊதியங்களும் அகவிலைப் படிகளும் பெற வேண்டும் என மாநில அரசு அலுவலர் கோரி வருவதன் நியாயத்தையும் அவசியத்தையும் நாம் நன்கு உணர்ந்திருக்கிறோம். எனினும், மத்திய அரசு தனது அலுவலர்களது ஊதிய வீதங்களை மாநில அரசுகள் அளிப்பதற்கு ஒப்ப அமைப்பதில்லை, அல்லது, உள்ள வேறுபாடுகளைக் களைவதற்கு மாநில அரசுகளுக்கு நிதி உதவி அளிப்பதுமில்லை. இவ்வாறு பல்லாண்டுகளாக இருந்து வந்த இந்தப் பிரச்சினை, கூடுதல் அகவிலைப் படி, கூடுதல் ஊதிய முடக்கச் சட்டத்தினால் மேலும் சிக்கலாகியுள்ளது. இச் சட்டத்தைக் கைவிட வேண்டுமென்றும், அது இயலாவிட்டால் 500 ரூபாய் வரை ஊதியம் பெறுபவர்களுக்கேனும் இச் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்றும் மத்திய அரசை நாம் வேண்டினோம். இதைக் கூட ஏற்க இயலாது என்று மத்திய அரசு நமக்கு தெரிவித்து விட்டது.



அகவிலைப்படி குழுவின் பரிந்துரைகளையொட்டி ஆறு அகவிலைப்படி தவணைகளை அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சி நிறுவன அலுவலர்களது அகவிலைப்படியாக ஜனவரித் திங்களில் அரசு அறிவித்தது. அதன் பின்னர் மத்திய அரசு மூன்று தவணை அகவிலைப்படியினை அதன் அலுவலர்களுக்கு அளித்துள்ளதையும், நமது அரசு அலுவலர் சங்கங்களின் பிரதிநிதிகள் அண்மையில் அறிவிக்கப்பட்ட மாநில அரசின் அகவிலைப்படி உயர்வு போதுமானதாக இல்லை என என்னிடம் முறையிட்டதையும் கருத்தில் கொண்டு, ஜனவரியில் அறிவிக்கப்பட்ட அகவிலைப்படி வீதங்களைப் பின்வருமாறு மாற்றியமைக்க முடிவு செய்துள்ளோம்.

முந்நூறுரூபாய் வரை அடிப்படைச் சம்பளம் பெறுபவர்களது அகவிலைப்படி ஒன்பது தவணைகளுக்கேற்ப, 36 சதவீதமாகவும், முந்நூறு ரூபாய்க்கு மேல் சம்பளம் பெறுபவர்களது அகவிலைப்படி 27 சதவீதமாகவும் உயர்த்தப்படும். மத்திய அரசின் சம்பள ஆணைக் குழு சிபாரிசுகள் செயல்படத் தொடங்கிய 1973 ஜனவரித் திங்கள் 1-ஆம் நாளன்று, நமது அலுவலர்கள் அகவிலைப் படியாகப் பெற்று வந்த தொகையை அடிப்படைச் சம்பளத்துடன் புதிய அகவிலைப் படியைக் கணக்கிடும் பொருட்டுச் சேர்த்துக் கொள்ளப்படும். இவ்வாறு கணக்கிட்டு வரும் தொகை, 1974 அக்டோபருக்கு முன்பு பெற்ற அகவிலைப்படியான 55 ரூபாய் அல்லது 70 ரூபாயைவிட, 20 ரூபாய்க்குக் குறையாமலும், 30 ரூபாய்க்கு மேற்படாமலும், உயர்வு உள்ள வகையில் கணக்கிடப்பட்டு முடிவு செய்யப்படும். இது அரசு அலுவலர்கள், ஆசிரியர், உள்ளாட்சி நிறுவன ஊழியர்கள் ஆக சுமார் ஏழு லட்சம் பேருக்குப் பொருந்தும். இந்த ஆண்டு பொங்கல் நாளின்போது அறிவிக்கப்பட்ட முடிவுகளுக்குப் பதிலாக அறிவிக்கப்படும் இந்த முடிவு, பிப்ரவரித் திங்கள் முதல் நாளிலிருந்து செயல் படுத்தப்படும்.

ஜனவரித் திங்களில் அலுவலர்களுக்கான அகவிலைப்படி மற்றும் சலுகைகளை அறிவித்த போது 12 கோடி ரூபாயாக அமையும் என்று கணக்கிடப்பட்ட கூடுதல் செலவுக்குப்பதிலாக, இப்போது நாம் எடுத்துள்ள இந்த முடிவின் விளைவாக, நமக்குக் கூடுதல் செலவு 24.5 கோடி ரூபாயாக அமையும். குறைந்த அளவு உயர்வு 20 ரூபாய் என நாம் செய்துள்ள புதிய முடிவின் விளைவாகக் கடைநிலை ஊழியர் போன்ற குறைந்த ஊதியம் பெறும் அலுவலர்கள் சிறப்பாகப் பயனடைவார்கள் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

## 1974-75-ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகள்

1974 மார்ச்சு மாதத்தில் செய்யப்பட்ட கூடுதல் வரி விதிப்பு முறைகள் உட்பட, இந்த ஆண்டு வருவாய்க் கணக்


கின் கீழ், 480.69 கோடி ரூபாய் வரவு இருக்குமென்றும் 483.25 கோடி ரூபாய் செலவு இருக்குமென்றும், இவற்றின் விளைவாக 2.56 கோடி ரூபாய் துண்டு விழும் என்றும் வரவு செலவுத் திட்டத்தின்போது கணக்கிடப்பட்டது. இப்போதுள்ள கணக்கீட்டின்படி நடப்பு ஆண்டில் 11.83கோடி ரூபாய் வருவாய்க் கணக்கில் துண்டு விழும் என்று தெரிகிறது. மத்திய அரசு, திட்டப் பணிகளுக்காக நமக்குத் தரும் உதவி எதிர்பார்த்ததை விடக் குறைந்ததன் காரணமாகவும், வறட்சிப் பகுதிகளில் வரி விலக்குத் தந்ததாலும் வரவுகள் குறைந்தன; அதே நேரத்தில் நடப்பாண்டில் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக 12கோடி ரூபாய் செலவிட வகை செய்துள்ளோம். அரசு ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணம் தந்து, அதன் பின் கூடுதல் அகவிலைப்படி தந்துள்ளோம். மேலும் சிறு பாசனத் திட்டங்களை விரைவுபடுத்தியும், கிராமச் சாலைத் திட்டத்தினை மேலும் விரிவுபடுத்தியும் கூடுதலாகப் பணிகளை மேற்கொண்டுள்ளோம். இவற்றின் காரணமாகச் செலவினங்களில் உயர்வுகள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறு செலவின உயர்வுகளும், எதிர்பார்த்த சில இனங்களில் வரவு குறைந்ததும் நடப்பு ஆண்டில் பற்றுக் குறை 11.83 கோடி ரூபாயாக உயர்வதற்குக் காரணங்களாகும்.

### 1975-76-ஆம் ஆண்டின் வரவு-செலவு மதிப்பீடுகள்

1975-76 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டம் வருவாய்க் கணக்கில் வரவினங்கள் 501.4 கோடி ரூபாயாகவும், செலவினங்கள் 537.5 கோடி ரூபாயாகவும், இதன் விளைவாக 36.1 கோடி ரூபாய் பற்றுக் குறை உள்ளதாகவும் அமையும். விற்பனை வரியின் கீழ் 26.4 கோடி ரூபாய் கூடுதல் வரவு இருக்கும் என எதிர்பார்க்கிறோம். அதே நேரத்தில் மதுவிலக்குக் கொள்கையின் விளைவாக, நடப்பாண்டு திருத்த மதிப்பீட்டிற்கும்,வரும் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கும் இடையே 22.1 கோடி ரூபாய் வரவு குறைந்து விடும். குதிரைப் பந்தய ஒழிப்பு, நில வரி வசூல் வஜா, மின்சார உபயோகத்தின் மீதான வரியை மின் கட்டணங்களுடன் சேர்த்தது இவற்றின் விளைவாக வருவாய் குறைந்துள்ளது. செலவினங்களில்வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்காக 20 கோடிரூபாய் சிறப்பாக ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசினர் இந்தப் பணிகளுக்காகச் சிறப்பு உதவி முழுமையாகத் தருவார்களேயானால், வருவாய்க் கணக்கில் உள்ள துண்டு கணிசமான அளவுக்குக் குறையும். முதலீட்டுச் செலவுகளுக்காக 41.70 கோடி ரூபாயும், கடன்கள், முன் பணங்கள் தருவதற்காக 42.13 கோடி ரூபாயும் மத்திய அரசுக்குக் கடன் தவணைகளைத் திரும்பிச் செலுத்துவதற்காக 42.35 கோடி ரூபாயும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. வருவாய்க் கணக்கில் 36.1 கோடி ரூபாய் துண்டு விழுவதையும் உள்ளடக்கி, வருவாய்க் கணக்கு கடன் மூலதனக் கணக்கு, மற்ற இனங்கள், இவை அனைத்துமாக 26.6 கோடி ரூபாய் துண்டு விழும்.

முன்னரே குறிப்பிட்டுள்ளதைப் போல், வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்குத் தக்க நிதி ஒதுக்கீடு செய்து, அரசு அலுவலர்களுக்குக் கூடுதல் அகவிலைப்படி அளித்துமதுவிலக்குக் கொள்கையைக் கடைப்பிடித்து அதே நேரத்தில் வளர்ச்சிப் பணிகளை விரைவு குன்றாது செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளதன் விளைவாக ஏற்பட்டுள்ள பற்றுக்குறையை ஓரளவு ஈடு செய்ய நாம் கூடுதல் வரி விதிப்பு நடவடிக்கைகள் சிலவற்றை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. சாமானிய மக்களைப் பாதிக்காத வண்ணம் வரி விதிப்பு முறைகள் இருக்க வேண்டும் என்ற நமது கொள்கைக்கிணங்க, இப்போதும் வரி விதிப்புமுறைகளை அமைக்க முயற்சித்துள்ளோம்.

காபி, ஃபிரெஞ்சு காபி, சிக்கரி, தேயிலை இவற்றின் மீதான ஒரு முனை விற்பனை வரி 5.5 சத வீதத்திலிருந்து அண்டை மாநிலங்கள் பலவற்றில் இருப்பதற்கொப்ப 6 சத வீதமாக மாற்றியமைக்கப்படும். 59 பொருட்கள் மீது விதிக்கப்பட்டு வந்த பலமுனை விற்பனை வரியை ஒரு முனை விற்பனை வரியாகச் சென்ற ஆண்டு மாற்றியமைத்தோம். தற்போது பல முனை வரி வீதம் ஒவ்வொரு முனையிலும் 4 சத வீதமாக இருந்து வருகிறது. எனவே, எண்ணெய் வகைகள், பிண்ணாக்கு, இயந்திரத்தால் தயாரிக்கப்படும் தீக்குச்சிகள், பருப்பு வகைகள் இவற்றின் மீதான ஒரு முனை வரி வீதத்தையும் அதற்கேற்ப மாற்றும் வகையில் 3.5 சத வீதத்திலிருந்து 4 சத வீதமாக அமைக்க முடிவு செய்துள்ளோம். எனினும், விவசாயிகளுக்குத் தேவைப்படும் உர வகைகள், பூச்சி கொல்லி மருந்துகள் இவற்றின் மீது தற்போதுள்ள 3.5 சத வீத ஒரு முனை விற்பனை வரியில் மாற்றம் ஏதும் செய்யவில்லை என்பதையும் அறிவிக்க விரும்புகிறேன். மின்சாரப் பொருட்கள், இயந்திரப் பொருட்கள், கருவிகள் போன்றவற்றின் மீது 9 சத வீத ஒரு முனை விற்பனை வரி தற்போது விதிக்கப்பட்டு வருகின்றது. இவற்றுள் வசதி மிக்கவர்களால் பயன்படுத்தப்படும் மின் அரவைக் கருவி, மின் துணி துவைக்கும் கருவி போன்றவற்றின் மீதான விற்பனை வரி தற்போதுள்ள 9 சத வீத அளவிலேயே தொடர்ந்து இருந்து வரும். வாசனைத் திரவங்கள் மீதான ஒரு முனை வரி 9 சதவீதத்திலிருந்து 12 சத வீதமாக உயர்த்தப்படும். பருத்தி, பருத்தி நூல் மீது தற்போதுள்ள 2 சத வீத ஒரு முனை வரி, அண்டை மாநிலங்கள் பலவற்றில் இருப்பதற்கொப்ப 3 சத வீதமாக மாற்றியமைக்கப்படும். இறால், நண்டு தவளைக் கால்கள் போன்றவை பெரும்பாலும் பதப்படுத்தப்பட்டு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. இவை மீது நமது அண்டை மாநிலமான கேரளத்தில் 5 சத வீத ஒரு முனை வரி விதிக்கப்பட்டுவருகின்றது. இதனையொட்டி, கடைசியாக வாங்கப்படும் கட்டத்தில், இவற்றின் மீது 5 சத வீத ஒரு முனை வரி விதிக்கப்படும். எனினும், சிறிய வர்த்தகர்களுக்குச் சலுகை தரும் நோக்கத்தில், 5,000 ரூபாய்க்குக் குறைவாக வியாபாரம் உள்ளவர்களுக்குப் பதிவு செய்துகொள்வதிலிருந்தும், விற்பனை வரியிலிருந்தும்விலக்களிக்கப்படும்.



முத்திரைத் தாள் வரி மீது இப்போது கூடுதல் மேல் வரி விதிக்கப்பட்டு வருகின்றது. இந்தக் கூடுதல் மேல் வரியை முத்திரைத் தாள் வரியுடன் இணைத்து, அவ்வாறு வரும் தொகையை முழு ரூபாய்களாக மாற்றியமைக்கவும், முடிவு செய்யப்பட்டுள்ளது. இது கணக்கிடுவதற்கு எளிதாக அமையும். பத்திரங்கள் சில வற்றின் மீதான முத்திரை வரியும் ஓரளவுக்கு உயர்த்தப்படும்.

மேற்கூறிய வரி விதிப்பு முறைகளின் பலனாக, ஆண்டு ஒன்றுக்கு 6 கோடி ரூபாய் கூடுதலாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் வருவாய்க் கணக்கில் உள்ள துண்டு 30.1 கோடி ரூபாயாகவும், எல்லாக் கணக்குகளையும் மொத்தமாகப் பார்க்கும்போது ஏற்படும் துண்டு 20.6 கோடி ரூபாயாகவும் குறையும். 1975-76ல் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையைச் சரிக்கட்ட ஆண்டுத் திட்டத்திற்கான மத்திய உதவியை அதிகப்படுத்தியும், வறட்சிப் பணிகளை நிறைவேற்ற சிறப்பு நிதி உதவி அளித்தும் உதவ வேண்டும் என்று சில நாட்களுக்கு முன்பு டெல்லியில் நான் நடத்திய பேச்சு வார்த்தைகளின்போது மத்திய அரசை வேண்டிக் கேட்டுள்ளேன். இதனை மத்திய அரசு, ஏற்று, நமக்கு உதவி தர விரைவில் முன் வரும் என்றும் நம்புகிறேன்.

**மத்திய மாநில உறவு**

மத்திய, மாநில அரசுகளுக்கிடையிலான நிதி உறவுகள் உறுதியாக அமையாத நிலையில் ஒருபுறம் வளர்ச்சித் தேவைகளையும், மறுபுறம் சீரான நிதி நிர்வாகத்தையும் கருத்தில் கொண்டு, சூழ்நிலைக்கேற்ப நமது வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டியிருக்கிறது என்பதை நான் உரையின் தொடக்கத்திலேயே குறிப்பிட்டுள்ளேன். வருவாய்க் கணக்கிலும், எல்லாக் கணக்குகளின் தொகுப்பிலும் பற்றாக்குறை இருக்கிறது. எனினும் திட்டப்பணிகளுக்காகவும், வறட்சித் தணிப்புப் பணிகளுக்காகவும், மத்திய அரசிடமிருந்து நாம் எதிர்பார்க்கும் உதவி வரும்போது, இந்தப் பற்றாக்குறை நிறைவு செய்யப்பட்டு விடும். சிக்கன நடவடிக்கைகளை நாம் தொடர்ந்து எடுத்து வருகின்றோம். வளர்ச்சிப் பணிகளுக்கென நிதி வசதிகளைப் பேணித் திரட்டுவதில், நாம் மற்றெந்த மாநிலத்திற்கும் பின் நின்றதில்லை. நாம் கவனிக்க வேண்டியது, ஒரு குறிப்பிட்ட ஆண்டில் நிதிநிலை பற்றாக்குறையாக அமைந்துள்ளதா, அல்லது உபரியாக அமைந்துள்ளதா என்பதல்ல. மாநில மக்களின் தேவைகளுக்கேற்ப வளர்ச்சித் திட்டங்களை வகுக்க மத்திய, மாநில அரசுகளுக்கிடையில் நிதி உறவு நியாயமான முறையில் அமைந்துள்ளதா என்பதையே நாம் ஆராய வேண்டும். சென்ற ஆண்டு முதல் செயலுக்கு வந்துள்ள ஆறாவது நிதி ஆணைக் குழுவின் பரிந்துரைகள் நமக்கு ஏமாற்றத்தையே அளித்துள்ளன. "தன்னுலியன்றவரை வசதிகளைத் திரட்டிச் சிக்கனமாகவும், சீராகவும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டுள்ள நம்மைப்போன்ற மாநிலங்களுக்குக் கிடைத்த பரிசு, அந்தப் புள்ளிவிவரங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, வேறு சில மாநிலங்களுக்கு அதிக உதவி கொடுத்து நமக்குக் குறைத்து விட்டது தான்" என்று, நான் சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கை உரையில் கூறியதை மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதற்குப் பிறகு நிதி ஆணைக்குழு கணக்கில் எடுத்துக் கொள்ளாத கூடுதல் அகவிலைப் படி, மதுவிலக்கு, வறட்சி இவை காரணமாக இந்த நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது.

ஐந்தாண்டுக்கு ஒரு முறை செய்யப்படுகின்ற நிதி ஆணைக் குழுவின் முடிவுகள், பரந்து விரிந்துள்ள நமது நாட்டின் வேறுபட்ட நிதித் தேவைகளையும், நிதி வசதிகளையும் நிதி திரட்டக் கூடிய சக்திகளையும் முற்றிலும் கருத்திற்கொண்டு செய்யப்படுவதாக அமையவில்லை. நிதி ஆணைக் குழுக்களுக்கு இடையில் உள்ள காலத்தில் ஏற்படுகின்ற நிதி நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்காக ஏதாவது ஓர் அமைப்பு இருக்கிறதா என்றால் அதுவுமில்லை.

நிதி திரட்டுவதற்கு நமக்குள்ள உரிமைகள் குறைவாக இருப்பதும், நமக்கு நாட்டின் மொத்த நிதி வசதிகளில் உரிய பங்கு கிடைக்காமல் போனதும், நாட்டின் பொருளாதார நிர்வாகத்தில் நமக்குப் பங்கு ஏதும் கொடுக்கப்படாமல் இருப்பதும், நமது சங்கடங்களுக்குக் காரணங்களாகும். அத்துடன் மத்திய அரசின் வரி விதிப்புகள் பற்றாக்குறை நிதி நிர்வாகம் இவற்றின் பளுவையும் நாம் தாங்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். பெரிய அளவில் நம்மால் ஆண்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு இயலுமெனினும், அதற்கான வழிகளை அடைப்பதற்கும், உதவிகளை வழங்கத் தயங்குவதற்குமான குற்றச்சாட்டுக்கு மத்திய அரசே இலக்காகிறது என்பதை நான் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.

நமது அரசியலமைப்புச் சட்டத்தின் துவக்கமே நமது நாட்டை "மாநிலங்களின் ஒன்றியம்" என்று வரையறுத்துள்ளது. மாநில அரசுகளும் மத்திய அரசும், கலந்து ஆலோ

தமிழரசு

இந்த இதழுடன்


இலவச இணைப்பு

# வறட்சியை வெல்வோம்!

சட்ட மன்றக் கூட்டு அவையில் ஆளுநர் ஆற்றிய உரையின் மீது நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளித்து முதல்வர் கலைஞர் ஆற்றிய பதிலுரை.

சித்து வெளிப்படையாகவும், கூட்டாகவும் முடிவுகளை எடுக்கும் முறை ஏற்பட்டால்தான், ''மாநிலங்களின் ஒன்றியம்'' என்பதற்கு உண்மையான பொருள் ஏற்படும். உண்மையான கூட்டாட்சி அடிப்படையில், மத்திய அரசு எடுக்கும் முடிவுகள், மாநில அரசுகளுடன் கலந்து ஆலோசித்து எடுக்கும் கூட்டு முடிவுகளாக அமைய வேண்டும் என்பதுதான், இன்றுள்ள நிலையில் கடைப்பிடிக்கப்பட்டிருக்க வேண்டும். இதனால்தான் ஒட்டுமொத்தமாக இந்தச் சங்கடங்கள் அகல,

வரங்கொடுக்கும் தெய்வமாக மத்திய அரசும், தவங்கிடக்கும் பக்தர்களாக மாநில அரசுகளும் இருக்கிற அரசியல் அமைப்புச் சட்டமே திருத்தப் பெற்று, மாநிலங்கள் முழுமையான சுயாட்சித்தன்மை பெறவேண்மென்று இந்த மன்றத்திலேயே தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம். கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை என்று களிப்புப் பொங்கக் கூறுகிற நமது இந்தியத் திருநாட்டு மாநிலங்கள், தொடக்கத்தில் மூன்று வகையாகப் பிரிக்கப் பெற்று இன்றைய மராட்டியம், தமிழகம் போன்ற பழைய மாநிலங்கள் 'ஏ' பிரிவிலும், காஷ்மீர், ஐதராபாத் போன்றவைகள் 'பி' பிரிவிலும், குடகு போன்ற இன்னும் சிறிய பகுதிகள் 'சி' பிரிவிலும் வைக்கப்பட்டிருந்தன. மொழிவழி மாநிலங்கள் அமைந்த பின்னர் 'ஏ' 'பி' 'சி' என்ற பிரிவுகள் நீக்கப் பெற்று, மத்திய அரசின் நேரடித் தொடர்பில் உள்ள புதுவை போன்ற சில பகுதிகளைத் தவிர, ஏனையவை ஒரே மாதிரியான மாநிலங்களாகக் கருதப்பட்டு வந்தன. டெல்லியில் கூட்டப்பெறும் தேசீய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் மாநிலங்கள் ஒரே விதமான அதிகாரங்களைக் கொண்டவைகளாக இருக்க வேண்டும் என்பதை ஜனநாயக உணர்வுள்ளோர் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளனர். மத்திய அரசின் நேரடிப் பொறுப்பில் இயங்குகின்ற (Union Territories) பகுதிகளைப் பற்றி இங்கு நான் குறிப்பிடவில்லை. மாநிலங்களின் தகுதி வழங்கப்பட்டுள்ள மாநிலங்களுக்கிடையே அதிகாரங்களை அனுபவிப்பதில் ஏற்றத்தாழ்வு கூடாது என்பதை வலியுறுத்துவதோடு, இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களுக்கும் முழுமையான சுயாட்சி வழங்கி, மத்தியில் உண்மையான கூட்டாட்சி திகழ வழி வகுக்க வேண்டுமென்றும் நான் வேண்டுகின்றேன்.




''நமக்கிருக்கிற கவலை எல்லாம் தூக்க முடியாத பாரத்தை மத்திய ஆட்சியினர் விரும்புகிறார்களே என்பதுதான். மத்திய அரசின் வலிவு என்பது மாநிலங்கள் ஒவ்வொன்றின் தனித்தனி வலிவையும் கூட்டியதால் ஏற்பட்ட மொத்த வலிவுதான் என்றால் வாதத்திற்கு ஏற்றது; அரசியலுக்கு நல்லது; காரியத்திற்கும் உகந்தது. ஆனால் மத்திய அரசு தான் எல்லா உரிமைகளையும், பலத்தையும் வைத்திருக்கும்; மாநிலங்கள் தத்தித் தத்தி நடக்கும் அதிகாரம்தான் வைத்திருக்கும் என்றால் அது எதற்கும் பொருத்தமுடையதல்ல. மாநில அதிகாரங்களை எல்லாம் எடுத்து மத்திய அரசு குவித்து வைத்துக் கொள்வதால் மாநிலங்கள் பலகீனமடையும் என்பது மட்டுமல்ல, மத்திய அரசுக்கென்று புதிய வலிவு ஏதும் ஏற்பட்டு விடாது. நாட்டுப் பாதுகாப்பு தவிர மற்ற அதிகாரங்கள் அனைத்தையும் பற்றிச் சிந்திப்போம். மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரங்களை மாநிலங்கள் எடுத்துக் கொள்ளட்டும். பின்னர் மாநிலங்கள் விரும்பித் தருகின்ற மீதியுள்ள அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக் கொள்ளட்டும். மக்களின் சுகதுக்கத்தோடு பின்னிப் பிணைந்திருப்பது மாநில அரசு தானே தவிர—மத்திய அரசு அல்ல. ஆகவே வலிவான மத்திய அரசுதான் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பது தவறு. மாநில சுயாட்சி தரத் தயக்கம் காட்டுவார்களேயானால் அளவுக்கு மீறிய அதிகாரங்களைத் தாங்கித் தாங்கிப் பாதுகாப்புப் போன்ற பெரிய விஷயங்களில் சோடை போய்விடுவார்களோ என்பதுதான் எங்கள் சந்தேகம். மேல் அதிகாரம் அனைத்தும் டில்லியில் இருப்பதை மாற்றிடத்தான் மாநில சுயாட்சித் தத்துவம் பிறந்துள்ளது.''


என்று அண்ணா அவர்கள், 1968ஆம் ஆண்டில் தமிழக முதல்வர் பொறுப்பை ஏற்றிருந்தபோது முழங்கிய கொள்கையை வெற்றி பெற வைப்பதுதான் எங்கள் இலட்சியம் என்று கூறி, அந்த இலட்சிய நிறைவுக்கு இந்திய அரசினர் இணக்கம் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டு, அதற்கான சூழ்நிலையை உருவாக்கும் பொறுப்புக்குத் தமிழக மக்களின் ஆதரவை எதிர்நோக்குவதோடு, இந்த் அறிக்கையினைத் தயாரிக்க என்னுடன் ஒத்துழைத்து உறுதுணை புரிந்த நிதித் துறைச் செயலாளர், மற்றும் அவருடன் இணைந்து பணியாற்றியவர்கள், ஏனைய துறை அலுவலர் அனைவர்க்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, இந்த 1975-76ஆம் ஆண்டுக்கான நிதி நிலைத் திட்ட மதிப்பீடுகளை அவையினர் ஏற்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன்.

**மு. கருணாநிதி,**
**முதலமைச்சர்.**

**(1-3-1975-ல் சட்டமன்றப் பேரவையில், முதல்வர் கலைஞர் வழங்கிய நிதிநிலை அறிக்கை)**


முதுமைப் பருவத்திலும்
இளமை உணர்வுகள்! புதுமை ஆற்றிடும்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு
இன்றே வாங்குங்கள்
ரூ.1,00,000 (ஒவ்வொரு வரிசைக்கும்)
பரிசினைப் பெறுவீர்!
வாழ்வின் பசுமையை
நுகர்வீர்!
முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும்
இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள
இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள்
அளிக்கப்படும்.
மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.
74வது குலுக்கல் நாள்:
31-3-1975
பரிசுச் சீட்டு ஒன்றின் விலை
ரூ. 1/-தான்
ரூ.1,00,000
சேலவு ஒரு ரூபாய்
Rs. 1,00,000
வரவோ லட்ச ரூபாய்
வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம்,
சென்னை-600002.


## விலைவாசிகள் விஷம் போல்



## ஏறிவரும் இந்த
## நாட்களிலும் கூட

## உங்கள் மன
## நிம்மதிக்கு மட்டும்
## பஞ்சமில்லை.

**30 வருடங்களில் உங்கள் ஆயுள் இன்சூரன்ஸின் மதிப்பு ரூ. 2500/- அதாவது நீங்கள் சாதாரணமாக நாளொன்றுக்கு ஒரு தடவை வெற்றிலை பாக்குக்கென 25 காசு* வீதம் செலவிடுவதைப் போன்றதே.**



* இப்போது உங்கள் வயது 30 என்று வைத்துக் கொள்வோம்

**ஆயுள் இன்சூரன்ஸ்** உதவியினால் இந்த நாட்களிலும் நீங்கள் மன நிம்மதி பெறுவது உங்கள் சக்திக்குட்பட்டதே.

PRATIBHA 2317-IVI-2 TAM

# பிளேட்டோவின் புதிர்



பன்மொழிப் புலவர் கா.அப்பாதுரையார்

எலிகள் மாநாடு கூடின!

பூனையிடமிருந்து பாதுகாப்புப் பெற வழி என்ன?

இது எலி மாநாட்டின் கடா!

கிழ எலி ஒன்று எழுந்து அறிவுரை தந்தது!

பூனையின் கழுத்தில் ஒரு மணி கட்டிவிட்டால் போதும்! அது வரும்போது மணி ஓசை கேட்கும்! உடனே நாமெல்லாம் ஓடிப் பதுங்கி விடலாம்!

எலி அறிஞரின் அறிவுரை கேட்டு எலிகளெல்லாம் மகிழ்ச்சி ஆரவாரம் தெரிவித்தன.

ஒரு சிறு சுண்டெலி எழுந்தது!

'பூனைக்கு மணி கட்டுவது யார்?' என்று கேட்டது!

எலி அறிஞர் உட்பட, எல்லா எலிகளும் விழித்தன!

அச்சமயம் ஒரு பூனை அப்பக்கம் வர, எலி அறிஞரும் ஓடிற்று, எலிகளெல்லாம் சிதறியோடின!

இது மிக மிகப் பழங்கதை தான்!

ஆனால், உலகின் மிக மிகப் பழங்கால அறிஞர் ஒருவரின் அறிவுரையை இது நினைவூட்டுகிறது!

கி.மு. நான்காம் நூற்றாண்டில், கிரீசு நாட்டில், ஏதென்ஸ் நகர்-நாட்டரசில் வாழ்ந்த பேரறிஞர், பிளேட்டோ! அவர் அறிஞர் சாக்ரட்டீஸின் தலை சிறந்த மாணவர்! அறிஞர் அரிஸ்டாட்டிலின் புகழ் வாய்ந்த ஆசிரியர்!

பிளேட்டோ சாக்ரட்டீஸைப் போல, அரிஸ்டாட்டிலைப் போல ஓர் அறிஞர்! அது மட்டுமன்று! அவர் கற்பனையில் சிறந்த ஒரு கவிஞர்! உரைநடையிலேயே எழுதினவர், கவிஞர்களையே வெறுத்தவராயினும், தம்மையறியாமலே கற்பனையின் கொடுமுடியில் நின்ற கவிஞராக, அறிவுக்கவிஞராக அவர் விளங்கினார்.

தந்தை பெரியாரின் மாணவராக, டாக்டர் கலைஞர் கருணாநிதியின் ஆசிரியராக அமைந்த வான்புகழ் அறிஞர் அண்ணாவையே நினைவூட்டத்தக்க அறிவுப்பெருங்கவிஞராக, இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகட்கு முன் உலகப் பேரறிஞராக விளங்கியவர் பிளேட்டோ!

பிளேட்டோ எழுப்பிய அரசியற்புதிர் ஒன்று உண்டு. மேலையுலகம் அதனைத் தீர்க்க முயன்று வருகிறது. ஆனால் அதனைத் தீர்க்க வழிகாட்டியவர், அப்புதிருக்கு விளக்கம் வழங்கியவர், தமிழகத்தில் தோன்றிய ஆதி வேத முதல்வரான திருவள்ளுவரே!

திருக்குறளின் பொருட்பால் முழுவதும் இந்தப் புதிருக்குரிய விடை விளக்கத் திட்டமேயாகும்!

'ஆளத்தகுந்தவர் யார் ?'

இது பிளேட்டோ எழுப்பிய வினா!

'ஆளவிரும்பாதவர் யாரோ, அவரே ஆளத்தகுந்தவர்!'

இது பிளேட்டோவின் விடை.

அறிஞர்கள் போற்றும் அறிஞராகவும் வீரர்கள் போற்றும் வீர ஆற்றல் வாய்ந்தவராகவும், கனவுத் திட்டங்களிட வல்ல கவிஞராகவும், அவற்றை நனவாக்கவல்ல செயல்வீரராகவும் மட்டும் ஆளத்தகுந்தவர் இருந்தால் போதாது. அவர் ஆளவிரும்பாதவராக, தன்னலமற்ற ஞானியாகவும் திகழ வேண்டும்.

இத்தகையவரை யார் கண்டு தேர்வது? ஆளவிரும்பாத இயல்புடைய அவரை ஆட்சிக்கு வரும்படி செய்வது யார்? எவ்வாறு செய்வது?

பூனைக்கு யார் மணி கட்டுவது, எப்படிக் கட்டுவது என்ற கடாவை ஒத்ததே இந்நிலை!

இந்த வினாக்களை எழுப்பியவர் பிளேட்டோ! ஆனால் அறிஞர் என்ற முறையில் அவர் கூறிய விடையெல்லாம், இது தெய்வச் செயலாக நடக்க வேண்டும் என்பதொன்றே!

பிளேட்டோ இயற்றிய 'குடியரசு' என்ற அறிவேடு தான் மேலை உலகில் முதல் முதலாக அரசியல் பற்றி எழுந்த ஏடு ஆகும். அது உண்மையில் அவர் விரும்பிய நல் ஆட்சியாளன், அறிவரசன் பற்றிய கனவுத் திட்டமாகவே அமைந்தது.

மக்களே மக்கள் நலத்துக்கேற்ற தகுதியுடையவனைத் தம் பெரும்பான்மை வாக்குகளால் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்!

இது நம் கால மேலையுலகம் கண்ட குடியாட்சி முறை!

பிளேட்டோ எழுப்பிய வினாவுக்கு இது ஏகதேசவிடையாய் அமைந்துள்ளது!

பிளேட்டோ 'தெய்வச் செயல்' என்று விட்ட கடாவினை மேலையுலகக் குடியாட்சி முறை 'பெரும்பான்மையின் செயல், காலத்தின் செயல்' என்று மாற்றியிருக்கிறது. இது ஒரு முன்னேற்றமே! ஆனால், இது தெய்வச் செயலை இயற்கையின் செயலாக மாற்றியிருக்கிறதேயன்றி, முழு விடையாய் அமையவில்லை.

பிளேட்டோ கண்ட நல்லாட்சிக் கனவு நோக்கிச் செல்லும் நனவுத் திட்டம், நடைமுறைத் திட்டமே நம் காலக் குடியாட்சி என்பதில் ஐயமில்லை. ஆயினும் இது இன்னும் விழுந்து எழுந்து ஓடும் திட்டமாய் ( Method of Trial and Error ) நாளடைவிலே தெய்வச் செயலாலேயே வெற்றி பெற வேண்டும் ஒரு தெய்வ நம்பிக்கைத் திட்டமாகவே அமைந்துள்ளது என்பது தெளிவு.

இதன் குறைபாடுகளும் பல.

ஒரு மக்களினம் தன் தகுதி நிலைக்கு ஏற்றதான அரசைத் தான் பெற முடியும் (A people gets the Government it deserves) என்பது ஆங்கிலப் பழமொழி!

'குடியுயரக் கோனுயரும்.'

'அரசனெவ்வழி, அவ்வழி குடிகள்'

தமிழ்ப் பழமொழிகள் இந்த உண்மையை இரு திசைப் படுத்திக் காட்டி, மற்றும் ஒரு மெய்ம்மையை வலியுறுத்துகின்றன.

மக்கள் தகுதி ஆட்சித் தகுதியை ஆக்குகின்றது. ஆனால், ஆட்சித் தகுதியோ, மக்கள் தகுதியை மேலும் தகுதியுடையதாக மேம்படுத்தி அடுத்த ஆட்சியை இன்னும் தகுதியுடையதாக வளர்க்கிறது.

தகுதி இவ்வாறு இயல்பாக இரு திசைப்பட வளர்ந்து கொண்டே செல்கிறது.

தகுதிக் கேடும் இது போல இரு திசைப்பட வளருமன்றோ?

கத்தி போன்ற கருவியைக் கறிகாய் அரியவும் பயன்படுத்தலாம். கொலை பாதகத்துக்கும் பயன்படுத்தலாம்.

கத்தியின் பயன் கத்தியினிடத்தில் இல்லை; அதைக் கையாளும் கையின் திசையினையே பொறுத்தது.

குடியாட்சி ஒரு கருவி, ஒரு முறை. அதன் வெற்றிதோல்விகள் அதைக் கையாளும் மக்களின் தகுதி அல்லது தகுதிக் கேட்டினையே பொறுத்தவை. அதே சமயம் இத்தகுதி அல்லது தகுதிக் கேட்டினை மக்களிடம் ஆக்குவதும் வளர்ப்பதும் அரசேயாகும்.

மக்கள் தகுதி நிலை அரசின் தகுதியை ஆக்குகிறது, அழிக்கிறது. அதுபோலவே அரசின் தகுதிநிலை மக்கள் தகுதியை ஆக்குகிறது, அழிக்கிறது.

பிளேட்டோவின் 'குடியரசு' காட்டும் புதிர், தற்காலக் குடியாட்சியிலும் ஓரளவு தொடர்ந்து இருந்தே வருகிறது என்பதனை இது காட்டுகிறது.

குடியாட்சியின் வினா இப்போது இன்னொருபடி, இன்னொரு தளத்துக்கு உயர்கிறது.

நல்ல ஆட்சிமுறை வெறும் அரசியல் முறையாய் இருந்தால் போதாது. அது நல்ல சமுதாய முறையின்மீது கட்டமைக்கப் பெறல் வேண்டும். நல்ல ஆட்சிமுறையை அமைக்க வல்ல, வளர்க்கவல்ல சமுதாய முறையை நாம் ஆக்க வேண்டும். அதே சமயம், அதனுடன் இணைவாகவே, நல்ல சமுதாய முறையை ஆக்கவல்ல, வளர்க்க வல்ல ஆட்சிமுறையையும் நாம் வகுக்க வேண்டும்.

முழுநிறை குடியாட்சி, என்றும் குடிநல ஆட்சி கலன் நோக்கி வளர்ந்து கொண்டேயிருக்கும் இயங்கியல் மலர்ச்சியியல் குடியாட்சி (Dynamic and Self-growing Democracy) அமையவேண்டுமானால், நாம் நல்லாட்சிக்கேற்ற சமுதாயத்தையும் நற் சமுதாயத்துக்கேற்ற ஆட்சியையும் ஒருங்கிணைவாகவே ஆக்க வளர்க்க வல்ல ஒரு மீக்குடியாட்சிமுறை (Super-Democratic Set-up) வகுத்துக்காண வேண்டும்.

கிரேக்க அறிஞர் பிளேட்டோவின் புதிரை மட்டுமன்றி, நம்காலக் குடியாட்சியின் புதிரைக்கூட இத்தகைய வகுப்பு முறை விளக்கலிடைகாண முடியும்!

திருவள்ளுவர் தம் பொருட்பால் மூலமாக வகுத்தருளியுள்ள மீக்குடியாட்சி முறை இதுவே.

நற்குடியாட்சியில் தனித்தனி முழுநிறை சுதந்தரமுடைய, ஆனால் ஒன்றோடொன்று இணைந்து பிணைந்த மூன்று உறுப்புகள் உண்டு. ஒன்று நடைமுறை ஆட்சித்துறை (Executive); இரண்டாவது ஒழுங்குமுறை ஆட்சித்துறை (Judiciary); மூன்றாவது அமைப்பாட்சித்துறை (Legislature).

இம்மூன்றையுமே திருக்குறளின் பொருட்பால் மூன்று இயல்புகளாக வகுத்துரைக்கிறது.

திருக்குறளில் அரசியல் என்பது ஒழுங்கியல் ஆட்சித்துறை சார்ந்தது. இது இக்கால ஒழுங்கியல் துறையினும் விரிவானது ஏனெனில் அது வழக்குத் துறையை மட்டுமன்று, கல்வி, பொருளியல் போன்ற மற்றத் திட்டத்துறைகளையும் உள்ளடக்கியது. திருவள்ளுவர் கல்வியை அரசியலிலும் முற்பட முதன்மையாகவைத்ததன் காரணம் இதுவே.

அங்கவியல் என்பது நடைமுறை ஆட்சித்துறை. திணைக்களங்கள் ( Departments ) அனைத்தையும் அமைச்சர்களை மூலவர்களாகக் கொண்டு நடத்தும் துறை இதுவே.

குடியியல் என்பதே அமைப்பியல் துறை ஆகும். இங்கே உண்மையில் சட்ட திட்ட அமைப்புக்கு அடிப்படையிலான சமுதாயத்தின் அமைப்பியலே பேசப்படுகிறது.

திருவள்ளுவர் அரசியலமைப்பில் மிகமிக உயர்நிலை முக்கியத்துவமுடைய கூறு அமைப்பியல் அல்லது குடியியல் கூறே. ஆட்சியைக் குடியாட்சிமுறையில் வகுத்தமைக்கும் சமுதாயத்தை அமைத்தாக்கிக் கட்டமைப்பதற்கான திட்டக்கூறு இதுவே.

தற்கால அமைப்பியல் அல்லது சட்ட ஆக்கத் (Legislative) துறையைவிடத் திருவள்ளுவரின் இந்த அமைப்பியல் அல்லது குடியியல் முறை மிகவிரிவானது என்பது தேற்றம். ஏனெனில் இது மக்கள் தகுதியையே தலைமுறை தலைமுறை கடந்து உயர்த்தி மலர்ச்சியடையச் செய்யும் சமுதாய அமைப்பாக அமைந்துள்ளது.

திருவள்ளுவரின் அரசன் தற்கால அரசியலார் முடியாட்சியின் கூருகக் கொள்ளும் அரசனல்லன். அவன் ஒழுங்கியலாட்சி, நடைமுறையாட்சி ஆகியவற்றின் தலைவன் மட்டுமல்லன்; சமுதாயத் தலைவனுகவும் இருந்து இம்முத்துறைகளையும் இணைப்பவனும் அவனே!

அரசன் முற்றிலும் குடிமரபு வழி வருபவனும் அல்லன்; முற்றிலும் தேர்ந்தெடுப்புக்குரியவனுமல்லன். அவன் ஒரு பண்பு மரபின் சின்னம். குடிமரபின் வழி அதில் பயின்று, தேர்வு செய்து ஆக்கப்பெறுதற்கும் நீக்கப் பெறுவதற்கும் உரியவன் அவன்.

நடைமுறை ஆட்சியை அவன் அமைச்சர் மூலமாகவே நடத்துகிருன். அமைச்சரை ஆக்கவும் நீக்கவும் அழிக்கவும் கூட அரசனுக்கு ஆற்றல் உண்டு. ஆனுல் இது வரையிலாற்றலன்று. பெரியார் அவை அதாவது பேராயத்துக்கு இது உட்பட்டதாகும். அமைச்சர்கள் பேராயத்திலிருந்தே அமர்த்தப் பட்டதற்குரியர். இதனுலேயே திருவள்ளுவர் ஒரு புறம் அமைச்சர் அரசரிடம் தீக்காய்வார்போல அகலாது அணுகாது அஞ்சி ஒழுக வேண்டுமென்றும், அதே சமயம் இடித்துரைக்கும் இயல்பினராயிருக்க வேண்டுமென்றும் கூறினுர். இதுபோல பெரியாரைத் துணைக்கோடல் அதிகாரத்தை அவர் அரசியலில் கூறி, பெரியாரைப் பிழையாமை அதிகாரத்தை அங்கவியலில் விளக்குகிருர்.

அரசனுற்றலுக்கு அமைச்சரும், இருசாரார் ஆற்றல்களுக்குப் பெரியாரும் தடுப்பரண் ஆவார்கள்.

சமுதாயத்தின் நன்மக்கள் (Citizen) பற்றிய திருவள்ளுவர் அதிகாரமே குடிமை என்பது. இக்காலக் குடியாட்சி தனி மனிதரை உறுப்பினராகக் கருதுகிறது. ஆனுல் வள்ளுவக் குடியாட்சியில் குடி அல்லது குடும்பமே குடியாட்சியின் அடிப்படைக் கூறு ஆகும்.

குடியாட்சி என்ற தமிழ்ப் பெயரே இவ்வள்ளுவ மரபில் வந்தது என்பது குறிப்பிடத் தக்கது. ஏனெனில் குடி என்ற ஒரே சொல்லே தமிழில் குடும்பத்தையும் நாட்டுக் குடிகளையும் குடிமைத் தகுதியையும் (Citizenship) ஒருங்கே குறித்தது.

நன்மக்கள் என்பவர் இயல்பாகச் சமுதாயநலம் நோக்குபவர். சமுதாய நலமேதும் பண்பாகக் கொண்டவர் அவர்களால் நன்மதிப்புப் பெற்ற பண்பாளர். இந்தப் பண்பாளர்களால் மதிப்புப் பெற்று, அவர்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களே சான்றோர்.

சான்றோர்களால், வயது, அநுபவம், பண்பு, தகுதி அடிப்படையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டும் பேராயத்தில் இடம் பெறுபவர்களே பெரியார்கள்.

சமுதாயத்தில் இத்தகைய ஒரு தகுதியாட்சிக்குத் தமிழ் மரபு, சிறப்பாக, வள்ளுவ மரபு வழி வகுப்பதனுலேயே பிளேட்டோவின் புதிருக்கு, தற்காலக் குடியாட்சியின் புதிருக்கு வள்ளுவத் தமிழ் மரபு விடையும் விளக்கமும் தந்ததாகிறது.

சமுதாயப் பின்னணியில் துறவோர் அல்லது தம் தனி நலம் துறந்த திருத்தொண்டர்கள், தன்னல மறுத்த அருளாளம் அல்லது அந்தணர் அமைகின்றனர். இவர்கள் உரிமைகள் எதுவும் கோருவதில்லை. கடமைகளை மட்டும் ஆற்றுவர். இதுமட்டுமன்று, சமுதாயத் தீங்குகளின் பயனுக தீமைகளைத் தாம் ஏற்று, மக்கள் நலனுக்காக மாளவும் சித்தமாவர்.

தமக்கென வாழாத இப்பிறர்க்குரியாளரைக் கண்டுணர்வதிலும், பேணி வளர்ப்பதிலும் மக்களும் மக்களுக்கு வழி காட்டியாக ஆள்வோரும் அரசரும் பங்கு கொள்கின்றனர்.

நாடு என்பது சமுதாயமும் அரசும் சேர்ந்த அமைப்பு (Body Politic), பிளேட்டோவின் குடியரசு அமைப்பும் சரி, தற்காலக் குடியாட்சியும் சரி, அரசியல் குடியாட்சி அமைப்புக்கு மட்டுமே வழி செய்தன. அரசியல் குடியாட்சியை ஆக்கி வளர்க்கும் 'சமுதாயக் குடியாட்சியமைப்பையும் சமுதாயக் குடியாட்சியமைப்பை ஆக்கி வளர்க்கும் அரசியல் குடியாட்சியமைப்பையும் ஒழுங்கமைத்து, இரண்டையும் வரைப்படுத்தும் துறவோர், அந்தணர் ஆட்சியையும் பின்னணியில் ஊக்கிய வள்ளுவத் தமிழ் மரபாட்சிப் பண்பு, உலகுக்கு வருங்காலத்திலும் ஒரு கலங்கரை விளக்கமாக அமையத்தக்கது ஆகும்.

தமிழகத்தின், இந்தியாவின் எல்லா அரசியல் கட்சித் தொண்டர்களும் தன்னலம் துறந்த் துறவிகளாகி, அது போலவே எல்லாத் துறவிகளும் தங்களை அந்தணர் என்று கூறிக் கொள்வோர்களும் வள்ளுவத் தமிழ்மரபு தழுவி தேசத் தொண்டர், மனித இன வழிவழித் தொண்டர்களாக முடியுமானுல், இலக்கியல் குடியாட்சி மட்டுமன்று, உபநிடதங்களும் இயேசுபிரானும் நபி நாயகமும் காந்தியடிகளும் விழைந்த தெய்விக அரசையே நாம் நம்மிடையே பயிரிட்டு வளர்ப்பவர்கள் ஆகிவிடுவோம் !

> பெண் என்பவள் ஆணுக்குத் துணைவி ; ஆணைப் போலவே சரிசமமான அறிவுத் திறன் வாய்ந்தவள்; ஆணின் ஈடுபாடுகளில் சிறு சிறு அம்சங்களில் கூடக் கலந்துகொள்ளவும் அதில் பங்கு பெறவும் பெண்ணுக்குச் சரிசமமான உரிமையுண்டு.
>
> —காந்தியடிகள்

சென்ற இதழ்த் தொடர்ச்சி

# தங்கமே தங்கம்

சுவித

தெய்வம்போல் வந்து என் மகளைக் காப்பாற்றினாள் ஆஸ்பத்திரிப் பெண், அம்புஜமோ, பங்கஜமோ, பெயர்கூடச் சரியாகத் தெரியவில்லை என்ற கனகசபையின் பதில் மணவாளரின் காதில் தேனாகப் பாய்ந்து மனத்தை இன்பமாக நிறைந்தது.

''நீங்கள் இந்த நேரத்தில் ஏது இந்தப் பக்கம்?'' -என்று கேட்டு விடுவாரோ என்று எண்ணினார். அதற்குப்பதிலாக நீங்களாவது வந்தீர்களே — எனக்குச் சற்று ஆதரவாக உள்ளது என்ற வார்த்தை உண்மையில் மணவாளருக்குத்தான் ஆறுதல் தந்தது.

பங்கஜம் வரவில்லையென்று அவள் தாய் கூற, மருத்துவனை, கடை, அங்கு இங்கு என்று எங்கெல்லாமோ தேடினேன், ஊர் இருக்கிற நிலையிலே அவள் உயிருக்கு மேலான கற்புக்குக் களங்கம் உண்டாகி விடுமோ என்றுஅவளைத்தேடிக்கொண்டு வந்தேன் என்று கூற நினைத்த மணவாளர், ''பங்கஜத்தைத் தான் தேடி வந்தேன்'' — என்று சுருக்கமாகக் கூறினார்.

'தப்பு எங்கள் பேரில்தான்'- வேலை முடிந்து வீட்டிற்குப் போய்க் கொண்டிருந்த பங்கஜத்தை நாங்கள்தான் உதவிக்காக நிறுத்திக் கொண்டோம். இதை அவள் வீட்டிற்குத் தெரியப்படுத்தத் தவறிவிட்டேன்- மன்னித்துவிடுங்கள். மற்றவர்களுக்குத் தெரிந்தால் பிள்ளை வலி அதிகரித்து விடும் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். எனவே இதுவரை ஏதும்கூறவில்லை என்று ரகசியத்தைக் கூறுவதைப் போல் கூறினார் பண்ணையார்.

'குவா! குவா!' என்ற இளம் குழந்தையின் அழுகுரலைத் தொடர்ந்து 'பேரன் பிறந்திருக்கிறான் ஐயா!' என்ற குரலோடு வெளியே வந்தாள் பங்கஜம். பண்ணையாரின் அருகில் மணவாளர் இருப்பதைக் கண்டு, 'நான் இங்குதான் இருக்கிறேன்' என்பதை விழியாலேயே உணர்த்தினாள்.

செம்பட்டுக் கிராமத்தில் ஒரு ஊராட்சி அலுவலகம், நடுநிலைப்பள்ளி, ஆரம்பச் சுகாதார நிலையம் ஆகியவை ஏற்பட்டது உண்மைதான் என்றாலும், காலையிலே கடப்பாரையைக் கையில் ஏந்திக் கடும் பசிக்குக் கலயத்தில் கஞ்சி தாங்கி, மாலைவரை மெய்வருத்திக் கூலி பெறும் பாட்டாளிகள் நிரம்பியிருக்கும் ஊர், இன்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்பு

> 'சார் சார் ஒண்ணுக்கு,
> சட்டாம்புள்ளே ரெண்டுக்கு
> நான்போறேன் வீட்டுக்கு
> நாளைக்கு வந்தாக் கேட்டுக்
> கோ, கேட்டுக்கோ'

என்று ஆடுமாடுகளை மேய்க்கும் சிறுவர்கள்-மணவாளர் பள்ளிக்குச் செல்வதைக் கண்டால் இப்படிப் பாடிக் கேலி செய்வார்கள். அந்த நிலை மாறிவிட்டதைக் கண்ட மணவாளர் இன்பமடைந்தார்.

மாதங்கள் பல உருண்டோடின. பண்ணையார் கனகசபையின் போக்கில் பல பெரிய மாறுதல்கள் ஏற்பட்டு வருவதைக் கனித்துக் கொண்டே இருப்பவர்கள் மட்டும்தான் அறிந்து கொள்ள முடியும். ஏழைகட்குக் கொடுத்த கடனுக்கு வட்டி வேண்டாம் என்றும், இயலாத நிலையில் இருப்பவர்களிடம் கடன் தொகையையும் வசூல் செய்வதில்லை. கோர்ட்டில் இருக்கும் வழக்குகளை எல்லாம் திரும்பப் பெற்றுக் கொண்டார். இத்தகைய நல்ல செயல்கள் எல்லாம் என்ன காரணத்தினாலோ தெரியவில்லை. எதுவாக இருந்தாலும். அவரைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

தன் மகள் அல்லியின் பிரவத்திற்குப் பிறகுதான் இவருக்கு இத்தகைய மாறுதல் ஏற்பட்டது. தீண்டத்தகாத கீழ் சாதிப் பெண் ஒருத்தியின் உதவி அன்று இல்லாவிட்டால் அன்று தன் மகளின் கதி என்னவாயிருக்கும் என்று எண்ணிய போது பங்கஜத்தின்மேல் பண்ணையாருக்குப் பற்றும், பாசமும், மதிப்பும் உயர்ந்தது. பங்கஜத்தைப் பற்றி நன்கு தெரிந்து கொள்வதற்காக ஆசிரியர் மணவாளரை அழைத்து வருமாறு ஆள் அனுப்பியிருந்தார். அவர் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தார்.

'என்னை அழைத்தீர்களாமே!' என்ற குரல் கேட்டு எழுந்த கனகசபை, வாருங்கள், உங்களுக்காகத்தான் காத்திருந்தேன் அமருங்கள் என்று மணவாளருக்கு இருக்கையைக் காட்டித் தானும் அமர்ந்தார்.

'ஒன்றுமில்லை'-அந்த ஆஸ்பத்திரிப் பெண்ணைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டும். எனது மனைவி மகங்ளத்திற்குப் பிறகு இந்த வீட்டை அலங்கரிக்க அந்தப் பெண்ணை.....'' என்று கூறிய பண்ணையார் தொடராமல் நிறுத்தினார்.

''என்னங்க! உங்களுடைய அந்தஸ்துக்கு ஏற்றதா இது?'' என்று வேண்டுமென்றே மணவாளர் தூண்டினார்.

''கனகசபை ஒரு காரியத்தை நினைத்து விட்டால் அது நடந்து முடிந்த மாதிரிதான்''—என்று கூறிக் கொண்டு வெற்றிலையை மடித்தார்.

மணவாளருக்குச் சற்று குழப்பமாக இருந்தது. பண்ணையார் பழைய மைனர் ஆகிரார் போல் தெரிகிறது. ''தள்ளாத கிழத்திற்குத் தடியே பிரதானம்''-என்பார்கள். இது பொல்லாத கிழமாக இருக்

கிறதே. எனவேதான் இந்த வயதிலும் தனக்குப் பெண் பார்க்கிறது-புலி வெளிவேசம் போடுகிறது என்று அறுவறுப் படைந்தார்.

'சமரசம் இதற்குச் சம் மதிப்பாரா!' இப்படியொரு கேள்வியை இரு பொருள்படக் கேட்டார்.

''ஏன் சம்மதிக்க மாட்டான். ஊருக்கு உபதேசம் செய்கிருனே, தன் வீட்டில் அதைச் செய்து காட்டினுல்தானே அவன் உண்மையான சமூக சீர்திருத்தவாதி. இல்லாவிட்டால் சீர்திருத்தம் பேசுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்'' பண்ணையாரின் வார்த்தைகளில் உறுதியும் வேகமும், தென்பட்டது.

'பங்கஜம் ஒரு தாழ்த்தப் பட்ட வகுப்பைச் சார்ந்தவள்' இதைக் கூறினுலாவது ஒதுங்கி விடுவார் என்று கருதினுர் மணவாளர். எப்படியாவது பங்கஜத்தை இந்தக் கிழவனிடமிருந்து காப்பாற்றிவிட வேண்டும் என்ற ஒரே நினைவாக இருந்தார்.

சாம்பசிவத்திற்குத் தெரிந்தால் நாட்டிற்கே தெரிந்த மாதிரி, அவனே இதையெல்லாம் என்னிடம் கூறியிருக்கிருன் அதனுல்தான் நானும் இந்தக் காரியத்தை முடித்தே ஆக வேண்டும் என்கிறேன்— என்ருர் நமட்டுச் சிரிப்புடன் பண்ணையார்.

இருவரிடமும் சற்றுநேரம் மௌனம்.

அல்லிமலர் பூத்தகரையோரம், முழுவெள்ளிநிலா மேவி வரும் நேரம், கன்னியவள் நெஞ்சில் ஒரு பாரம், அவள் காதலன் தன் வரவில் கொஞ்ச தூரம், சித்திரத்தை ஒத்திருக்கும் பாவை அவள் சின்னஇடை எண்ணங்களின் ஓடை-வண்ண முகம் தன்னில் நிலா நானும், நடை அன்னமெனச் சொல்ல மனம் தோனும்'...

போதும் நிறுத்துங்கள். உங்கள் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை. மகள் போன்று நினைத்து அன்பு செலுத்த வேண்டிய அந்தப் பெண்ணை மனைவியாக்கிக் கொள்ள நினைப்பது மகாபாவம்-மடத்தனம் என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறிய மணவாளருக்குத்தான் சொல்லியது பெரிய இடத்துப் பொல்லாப்பை ஏற்படுத்தும்



## "தமிழ்ப் பெரியார் ஈ. வே. ரா" கப்பல்

**''தமிழ்ப் பெரியார் ஈ.வே.ரா.'' கப்பல், சரக்கு ஏற்றிச் செல்லும் ஒவ்வொரு நாளும் எல்லாச் செலவுகளும் நீங்கலாக நாளுக்கு பத்தாயிரம் ரூபாய் வீதம் இலாபம் சம்பாதித்து வருகிறது. இன்னும் இரண்டே ஆண்டுகளில் இக்கப்பல் வாங்குவதற்குச் செலவிடப்பட்ட பணம் ஈடு செய்யப்பட்டுவிடும்.**

என்பதைக்கூட மறைத்துவிட்டது.

''நல்லாச் சொன்னீர்கள்,' ஆனுல் ஒரு சிறு திருத்தம். 'மகள்' என்ற வார்த்தைக்குப் பின்னுல் 'மரு' என்று சேர்த்துச் சொல்லிப் பாருங்கள். அப்பொழுது தெரியும் நான் படித்த கவிதையின் கதாநாயகன் யாரென்று என்று கூறிய கனக சபை குமிண்சிரிப்பில் காட்சி தந்தார்.

''ஐயா! தாங்கள் கூறுவது!'' மணவாளர் தான் ஒரு கனவுலகத்தில் இருப்பதாக நினைத்து இப்படிக் கேட்டார்.

'முற்றிலும் உண்மை'-என்ருர் பண்ணையார். மகிழ்வோடு வெற்றிலையைப் பெற்றுக் கொண்டார் மணவாளர்.

'ஊரார், உறவினர் இதற்குச் சம்மதிப்பார்களா?' பிரச்சினையை எப்படி சமாளிக்கப் போகிறீர்கள்?'' என்று கேட்கிறீர்களா? பதிவுத் திருமணந்தான். நிலக்கிழார் கனக சபையின் அருந்தவப் புதல்வன் தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்த மருத்துவத்தாதி பங்கஜத்தைக் கலப்பு மணம் செய்து கொண்டார் என்ற விவரத்தைப் பத்திரிகைக்குக் கொடுக்க ஏற்பாடு செய்துவிட்டேன் என்று கூறி முடித்தார் ககனசபை.

காட்டுத் தீப்போல கலப்பு மணச் செய்தி ஊரெங்கும் பரவியது சம்பசிவத்தின் சகாக்களுக்குச் சாட்டையடி கொடுத்த மாதிரி நன்ருக நான்கு திருமணங்கள் இப்படி நடக்க வேண்டும் என்று தன் மனைவி வள்ளிநாயகியிடம் கூறிக் கொண்டிருந்தார் மணவாளர். தன் மாணவனின் மனப்பாங்கையும், பங்கஜத்தின் அதிருஷ்டத்தையும்வாயாரப் புகழ்ந்தார்.

எனக்குஅன்றேதெரியுமுங்க, என்றைக்குப் பண்ணையார் வீட்டிற்குப் பிரசவம் பார்க்கப் பங்கஜம் போனுளோ அன்றைக்கே அவளுக்கு நல்லகாலம் பொறந்தாச்சு.. மனம்போல மாங்கல்யம் என்பார்கள், அதை நாம் கண்கூடாகக் கண்டு கொண்டோம்- என்று பெருமை தாளாமல் கூறினுள் நாயகி.

''அப்பா, அப்படீனு அவர்களுக்குத் தங்கப் பதக்கம் கிடைக்கும் இல்லையா?'' இது அன்புவின் குறும்புக் கேள்வி.

தங்கப்பதக்கம் என்னம்மா, தங்க மணம் படைத்த இவர்களுக்கு வைரப் பதக்கம் கொடுக்க வேண்டும். நானே ஏழை ஆசிரியன். என்னுல் வாழ்த்துக்களைத் தவிர வேறு என்ன கொடுக்க முடியும்? — ஆசிரியரின் பதிலில் ஏழ்மையும் அன்பும் இழையோடின.

செப்டம்பர் திங்களில் ஐந்துக்கு மேல் ஒரு நல்ல நாளில் தன் மகள் அன்பு மணிக்கும், அறிவொளிக்கும் திருமணத்தை வைத்துக்கொள்ளலாமென்றும், ஐந்தாம் தேதி ஓய்வு பெற்ற தனக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் வகையில் நடைபெறவிருக்கும் ஆசிரியர் தின விழாவிற்குத் தான் அவசியம் செல்ல வேண்டும் என்று கூறியதைச் சம்பந்பந்தி வீட்டார் சரி என்று ஒப்புக் கொண்டனர். ஆனுல் அதற்குள் அன்புமணிக்கு ஒரு பவுனிலாவது ஒரு டாலர் போட்டு விட வேண்டும் என்று நினைத்தவர், விழாவிற்குப் பின் ஆர்டர் கொடுத்துவிடலாம் என்று விழாவிற்கு வந்து விட்டார்.

ஆசிரியர்களும், பார்வையாளர்களும் நிறைந்து காணப்பட்டனர். விழாவிற்குக் கனக சபை தலைமைதாங்கிக்கொண்டு இருந்தார். சிறப்பு அழைப்பாளர்கள் ஆசிரியர்களின் சேவையைப் புகழ்ந்து கூறிக்கொண்டு இருந்தனர். குறிப்பாக மணவாளரின் மாணவரும், இந்த விழாத் தலைவரின் மகனுமான சமரசம் கலப்பு மணம் செய்து கொள்ளும் அளவுக்கு ஆசிரியர்களின் போதனையும், பெற்ருேர்

களின் ஒத்துழைப்பையும் பெற்றதை ஒருவர் குறிப்பாகவும், சிறப்பாகவும் கூறிக் கொண்டிருந்தார். கூட்டத்தில் திடீரென சலசலப்புக் கேட்டது.

சலசலப்புக்குக் காரணம் சமரசமும் பங்கஜமும் மேடைக்குத் தம்பதிகளாக வந்தது தான். விழா நிகழ்ச்சிகள் நிறைவேறும் தறுவாயில் தலைவரின் அனுமதியின் பேரில் சமரசம் தங்களுக்குக் கலப்பு மணத்தால் கிடைத்த பரிசான தங்கப்பதக்கத்தைத் தனது ஆசான் மணவாளருக்குக் கொடுத்துக் கௌரவிப்பதாகக் கூறி ஆசிரியரின் கையில் கொடுத்தான். தன் மகளுக்கு ஒரு டாலர் இல்லா விட்டாலும் தன் பணிக்குக் கிடைத்த பொற்பதக்கத்தை எண்ணி யெண்ணி மகிழ்ந்து கொண்டிருந்தார்.

அத்தோடு சமரசம் ஆண்டு தோறும் அந்தப் பள்ளியில் மதிய உணவு உண்கின்ற பிள்ளைகட்குச் சீருடையும், சிலேட்டும் புத்தகங்களும் வழங்குவதாக ஒப்புக் கொண்டான்.

ஆசிரியர்கள் இடியெனக் கையொலியெழுப்பித் தங்கள் மகிழ்ச்சிகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

மணவாளர் பொற்பதக்கத்தை மகிழ்வோடு கையில் ஏந்திக் கொண்டார். எழுந்து நின்றார். குறிப்பறிந்து தலைவரும் பேசுங்கள் என்று தலையை அசைத்தார்.

மணவாளர் நிதானமாகத் தமது உரையைக் கவிதை வடிவிலேயே கூற ஆரம்பித்தார்.

''கண்கள் இழந்து தடவிடு
வோரும்
கைகால் முடங்கித் தவித்திடு
வோரும்
புண்களால் தம் எழில் அங்கம்
அழுகிப்
போக்கிட மின்றித் திரிந்திடு
வோரும்
புண்ணிய நம்திரு நாட்டில்
பிறந்த
பொற்புடை மக்கள், அவர்
களின் வாழ்வை
எண்ணியே என்னுடைய
இன்பப் பரிசை
ஏழையர்க் கர்ப்பணம் செய்
குவன் இன்றே!''

என்று உணர்ச்சியோடு கூறி விட்டு அந்தப் பதக்கத்தை விழாத் தலைவரிடம் கொடுத்தார்.

கனகசபை எழுந்து, தமது செம்பட்டுக் கிராமம் நல்ல முன்னேற்றமும், குடும்பக் கட்டுப்பாடு, சமூகசேவை, ஊனமுற்றோர்க்கு நிதி, போன்றவற்றுள் முன்னோடியாகத் திகழ்வதற்கு மணவாளரே காரணம் என்றார். அவருடைய சேவை விலைமதிக்க முடியாதது. அவருடைய வழியைப் பின்பற்றி ஒவ்வொருவரும் நடந்து வந்தால் இந்த நாடு வெகு விரைவில் ஒரு பொற்காலத்தைக் காணும் என்று கூறி முடித்தார் பண்ணையார்.

**ஓமியோபதி மருத்துவக் கல்லூரியும் அதனுடன் இணைந்த 50 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையும் நிறுவ, தமிழ்நாடு ஓமியோபதி குழுவிடமிருந்து வரப் பெற்ற செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.**

**இன்னும் இரண்டு மாதத்தில் இக்கல்லூரி துவக்கப்படும்.**


# சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை.) எண் 151

**தபால் பை எண் : 171** **தொலைபேசி எண் : 2402**

## சேலம்-1.

**கிளைகள் :** நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணபுரம், சிறப்பு அங்காடி, சேலம் கடை வீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்பேட்டை, சேலம்-2, பெத்தநாயக்கன்பாளையம், மேட்டூர், டேம், நாமகிரிபேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

**சொந்த நிதி ரூ. 327 லட்சம்.** **நடைமுறை மூலதனம் ரூ. 1,711 லட்சம்.**

**வட்டி விகித அட்டவணை 16-1-75 தேதி முதல்.**

| | | |
|---|---|---|
| **கால் டெபாசிட்டுகள் :** | ரூ. 5,000-க்கும் அதற்கு மேலும் மேற்பட்ட தொகைக்கும் (முன் அறிவிப்பு இல்லாமல்) | $3\frac{1}{4}\%$ |
| | ரூ. 10,000-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) | $3\frac{1}{2}\%$ |
| **சீசன் டெபாசிட்டுகள் :** | ரூ. 1,000-க்கும் அதற்கு மேலும் 15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும் | $3\%$ |
| | 46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும் | $3\frac{1}{2}\%$ |

**பிக்செட் டெபாசிட்டுகள் :**
1. 61 மாதங்களுக்கு மேல்...... $10\frac{1}{2}\%$
2. 36 முதல் 61 மாதங்களுக்குள் $9\frac{1}{2}\%$
3. 12 முதல் 36 மாதங்களுக்குள் $8\frac{1}{2}\%$
4. 9 முதல் 12 மாதங்களுக்குள் $7\frac{1}{2}\%$
5. 6 முதல் 9 மாதங்களுக்குள் $6\frac{1}{2}\%$
6. 91 நாட்கள் முதல் 6 மாதங்களுக்குள் $6\%$

**நடப்புக் கணக்கு** $\frac{1}{2}\%$ **சேமிப்புக் கணக்கு** $5\frac{1}{2}\%$

*ரூ. 5,000/-க்கு மேல் கால் டெபாசிட்டுகளும் ரூ. 1,000/-க்கு மேல் 15 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை சீசன் டெபாசிட்டுகளும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. *ரூ. 500/-, ரூ. 5,000/- மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவசப் பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு. *பிக்செட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு. *ரெக்கரிங், பிராவிடெண்ட் டெபாசிட்டுகளும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. *இதர விவரங்களுக்கு எமது தலைமை மற்றும் 31 கிளைகளிலும் தொடர்பு கொள்க.

**எம். அய்யனார்,**
துணைப் பதிவாளர்
நிர்வாக அதிகாரி.

**எஸ். ஆறுமுகம் எம்.எல்.ஏ,**
தலைவர்.

**கே. இராசப்பன், எம்.ஏ.,**
சி.ஏ.ஐ.ஐ.பி., சி.சி.,
உதவிச் செயலாளர்.



# இன்றைய சேமிப்பு நாளைய மகிழ்ச்சி!!



## வளமான நல்வாழ்வுக்கு வழிகாட்டும்

## சிறப்புமிக்க திட்டம் சிறுசேமிப்புத் திட்டம்

### தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு 'அதிக வட்டி' அளிக்கப்படுகிறது.

*சிறு சேமிப்புத் தரும் சீரிய திட்டங்களில் இரண்டு தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெக்கரிங் டெபாசிட் திட்டம்) வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.*

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ | ரூ | ரூ |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | . . . |
| | 10/- | 750/- | . . . |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | . . . | 825/- |
| | 10/- | . . . | 1, 650/- |

சலுகைகள்

1. தற்போது 1. 7. 1972 க்கு பிறகு ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் கணக்கு துவக்கியவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்தத் தேதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் நடைமுறையில் இருந்துவரும் ரெக்கரிங் டிபாசிட் கணக்குகளுக்கும் இத்திட்டச்சலுகை கிட்டும். **இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்ப தில்லை.** சம்பளப்பட்டியல் மூலம் இத்திட்டத்தில் சேரலாம்.


2. வளரும் மாதச் சேமிப்புத் திட்டத்தின் மூலம் சேமிப்பவர்கள் செலுத்தும் தொகைக்கு ரூ. 20, 000 வரை வரிச் சலுகை உண்டு. இத்திட்டத்திலும் சம்பளப்பட்டியல் மூலம் சேரலாம்.

இப்போது தபால் நிலைய காலவரை வைப்புத் திட்டத்திற்கு 10% வட்டி அளிக்கப் படுகிறது.

உங்கள் குழந்தைகளின் சீர்மிகு வாழ்விற்காகவும்
நாடும் வீடும் வளம் பெறவும்,

''இன்றே ஒரு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்''

**இயக்குநர்,**
**சிறு சேமிப்புத் துறை,**
**அண்ணா சாலை, சென்னை-2.**



# வறட்சி நிவாரணப் பணிகள்

**வட ஆர்க்காடு மாவட்டத்தில்**

வட ஆர்க்காடு மாவட்டம்—இராணிப்பேட்டை தோட்டத்தில் வாலாஜாப்பேட்டை, ஆர்க்காடு ஆகிய பகுதிகளில் வறட்சி நிவாரணப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வாலாஜாப்பேட்டை வட்டத்தில் குடிதண்ணீர்த்திட்டத்திற்கு ரூ. 14,000 ஒதுக்கப்பட்டுள்ளது. செங்காடு, முகாந்தாபுரம் ரயில்வே நிலையம் ஆகிய இடங்களில் கிணற்றில் துளை போடும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒரு கிணற்றில் சுமார் 40 அடி வரை துளை போட்டு, மற்றொரு கிணற்றில் துளை போடும் வேலை நடைபெறுகிறது. அருங்குன்றம் கிராமத்தில் கிணறுகளில் துளை பேடும் வேலை முடிந்துவிட்டது. கீழ்க் குப்பம், அருந்ததையூர், மாலைவேடு ஆகிய கிராமங்களில் துளை போடும் வேலை நடைபெற்று வருகிறது. வெப்பூரில் கிணற்றில் துளைபோட்டு நல்ல ஊற்று உள்ளது.


புதிய கிணறுகள் தோண்டுதற்கு ரூ. 44,000 ஒதுக்கப்பட்டுள்ளது. செட்டித்தாங்கல் கிராமத்தில் புதிய கிணறுகள் தோண்டும் வேலை ரூ. 4,000. செலவில் 25 அடி, 20 அடி ஆழத்தில் இரண்டு கிணறுகள் தோண்டப்பட்டு வருகிறது. வெப்பூரிலும் அயிலம் ரோடு ஓரத்தில் ரூ. 10,000 செலவில் புதிய கிணறுகள் தோண்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 25,000-ல் வன்னிவேடு பெரிய ஏரி, வன்னி வேடுசின்ன ஏரி, செட்டித்தாங்கல் கசம், வானம்பாடி குளம் ஆகிய இடங்களில் தூர் சம்பந்தமான வேலைகள் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. பொன்னபாடி, அத்திதாங்கல் ஒல்லை ஆகிய இடங்களில் வேலை நடைபெற்று வருகிறது.

வானபாடியிலிருந்து, இராணிப்பேட்டை, பொன்னைரோடு போடுவதற்கு ரூ. 3,000 மதிப்பில் வேலை ஆரம்பிக்கப்பட்டு ஏறத்தாழ வேலை முடிவடையும் நிலையில் உள்ளது. சுமைதாங்கி அரிசனக் குடியிருப்பு சாலை போடும் வேலை ரூ.2,000 செலவில் 16—1—75 அன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. செட்டித்தாங்கலிலிருந்து வானபாடி ரோடு ரூ. 2,000 மதிப்பில் ரோடு போடும் வேலை தொடங்கப்பட்டு உள்ளது. சத்தியவேடுவிலிருந்து திருப்பாமலை 3.2 கிலோ மீட்டர் தூரமுள்ள ரோடு வேலை நடைபெறுவதற்கு ரூ. 2,000 ஒதுக்கப்பட்டு வேலை நடைபெற்று வருகின்றது.

**நெல்லை மாவட்டத்தில்**

திருநெல்வேலி மாவட்டத்தில் வறட்சிப் பகுதிகளில் துயர் துடைக்கும் பணிகள் மிக










விரைவாக நடைபெற்று வருகின்றன.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பழைய கிணறுகள் ஆழப்படுத்தவும், புதிய கிணறுகள் தோண்டவும் ஆக 995 வேலைகள் ரூ. 26,92,000 மதிப்பீட்டில் தொழில் நுட்ப அனுமதியும் நிர்வாக அனுமதியும் வழங்கியதில் இதுவரை 465 வேலைகள் ரூ. 12,61,000 மதிப்பீட்டில் ரூ. 2,25,800 செலவு செய்யப்பட்டு வேலைகளை துரிதப்படுத்தப்பட்டு வருகிறது.

ஊராட்சி ஒன்றியங்களுக்கு உரிமையான சிறிய ஆயக்கட்டுகளிலும் பொதுப் பணித்துறையைச் சேர்ந்த பெரிய ஆயக்கட்டுகளிலும் மராமத்துச் செய்ய 451 வேலைகள் ரூ. 33,42,700 மதிப்பீட்டில் தொழில் நுட்ப அனுமதியும் நிர்வாக அனுமதியும் வழங்கி, அதில் 341 வேலைகள் ரூபாய் 19,14,100 மதிப்பீட்டில் ரூ. 4,96,300-க்கு வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

ஊராட்சி ஒன்றியங்களில் பழுதடைந்த இணைப்பு ரோடுகளைச் செப்பனிடவும் மணல் ரோடுகளை மெட்டல் ரோடாகச் சீர்திருத்தவும் 103 வேலைகள் ரூ. 7,05,000 மதிப்பீட்டில் தொழில் நுட்ப அனுமதியும் நிர்வாக அனுமதியும் வழங்கி அதில் 58 வேலைகள் ரூபாய் 3,57,600 மதிப்பீட்டில் ரூ. 19,900-க்கு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 1,549 வேலைகள் வறட்சி நிவாரணப் பணியில் ரூ. 67,40,200 மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 864 வேலைகள் ரூ. 35,32,700 மதிப்பீட்டில் வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

**செங்கற்பட்டு மாவட்டத்தில்**

செங்கை மாவட்ட வறட்சி நிவாரணப் பணிகளுக்காகத் தமிழ் நாடு மேலும் ரூ. 42 இலட்சம் ஒதுக்கி இருக்கிறது. ஏற்கனவே ரூ. 23 இலட்சம் ஒதுக்கப்பட்டது. கிணறுகள் தோண்டுவது, நீர்ப்பாசனக் குளங்களை தூர் எடுப்பது, சாலைகள் சீர்ப்படுத்துதல் போன்ற பணிகளுடன் குடிதண்ணீர் சப்ளை வசதிக்காகவும் ரூ. 20 இலட்சம் இதுவரை செலவு செய்யப்பட்டுள்ளது. புதிதாகவும் ரூ. 43 இலட்சத்தில் குடிநீர் திட்டத்திற்கு ரூ. 18 இலட்சமும், சிறிய நீர்ப்பாசன திட்டங்களுக்கு ரூ. 12 இலட்சமும், பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ரூ. 6 இலட்சமும், சாலைகளுக்கு ரூ. 5 இலட்சமும், மண் அரிப்புப் பணிக்கு ரூ. 1 இலட்சமும் செலவு செய்யப்படும். மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் குறிப்பிடப்பட்ட திட்டங்களுக்காகச் செலவு செய்யப் பகிர்ந்து அளிக்கப்படுகிறது.

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**

வறட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள இரு மாவட்டங்களில் இப்புதுக்கோட்டை மாவட்டமும் ஒன்றாகும். தமிழ்நாடு அரசு இம்மாவட்டத்திற்கென ஒதுக்கியுள்ள 54.5 இலட்ச ரூபாய் (இரு தவணைகளிலும் சேர்த்து) மாவட்டத்திலுள்ள பத்து ஒன்றியங்களுக்கும் நிவாரணப் பணிகள் நிமித்தமாகச் செலவிட ஒதுக்கீடு செய்யப்பட்டு விட்டன.

பழைய கிணறுகளை ஆழப்படுத்தல், புதிய கிணறுகளைத் தோண்டுதல், சிறிய நீர்ப்பாசனத் திட்ட வேலைகள், குடிநீர் ஊருணிகளை ஆழப்படுத்துதல், புதிய சாலைகள் அமைப்பது மூலம் பணி வாய்ப்பு ஏற்படுத்துதல் போன்ற பல வழிகளில் நிவாரணப் பணிகள் திட்டமிடப்பட்டு அவைகளுள் பழைய கிணறுகளை ஆழப்படுத்துதல், ஊருணிகளை ஆழப்படுத்துதல் போன்ற பணிகள் பல தொடங்கப்பட்டு விட்டன. அவை தொடர்பான ஒரு சில பணிகளும் செய்து முடிக்கப்பட்டுவிட்டன.

# அய்யங்கார்குளம் மகளிர் மன்றம்



அவள் ஒரு கிராம சேவிகை. தான் பெறும் ஊதியத்திற்காக உழைக்கிறோம் என்று என்றைது பெருந்தொண்டாகக் கருதி அதிலேயே ஒன்றிவிட்ட ஒருத்தி.

சமூகசேவையில் ஒவ்வொருவரும் உணர வேண்டிய உணர்வு இது.

அவள் நடந்து செல்லும் பாதையில் எதிர்ப்பட்ட இடர்கள் பலப்பல. பொறுமையுடனும் புன்னகை பூத்த முகத்துடனும் இடர்களைத் தாண்டிச் சாதித்த சாதனைகள் அநேகம்.

மகளிர் நலத்தில் தலையாய் இருப்பது மகளிர் மன்றமே. வீடுகளுக்குச் சென்று தனிப்பட்ட முறையில் சந்தித்து நம்பிக்கை பெறப் பழகி அதன் பின்னர் அறிவுரைகளால்-அன்புரைகளால் மனையியல் கற்பிப்பது ஒருமுறை. கூட்டு முறையில் மனையியலைக் கற்பிக்கும் இடமே மகளிர் மன்றம்.

“மகளிர் மன்றத்திற்கு வாருங்கள்” இந்த அழைப்பிற்குக் கிடைக்கும் வரவேற்பு தொடக்கத்தில் துன்பத்தையே கொடுக்கும்.

“உன் சங்கத்துக்கு வந்தா சோறு போடுவாயா?”

“அந்தக் காலத்துலே சங்கம் இருந்துதா? அப்போ பெண்களுக்கு ஒண்ணும் தெரியாதா? குடும்பம் நடத்தலையா? இந்தக் கத்துக்குட்டிங்க வந்து தான் கத்துக் கொடுக்கணுமா?”

“சங்கத்துக்குப் போனா பெரியவங்களுக்கு அடங்கமாட்டாங்க. புருஷனை மதிக்க மாட்டாங்க.”

“பெண்கள் கூடினா வம்பு தான் வரும் வீணா சண்டை எதுக்கு?”

“சங்கத்துக்கு வந்தா வரும்படி வருமா?”

இத்தகைய எதிர்ப்புகளுக்கு மத்தியில்தான் மகளிர் மன்றம் தோன்றும். மன்றத்தைத் தொடங்குபவரோ அதில் சேர்ந்து பணியாற்ற விரும்புகின்றவர்களோ கேள்விக் கணைகளைக் கண்டு பயந்து ஒதுங்கிவிடாது தொடர்ந்து நடத்தினால் கிராமத்தில் அதனைப் போன்று ஒரு சிறந்த நிறுவனம் இல்லையென்பதைக் காணமுடியும்.

செங்கை மாவட்டம் அய்யங்கார் குளத்தில் இயங்கும் மகளிர் மன்றம் அப்படிப்பட்ட சோதனைகளைத் தாங்கி இன்று வெற்றி நடைபோடுகிறது.

அய்யங்கார்குளம் மகளிர் மன்றச் செயல்களைப் பார்த்தால் ஒரு மகளிர் மன்றத்தால் எவ்வளவு சாதனைகளைப் புரிய முடியுமென்பதைப் பார்க்கலாம்.

ஆரம்பத்தில் மகளிர் மன்றத்திற்கு வரத் தயங்கியவர்கள் இன்று ஆர்வத்துடன் வந்து போவதைக் காணலாம். உறுப்பினர்களில் 30 பேர்களுக்குத் தையல் தொழில் நன்றாகத் தெரியும். மாதந்தோறும் சராசரியாக ரூ. 150 தையல் தொழிலின் மூலமாகச் சம்பாதிக்கின்றனர். இதில்லாமல் அரிசன நலச் சீருடை தைப்பதின் மூலமாக வருடத்திற்கு ரூ. 600 மொத்தமாக ஊதியம் பெறுகின்றனர். ஒவ்வொரு வருட ஊதியத்திலும் நகைகள், பாத்திரங்கள் போன்ற நிலையான பொருட்களாக வாங்கிப் பெருமையுடன் பேணிக் காக்கின்றனர். சொந்தத்தில் தையல்பொறி இயந்திரங்கள் வாங்கி வைத்திருப்பதால் சுற்றிலுமுள்ள கிராமங்களிலிருந்தும் இவர்களுக்கே வேலை தேடி வருவதால் மாதந்தோறும் நிரந்தரமான ஊதியம் பெற்று வருகின்றனர்.

தங்கள் ஊரில் அரசால் நடத்தப்படும் குழந்தைகள் காப்பகத்தை மகளிர் மன்றத்தின் குழந்தையாகவே கருதி அதன் முன்னேற்றத்தில் அக்கறை காட்டி வருகின்றனர். ஊராட்சித் தலைவரும் தனி அக்கறை எடுத்துக் கொண்டு குழந்தைகள் காப்பகத்தைக் கவனித்து வருகின்றார். மதிய உணவின் பொழுது அவரும் மகளிர் மன்ற உறுப்பினர்களும் வந்து பார்வையிடுவார்கள். ஊரில் ஆதரவற்ற பெண்கள், ஆதரவற்ற குழந்தைகளைக் காணின் உடனே அவர்கள் வளமான வாழ்விற்கு நம்பிக் கையூட்டும் புகலிடம் தேடி அங்கே நிழலில் வாழ ஏற்பாடு செய்கின்றார்கள். கிடைக்கும் வருவாயில் சத்துள்ள உணவு தயாரித்தல், வீட்டுத் தோட்டம், சிறுசேமிப்பு, குடும்பக் கட்டுப்பாடு ஆகிய திட்டங்களில் தீவிரமாகப் பங்கெடுப்பார்கள். ஆண்டுதோறும் சுற்றுலாக்களும் செல்கின்றன. ஒருத்தி மட்டும் வளர்ச்சிக்குப் பொறுப்பானவர் என்று கூறிவிடமுடியாது. வித்திட்டவர் முதல் இன்று பாதுகாப்பவர் வரை எல்லா ஊழியர்களுமே பொறுப்பாவார். ஊழியரிடம் சலிப்புத் தோன்றின் வளர்ச்சியில் தேய்வு தோன்றும். அவர்களின் ஊக்கமும் பொது மக்களின் ஆர்வமும் பொறுமையும்தான் ஒரு நிறுவனத்தை முன்னேறச் செய்ய முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது இந்த மகளிர் மன்றம்.

—ஆயிரம்

# வனம் தரும் வளம்

— ச. அ. ரஹமதுல்லா —

ஒரு நாட்டின் வனம் தரும் வளம், அந்த நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கும், முன்னேற்றத்திற்கும் ஆதாரமாக விளங்குகிறது. ஏனைய வளங்களுக்கும், இதுதான் அடிப்படை என்ற உண்மையை நாம் எல்லாரும் தக்கபடி அறிந்ததாகத் தெரியவில்லை. நாட்டின் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு வனங்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும் என்பது வல்லுநர்களும், மேம்பாடடைந்த நாடுகளும் ஒப்புக்கொண்ட உண்மை. அவ்வாறிருக்க நம் நாட்டில் சுமார் 23 சதவிகிதமே வனப் பிரதேசமாக உள்ளது திருப்தியளிக்கும் நிலை ஆகாது!

மாநில வாரியாகப் பார்த்தால் தமிழ் நாட்டில், வனப் பிரதேசம் சுமார் 16 சத அளவிலேயே உள்ளது. இந்த 16 சத விகித வனப் பகுதியில், பாதியளவு பெயரளவிலேயே வனமாக இருக்கிறது. ஏனெனில், இவற்றில் அடர்ந்த பயன் உள்ள மரங்கள் இல்லை. வனப் பகுதிகள் கிராமங்களை அடுத்து இருப்பதால், காட்டுக் குற்றங்கள் பெருமளவில் பெருகி, வன வளம் குன்ற ஏதுவாகிறது. தமிழ் நாட்டின் வன வளம் பெருக வேண்டுமாயின் இந்நிலை மாற வேண்டும். இதை பெருமளவில் உணர்ந்தே நமது அரசு வன வளம் பெருக்க பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறது.

## முதலாம் ஐந்தாண்டுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் (1951 முதல் 1956 வரை) வன வள முன்னேற்றத்திற்கு அதிக அளவில் கவனம் செலுத்தப்படவில்லையாயினும், பலவகைத் திட்டங்களில் சுமார் 30 இலட்சம் செலவிடப்பட்டது. சவுக்கு, மென்மரம், மிலாறு, நீலகிரி தைல மரம், விறகுக் காடுகள் முதலிய கான் தோட்டங்கள் சுமார் 14,800 எக்டேர் பரப்பில் தோற்றுவிக்கப்பட்டன.

## இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் (1956 முதல் 1961 வரை) அழிந்து போன காடுகளைச் சீர்படுத்தவும், தொழிற்சாலைகளுக்குத் தேவையான மரங்கள், விலை மதிப்பு வாய்ந்த மரங்கள் ஆகியவற்றை வளர்க்கவும், வன விலங்குகளைப் பாதுகாக்கவும், அவைகளின் புகலிடங்களைச் செம்மைப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், மண் வளப் பாதுகாப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டங்களின் கீழ் 1.47 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. இத் திட்டத்தில், அந்நியச் செலாவணி அள்ளிக் கொடுக்கிற முந்திரி, அரக்கு முதலியவைகளை உற்பத்தி செய்வதில் ஆர்வம் காட்டப்பட்டது. சுமார் 19,102 எக்டேர் பரப்பில் செங்கற்பட்டு, தென்னார்க்காடு, தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் முந்திரி பயிரிடப்பட்டன. நதிக் கரை, ஏரிக்கரை, கால்வாய் ஓரங்களில் 1,554 எக்டேர் பரப்பில் மரங்கள் பயிராக்கப்பட்டன. தேக்கு மற்றும் கடின மரங்கள் 2,587 எக்டேர் பரப்பிலும், மென் மரங்கள் 3,230 எக்டேர் பரப்பிலும் தொழிற்சாலைகளுக்கு உதவும் மரக்கூழ் தயாரிக்கப் பயன்படும் மரங்களான மிலாறு, கற்பூர மரங்கள் ஆகியவற்றை 9,348 எக்டேர் பரப்பிலும் வளர்க்கப்பட்டன. பண்ணைக் காடுகள் 934 எக்டேரிலும், நில அரிப்பைத் தடுக்கும் மண் வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் விறகுக் காடுகள், கால்நடை தீவனப் பயிர்கள், சவுக்குத் தோட்டங்கள் போன்றவற்றை 30,677 எக்டேர் பரப்பிலும் எழுப்பப்பட்டன.

## மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்

வனப் பொருட்களை, அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளுக்கு கச்சாப் பொருள்கள் வழங்க விரைந்து வளரும் மரத் தோட்டங்களை எழுப்புவதும், விறகுக்கான மரம், விலை மதிப்புள்ள தடி மரம் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்குவதும், மண் வளப் பாதுகாப்புத் திட்டங்களைச் சீரிய முறையில் செயலாற்றுவதும் மூன்றாவது திட்டத்தின் (1961 முதல் 1966 வரை) முக்கிய நோக்கங்களுக்காக இருந்தன.

வனப் பண்ணைகள் மற்றும் வனங்கள் விரிவுபடுத்தும் திட்டங்களை மிகப் பெரிய அளவில் நிறைவேற்றவும், அதன் மூலம் கிராம மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், வன விலங்கு சரணாலயங்களின் நிலையை முன்னேற்றுவதிலும் முழுக் கவனம் செலுத்தப்பட்டது. இத்திட்டங்களை நிறைவேற்ற 3.72 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் எழுப்பப்பட்ட வனப் பண்ணைத் தோட்டங்களின் பரப்பு 19,340 எக்டேர்கள் ஆகும். தேக்கு, மென்மரம், சவுக்கு, மிளாறு, கற்பூரம், மூங்கில் ஆகியவை 17,326 எக்டேர்கள் பரப்பில் வளர்க்கப்பட்



டன. ரப்பர் தோட்டம் 1,190 எக்டேர் பரப்பில் ஏற்படுத்தப் பட்டது. விறகு மரக் காடுகள், மேய்ச்சல் நிலங்கள், மற்றும் சீர்கெட்டுப் போன காடுகள் மீட்பு வேலைகள் முதலியவை 10,459 எக்டேர் பரப்பில் மேற்கொள்ளப் பட்டுள்ளன. விரைவில் வளரும் மரக்காடுகள் 1,775 எக்டேர் பரப்பில் தோற்றுவிக்கப்பட்டன. மத்திய அரசு உதவியுடன் விறகு மரக் காடுகள் 19,146 எக்டேர் பரப்பில் வளர்க்கப் பட்டுள்ளன. முந்திரி, அரக்கு மரங்கள் 5,397 எக்டேர் பரப்பில் பயிர் செய்யப்பட்டுள்ளன.

## ஆண்டுத் திட்டங்கள்

1966 முதல் 1969 வரையான மூன்றாண்டுக்காலங்களில், மூன்றும் ஐந்தாண்டுத் திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆக்கப் பணிகள் தொடர்ந்து செய்யப்பட்டன. இத்திட்டத்தில் வன வள முன்னேற்றத்திற்காக 2.37 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மரக் கூழ் தயாரிக்கப் பயன்படும் விரைவில் வளரும் மரத்தோட்டங்கள், மற்றும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மரத் தோட்டங்கள் எழுப்புவதில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.



## நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் (1969 முதல் 1974 வரை) மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில் செய்யப் பட்ட பணிகள் தொடர்ந்து செய்யப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் தேக்கு, மென்மரம், சவுக்கு, மிலாறு, விரைவில் வளரும் மரங்கள், சந்தனம், ரப்பர், தேயிலை, முந்திரி மற்றும் வனப் பண்ணை, கான் தோட்டங்கள் முதலியவை 50,865 எக்டேர் பரப்பில் எழுப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் சுமார் 4.97கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

## பொருளாதார முன்னேற்றம்

இவ்வாறு, நான்கு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் பயிரிடப்பட்ட தோட்டங்கள், தமிழ்நாடு வனத் துறையின் வருவாயை அதிகரித்திருப்பதோடல்லாமல், வனப்பொருட்களை அடிப்படையாகக்கொண்டு தொழிற்சாலைகளுக்கு கச்சாப் பொருள்களை நல்கி, தொழில் வளர்ச்சிக்கு மூலகாரணமாக உதவியுள்ளன. இவ்வாறு வனத்துறையின் வருவாயை அதிகரிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கும் பொருளாதார முக்கியத்துவம் பெற்ற தேக்கு, முந்திரி, கற்பூர மரங்கள், மிலாறு மரங்கள், சந்தன மரங்கள், சவுக்கு, ரப்பர், தேயிலை வனப் பண்ணைக் காடுகள் முதலியவற்றின் கான் தோட்டங்கள் எழுப்புவதற்கான செலவு, அத்தோட்டங்களிலிருந்து கிடைக்கும் வரவு, நிகர இலாபம் ஆகியவற்றைச் சிறிது ஆராய்வோம்.

## தேக்கு

தேக்கு மரம், தென் இந்தியாவில் காணப்படும் கடின மரங்களில் மிகவும் முக்கியமானது. உலகத்திலேயே தேக்கு மரம் போல் எல்லா நல்ல குணங்களையும் ஒருங்கே பெற்ற மற்றெந்த மரமும் இல்லை! இம் மரம் கட்டட வேலைகட்கும், மேஜை, நாற்காலி போன்ற பலவகையான பொருட்கள் செய்யவும், மற்றும் பல் வகையான உபயோகத்துக்கும் பயன்படுத்தப்படுகின்றது. நம் தமிழ் நாட்டிற்கு 2.98 லட்சம் டன்கள் தேக்கு தேவைப்பட்டாலும் தமிழ் நாடு வனத் துறையால் 0.70 இலட்சம் டன்களே வழங்கப் பட்டு வருகிறது. இது வரை சுமார் 8,163 எக்டேர் நிலத்தில் தேக்கு மரம் பயிரிடப் பட்டுள்ளது. ஒரு எக்டேர் தேக்கு பயிரிட சுமார் ரூபாய் 600 செலவிடப்பட்டு வருகின்றது. ஆயினும் பெரும்பாலான இடங்களில்—அதாவது தஞ்சை மாவட்டம் தவிர மற்ற இடங்களில்—அதே ஆண்டில் குமரி விவசாயம் மூலம் எக்டேருக்கு ரூபாய் 600 வருவாய்கிடைத்து வருகிறது. தேக்கு மரங்கள் பயிராக்கப்பட்ட 40 அல்லது 80 ஆண்டு கழித்து வெட்டப் படுகின்றன. இடையில் குறிப்பிட்ட ஆண்டுகளில் அடர்த்தியைக் குறைப்பதற்காகச் சில மரங்கள் வெட்டப்படுகின்றன. இதனால் இடையில் வருவாய் கிடைக்கின்றது. 40ஆண்டுகள் கழித்து தேக்கு மரங்கள் வெட்டப்படும் போது ஒருஎக்டேரில் இருந்து சுமார் 15,000 ரூபாயும், 80 ஆண்டுகள் கழித்து வெட்டப்படும்போது எக்டேர் ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபாய் வருவாயும் கிடைக்கிறது. தேக்கு மரம் ஒரு கன அடி ரூபாய் 30 முதல் 100 வரை —தரத்தைப் பொறுத்து — விற்பனையாகிறது. மூலதனத்திற்கு வட்டி கணக்கிட்டால் தேக்குத்தோட்டம் மூலம் சராசரி 30 சதவீதம் வட்டி கிடைக்கும். இதைப் பயிரிடுவதில் சிரமமும், சிக்கலும் இல்லை.

## முந்திரி

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதின் மூலம் அன்னியச் செலாவணியை ஈட்டித் தரும் பொருள்களில் முந்திரி இரண்டாவது இடத்தை வகிக்கிறது. உலகின் முந்திரி தேவையில், 90 சத அளவை இந்தியாவிலிருந்தே ஏற்றுமதி செய்யப்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இதுவரை 35,908 ஏக்கர் பரப்பில் முந்திரி பயிராக்கப் பட்டுள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மட்டும் சுமார் 14,569 எக்டேர் பரப்பில் முந்திரி பயிர் செய்யப்பட்டுள்ளது. இத் திட்டம் முடிவடையும் தருணத்தில் நமது வனத்துறை சுமார் 4,800 டன்


எடையுள்ள முந்திரிப் பருப்பை உற்பத்தி செய்ய இயலும் என்றும், அதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 72 இலட்சம் ரூபாய் அன்னியச் செலாவணி மிச்சப்படுத்தப்படும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், முந்திரி தொழிற்சாலைகள் இலாபகரமாக நடைபெறவும், ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கவும், நில அரிப்பைத் தடுக்கவும் முந்திரி பயிரிடும் திட்டம் பயன்படும்.

மேலும் முந்திரித் தோலிலிருந்து முந்திரி எண்ணெய் தயார் செய்யப்படுகின்றது. முந்திரிப் பழத்தினின்று 'பென்னி' என்ற ஒரு வகை மது தயாரிக்கப்படுகின்றது. நடுத்தர வயதுள்ள முந்திரி மரங்களில் இருந்து ஆண்டுக்கு ஒரு எக்டேரில் சராசரி 100 கிலோ முந்திரிக் கொட்டை கிடைக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஒரு கிலோ கொட்டை ரூபாய் 4 என்ற வீதத்தில், ஒரு ஆண்டுக்கு ரூபாய் 400 வீதம் 30 ஆண்டு வயது வரை வருவாய் கிடைக்கும் என்றும் மதிப்பிடப்பட்டு உள்ளது. விவசாயத்துக்குத் தகுதியில்லாத மட்ட ரகதரிசுக் காடுகளிலிருந்து கிடைக்கும் இந்த வருவாய் மெச்சத்தக்கதாகும்.

### கற்பூர மரங்கள்

கற்பூர மரம் மென்மரங்கள் வகையைச் சார்ந்தது. இது விரைவில் வளர்ந்து அதிக அளவு உற்பத்தியைத் தரக்கூடிய மரங்களாகும். இம்மரங்கள் காகிதம் மற்றும் 'ரேயான்' செய்யப் பயன்படும் மரக்கூழ் தயாரிக்க உதவுவதால், இவை காகிதம் மற்றும் 'ரேயான்' தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கு மூலகாரணமாக உள்ளன. இது 8 ஆண்டுகளில் முழு வளர்ச்சி அடைந்து அதிக அளவில் உற்பத்தியைக் கொடுப்பதுடன், வெட்டி விடப்பட்டபின் மீண்டும் தானாகவே வளர்வதால் இத்தோட்டங்கள் எழுப்ப செய்யப்படும் செலவும குறைவதுடன், அதிக இலாபமும் கிடைக்கின்றது.

ஒரு எக்டேர் நிலத்தில் கற்பூர மரம் பயிர் செய்யப்படுவதற்கு ஆகும் செலவு சுமார் ரூபாய் 800 ஆகும். 10 ஆண்டுக்குப்பின் ஒரு எக்டேரில் உள்ள கற்பூர மரங்களை 'ரேயான்' தொழிற்சாலைக்குக் கொடுப்பதன் மூலம் கிடைக்கும் வருவாய் ரூபாய் 1,875 ஆகும். இதுபோல் ஒருமுறை எழுப்பப்பட்ட தோட்டத்தில் நான்கு முறை உற்பத்தி கிடைப்பதால் ரூபாய் 7,500 கிடைக்கின்றது. இதனால் நிகர இலாபம் சுமார் ரூபாய் 7,000 ஆகும். ஆனால் இந்த மரத்தை ஏலத்தில் விறகுக்காக விற்றால் 10 ஆண்டுக்கு ஒருமுறை ரூபாய் 6,000 முதல்



ரூபாய் 10,000 வரை வருவாய் கிடைக்கும்.

### மிலாறு மரங்கள்

மிலாறு மரங்கள் தமிழ்நாட்டில் நீலகிரி மலைத் தொடரிலும், பழனி மலைத் தொடரிலும் பயிராக்கப்பட்டு வருகின்றன. இதுகாறும் சுமார் 23,250 எக்டேர் பரப்பில் மிலாறு பயிர் செய்யப்பட்டுள்ளது. இம்மரத்தின் பட்டை, தோல் பதனிடும் பொருள் தயாரிப்பதில் முக்கிய அங்கம் வகிக்கின்றது. பட்டை உரிக்கப்பட்ட மரப்பகுதி மரக்கூழ் தயாரிப்பதற்குப் பயன்படுகின்றது.

ஒரு எக்டேர் நிலத்தில் இம்மரம் பயிர்செய்ய ரூபாய் 600/- செலவாகிறது.
மேலும் இரண்டாம் முறை பயிராக்க ஏற்படும் செலவு எக்டேருக்கு ரூபாய் 100 மட்டுமே ஆகும். ஒரு எக்டேர் நிலத்திலிருந்து 6 டன்கள் எடையுள்ள பட்டையும், 30 டன்கள் எடையுள்ள மரமும் கிடைக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்தத் தோட்டத்தையும் ஏலத்தில் விற்பனை செய்தால் வருவாய் இதைவிட மும்மடங்கு கிடைக்கும்.

### சந்தன மரங்கள்

பண்டைக்காலந் தொட்டு, தமிழ்நாடு சந்தனத்துக்குப் பெயர் போனது! சந்தன மரம் தமிழ்நாட்டில் வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், கோவை, தர்மபுரி, திருநெல்வேலி மாவட்டங்களில் இயற்கையாக வளர்கிறது. வனத்துறையின் வருவாயில் மூன்றில் ஒரு பாகம் சந்தன மர விற்பனையால் கிடைக்கின்றது. ஒவ்வொரு ஆண்டும் ஜூலை, டிசம்பர் மாதங்களில் சத்திய மங்கலம், திருப்பத்தூர் ஆகிய இரு இடங்களில் உள்ள அரசு சந்தன மரக்கிடங்குகளில் சந்தன மரம் விற்பனை செய்யப்படுகின்றன. இயற்கையில் பட்டுப்போன சந்தன மரங்களை வெட்டி எடுத்து விற்பனை செய்யப்படுகின்றன. இயற்கையில் வளரும் மரங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருவதால், சந்தனத் தோட்டங்கள் வளர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆண்டு

ஒன்றுக்கு சுமார் 1,800 டன்கள் சந்தனக்கட்டை கிடைப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. 1974 ஜூலை மாத விற்பனையில் 1 டன் சந்தன மரம் சராசரியாக 50,000 ரூபாய்க்கு விற்கப்பட்டுள்ளது. இவ்வாறு மாநிலத்தின் முக்கிய வருவாய் கொடுக்கும் சந்தன மரக்காடுகளைச் செயற்கை முறையில் பயிர் செய்ய எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவு செய்தல் தகும்!

ஒரு எக்டேர் நிலத்தில் சந்தன மரக்காடுகள் எழுப்ப அரசு செய்யும் செலவு ரூபாய் 2,550 ஆகும். சந்தன மரத்திலிருந்து சந்தன எண்ணெய் எடுக்கப்படுகின்றது. இந்த நறுமண எண்ணெயின் ஏற்றுமதியால் நமது நாட்டிற்குக் கிடைக்கும் அன்னியச் செலாவணி அதிகமாகின்றது. சிலைகள், பொம்மைகள் செய்வதற்கும், சந்தன மரக்கட்டை பயன்படுகின்றது. இது தெய்வ வழிபாட்டுக்கும் பயன்படுத்தப்படுகின்றது. சந்தன தோட்டங்கள் இதுவரை அறுவடை செய்யப்படாததால், ஒரு எக்டேரில் எவ்வளவு சந்தன மரம் கிடைக்கும் என்பதைக் கணக்கிட இயலவில்லை.

### சவுக்கு மரக்காடுகள்

சவுக்கு மரங்கள் தமிழ்நாட்டின் வங்கக்கடற்கரையோரப் பகுதிகளில் தனியாரால் பெருமளவிலும், வனத்துறையினரால் சிறிதளவிலும் பயிராக்கப்பட்டு வருகின்றன. சவுக்கு மரம் விரைவில் வளரும் மரமாகவும், அதிக வெப்பம் தரக்கூடிய எரிபொருளாகவும் பயன்படுவதால், மணற்பாங்கான பகுதிகளில் விரைவில் வளருவதாலும் இலாபகரமாகப் பயிராக்கப்படுகின்றன. மேலும் கடற்கரையோரப் பகுதிகளில் ஏற்படும் மண் அரிப்பைத் தடுப்பதில் சவுக்கு மரத் தோட்டங்கள் உதவுகின்றன. சவுக்கு மரங்கள் தமிழ்நாட்டு நகரங்களின் எரிபொருள் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன், அரசின் வருவாயில் கணிசமான தொகையை அளிக்கின்றது.

ஒரு எக்டேர் சவுக்குத் தோட்டம் எழுப்பச் செலவாகும் தொகை ரூபாய் 1,440. 10 ஆண்டுக்குப்பின் ஒரு எக்டேர் சவுக்குத் தோட்டத்தில் கிடைக்கும் வருவாய் ரூபாய் 5,000 ஆகும். ஒரு எக்டேர் சவுக்குத் தோட்டத்தில் கிடைக்கும் நிகரலாபம் ரூபாய் 3,500.

இதுவரை தமிழ்நாட்டில் சவுக்குமரம் 4,348 எக்டேர் பரப்பில் பயிரிடப்பட்டுள்ளது.

### ரப்பர் தோட்டங்கள்

நமது அன்றாட வாழ்க்கைக்குப் பல வகையிலும் பயன்படும் இன்றியமையாப் பொருட்களில் ரப்பரும் ஒன்றாகும். ஆனால் நமது நாட்டில் உற்பத்தியாகும் ரப்பரின் அளவுக்கும், நமது தேவைக்கும் இடையே பெருத்த இடைவெளி இருக்கிறது. இதனால் நாம் பிறநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில் இருந்தோம். இந்நிலையைப் போக்கி, நாம் ரப்பர் உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்காக, கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டங்கள் பெருமளவில் 1960—ஆம் ஆண்டு பயிரிடப்பட்டு சீரிய முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இது அம்மாவட்டத்திலுள்ள ஏழைமக்கட்கு வாழ்வளிப்பதுடன், நாட்டின் வருமானத்தையும் அதிகப்படுத்துகின்றது. இதுவரை வனத்துறையால் எழுப்பப்பட்ட ரப்பர் மரத் தோட்டங்களின் பரப்பு சுமார் 3,226 எக்டேர் ஆகும். இத் தோட்டங்கள் அதிகப் பாலைக் கொடுத்து ரப்பர் உற்பத்தியைப் பெருக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை!

**சிறைக்கைதிகள்**

**பட்டதாரிகள் ஆக....**

1968-ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு வசதிகளைக் கைதிகளுக்குச் செய்து வருகிறது தமிழக அரசு. கைதியாக இருப்பவர்கள் தேர்வு எழுத விரும்பினால், தேர்வுக் கட்டணமும் புத்தகங்களும், தர அரசு முடிவு எடுத்திருக்கிறது.

73-ஆம் ஆண்டுக்குப் பிறகு பல்கலைக் கழகத்தில் நூலஞ்சல் மூலம் படிக்க விரும்பினால் அதற்கும் ஆவன செய்யப்பட்டு வருகிறது.

இப்போது படிப்பவர்களுக்குக் கல்வி வசதி தரப்படுகிறது. எல்லோர்க்கும் கதாகாலட்சேபம் போன்றவை சொல்லப்பட்டு வந்தது. இப்போது அறநூல்களைக் கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பட்டப் படிப்புக்கு உதவி செய்யவும் ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளது.

### தேயிலைத் தோட்டங்கள்

நீலகிரி ஆனமலைத் தொடர்களில் தனியார் தேயிலைத் தோட்டங்கள் பல உண்டு. இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய அகதிகளுக்கு மறுவாழ்வளிக்க நீலகிரி மலையில் 1,500 எக்டேர் பரப்பில் தேயிலைத் தோட்டங்கள் பயிரிடும் பணி தமிழக வனத்துறையால் 1969-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இது காறும் 742 எக்டேர் பரப்புள்ள நிலத்தில் தேயிலைத் தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 1,500 எக்டேர் தேயிலைத் தோட்டம் உண்டாக்க ரூபாய் 6 கோடி செலவாகும். இத்திட்டத்தால் சுமார் 1,750க்கு மேற்பட்ட அகதிக்குடும்பங்கள் வேலைவாய்ப்புப் பெறுவார்கள். இதுவரை 500 அகதிக்குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. ஒரு எக்டேர் தேயிலைத் தோட்டம் எழுப்ப ஆகும் செலவு ரூபாய் 40,325. ஒரு எக்டேர் தேயிலைத் தோட்டத்திலிருந்து 7-வது ஆண்டு முதல் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 5,000-லிருந்து தொடங்கி ரூபாய் 8,000 வரை வருவாய் கிடைக்கும்.

### ஐந்தாவது ஐத்தாண்டுத் திட்டம்

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பண்ணைக்காடுகள், தேக்குமரக்காடுகள். மென்மரக்காடுகள், மிலாறு, மரக்கூழ் தயாரிக்க உதவும் மரம், சந்தனம், ரப்பர் மற்றும் ஏரி, நதி, கால்வாய்க்கரை ஓரத் தோட்டங்கள் வளர்த்தல் ஆகியவற்றிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்ட காலத்தில் பின் கண்ட பரப்பில் மரங்கள் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், 1975-76-ல் செலவிட ஒதுக்கப்பட்டுள்ள தொகை 197 இலட்சம் ரூபாயாகும்.

மேற்கூறிய திட்டங்களை இன்னும் அதிக அளவில், பரந்த இடங்களில், நிறைவேற்ற நல்ல வாய்ப்புகள் உள்ளன. அன்றாட உபயோகத்துக்கும், தொழில் வளர்ச்சிக்கும், நாட்டின் வெப்ப தட்ப நிலை, நீர்நிலைகளைக் கட்டுப்படுத்திடவும், நீர்ப்பாசனம், மின்சார வளர்ச்சிக்கு உறுதுணையாகவும், உதவுவது காடுகளே! வருவாயை அள்ளிக் கொடுப்பதும் அதுவே!

# பழந்தமிழும் பழஞ்சீனமும்

டாக்டர் ந. சஞ்சீவி

ஒப்பியல் இலக்கியம்

திரு கென்னத் கோச் (Kenneth Koch) அவர்களின் 'Rose, where you get that red' —Teaching great poetry to children

என்ற புத்தகம் 1973-ல் அச்சிடப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர் இலக்கியக் கல்வியைக் குழந்தைகட்குக் கற்பிக்கும் கலையில் புது முயற்சிகள் புரிவது போற்றத்தக்கது. சிறப்பாகக் குழந்தைகளையே கவிதைகள் எழுதுமாறு தூண்டுவதன்—வேண்டுவதன் வாயிலாக இவர் கவிதைக் கலையை அவர்கட்குக் கைவந்த கலை ஆக்க முயலும் முயற்சி பாராட்டிப் பின்பற்றத்தக்கது.

ஈண்டு, திரு. கென்னத் கோச்சின் மேற்கண்ட புத்தகத்தில் (புத்தகத் தலைப்பு !) உள்ள ஒரு பழைய சீனக் கவிதையைப் பழந்தமிழ்க் கவிதைப் பகுதிகள் இரண்டோடு ஒப்பிடுவதே நோக்கம்.

ஆசிரியர் தந்துள்ள பழைய சீனப்பாடலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. ஆனால் அப்பாடல் கி.மு. முதல் நூற்றாண்டைச் சார்ந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் சீனாவின் ஒரு பகுதியாகிய யூ என்னுமிடத்தில் உருவாகிய கவிதை அப்பழைய சீனப் பாடல் என்ற செய்தியையும் ஆசிரியர் தந்துள்ளார். அத்துடன் அந்நாட்டில் ஆடவர் நட்புச் செய்யும்போது, மண்மேடு ஒன்று நிறுவி அதன்முன் நிகழ்த்தும் சடங்கு ஒன்றில் முழங்கும் உறுதி மொழியே இக்கவிதை என்ற பெரிய குறிப்பையும் ஆசிரியர் தந்துள்ளார்.

பழஞ்சீனப் பாடல் வருமாறு:

### OATH OF FRIENDSHIP

Shang Ya !
I want to be your friend
For ever and ever without break or decay.
When the hills are all flat
And the rivers are all dry,
When it lightens and thunders in winter,
When it rains and snows in summer,
When Heaven and Earth mingle -
Not till then will I part from you.

— translated by ARTHUR WALEY

மேற்கண்ட பாடலின் தமிழாக்கம்:

பெயர் தெரியாப் புலவர் (கி.மு. முதல் நூற்றாண்டு)

### தோழமைச் சூள்

ஷாங் யா!
நான் உன் நண்பனாய் இருக்க விரும்புகிறேன்
இடைமுறிவும் இடிபாடும் இன்றி எப்போதும் [எப்போதும்
மலைகளெல்லாம் தட்டையாய்த் (தரை மட்டமாய்)
ஆனால், (வற்றாத) ஆறுகளெல்லாம் வறண்டு போனால்,
குளிர்ப்பனிக் காலத்தில்மின்னி இடித்தால்
கோடைக் காலத்தில் மழைகொட்டிப் பனி பெய்தால்
விண்ணும் மண்ணும் விரவினால்
ஆம். அப்படி ஆனால் அன்றி (ல்) உன்னைப் பிரியேன்.


மேற்கண்ட தமிழாக்கத்தில் பிறை வளைவுகளுள் இருப்பன நடைவிளக்கம் கருதி அமைந்தவை. 'அன்றி (ல்)' காதலின் வடிவம் அன்றோ?

இனி மேற்கண்ட சீனப்பாடலின் கருத்தை எதிரொலிக்கும் சங்கத் தமிழ்ப் பாடற் பகுதிகளைக் காண்போம்.

புறநானூற்றில் இரண்டாம் பாடல்; கடவுள் வாழ்த்தைக் கழித்து விட்டால் முதற் பாடல்; பாரதப்போரில் பெருஞ்சோறளித்தவன் என்று கருதப்படும் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகனார் பாடிய பாடலில் எடுத்த எடுப்பிலேயே இயற்கை, மெய்ப்பொருள் மணம் கமழ்கிறது. அதனினும் சிறப்பு, அந்த அடிப்படை இயற்கைகளைப் புலவர் ஓர் அரசனின் அரசியல் ஆட்சியல் ஆற்றலுக்கு உவமையாகப் பயன்படுத்துவதே ஆகும். இந்த இரண்டாம் பாடலிலேயே பிற்பகுதியில் ஆசிரியர் பழஞ்சீனப் பாட்டில் குறிக்கப்படும் உரை உறுதி உரைக்கப்படுகிறது. இவ்வாறு உரைக்கப்படும் உரையில், முறையில் காணப்படும் உவமைகளில் சீனப்பாட்டில் காணப்படும் இயற்கையின் மணம் மட்டுமின்றி அதன் அடியாக ஓங்கி உயரும் ஒழுக்க வாழ்வின் விழுப்பமும் ஒளிவீசுவது ஓரத்தக்கது.

புறம்-3 ல் பாண்டியன் கருங்கையொள் வாள் பெரும்பெயர் வழுதியை இரும்பிடர்த் தலையார் பாடியது. இதில் அரசனுக்குப் புலவர் கூறும் முதல் அறிவுரை, பழஞ்சீனப் பாட்டில் காணப்படும் உரையுறுதியே! அறிவுரை சொல்லும் முறையிலும் உள்ள ஒப்புமை உள்ளத்தக்கது.

புறம்-2, 3 ல் ஒப்புநோக்கத்தக்க பகுதிகள் வருமாறு:



மண்டிணிந்த நிலனும்—
நிலனேந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித்தலை இய தீயும்
தீ முரணிய நீரு மென்றாங்கு
ஐம்பெரும் பூதத் தியற்கை போல
..............................
பாஅல் புளிப்பினும் பகலி ருளினும்
நாஅல் வேத நெறிதி ரியினும்
திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி


புறம்:3.
நிலம் பெயரினும் நின்சொல் பெயரா
பெயர்
(பாண்டியன் கருங்கை ஒள்வாள் பெரும்வழுதி
இரும்பிடர்த்தலையார்)

மேற்கண்ட புறப்பாடல் பகுதிகளின் கருத்துகளை அப்படியே எதிரொலிப்பதாய் அமைந்துள்ளது செல்வக் கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடியுள்ள பதிற்றுப்பத்துப் பாடலின் ஒரு பகுதி. அது வருமாறு:

நிலந்திறம் பெயருங் காலை யாயினும்

கிளந்த சொல்நீ பொய்ப்ப யலையே
(பதிற்றுப்பத்து 63:6—7)

இனிஇந்தப்புறப்பாடல்களில் வரும் இக்கருத்து அகப்பாடல்களிலும் அமைவது இன்பம். இவ் வகையில் சிறந்த எடுத்துக்காட்டு மருங்கூர்ப் பட்டினத்துச் சேந்தன் குமரனார் பாடியுள்ள நற்றிணைப் பாட்டின் (289) தொடக்கப்பகுதி:



அம்ம வாழி தோழி காதலர்
நிலம்புடை பெயர்வ தாயினுங் கூறிய
சொற்புடை பெயர்தலோ இலரே

'நிலம் பெயரினும்' என்று எடுத்தோது முறை சொற்பெயர்தலுக்குத் தொடர்புடைய கருத்துகட்குப் பயன்படுத்தப்படுதற்கும் சங்க இலக்கியச் சான்றுகள் அகத்திலும் உள்ளன; வருமாறு:

1. நிலம்புடை பெயரினும் நீர்தீப் பிறழினும்
இலங்குதிரைப் பெருங்கடற் கெல்லை தோன்றி
னும்
வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை அஞ்சிக்
கேடெவன் உடைத்தோ தோழி......

..............................

ஓங்குமலை நாடனொ டமைந்தநந் தொடர்பே
(குறுந்தொகை 373)

2. நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பா டிற்றே!.... (புறம்-34 : 5—7)

மேற்கண்ட புறப்பாடலில் வரும் 'அறம்பா டிற்றே' என்ற தொடர் எவர்க்கும் திருக்குறளை நினைவுபடுத்தல் இயற்கை. ஒப்புமைக்கு உரிய பொதுமறைப் பாடல் வருமாறு:

ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி எனப்படு வார் (989)

# வறட்சியைப் போக்கிட....

வட ஆர்க்காடு மாவட்டம்—இராணிப்பேட்டைக் கோட்டம், ஆர்க்காடு ஊராட்சி ஒன்றியத்தில் வறட்சி நிவாரணப் பணிகள் வெகு வேகமாக நடைபெற்று வருகின்றன.

லப்பாப்பேட்டை அரிசன குடியிருப்பு, கூரமேடு, செம்பேடு, அரிசன குடியிருப்பு தழனூர் ஆயிலம்—புதூர், அரப்பாக்கம், அனந்ததாங்கல் மோட்டூர், கிருஷ்ணபுரம், தாஜ்புரா, சாத்தூர் (காந்தி நகர்), சாத்தூர் (கட்டபொம்மன் நகர்), ஆயிலம் மலைமேடு, தாஜ்புரா, வேப்பூர் அரிசன குடியிருப்பு ஆகிய இடங்களில் புதிய கிணறுகள் தோண்டப்பட்டு வேலை நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

மாங்காடு—தாமரைக்குளம், கரிக்கத்தாங்கல், அத்தித்தாங்கல், பத்தியவாடி, புன்னப்பாடி, செம்பேடு, மாங்காடு—ஜம்புகுளம், மாங்காடு—வண்ணியர்குளம், அத்தித்தாங்கல், அத்தித்தாங்கல்—குள்ளக்குளம் ஆகிய இடங்களில், குளங்களில் தூர் வாரும் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

# வறட்சியைச் சமாளிக்க வாரீர் அனைவரும்!



மாண்புமிகு
வருவாய்த்துறை
அமைச்சர்

## அன்பில் பெ. தர்மலிங்கம்

**1974** ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் வடகிழக்குப் பருவக் காற்று அறவே தவறியது. அக்டோபர் முதல் டிசம்பர் மாதம் வரையிலும் 462 மி.மீ. இயல்பான சராசரி மழைக்குப் பதிலாக 1974-ஆம் ஆண்டு இம்மாதங்களில் பெய்த மொத்த மழையின் அளவு 195 மி.மீ. ஆகும். இந்த மிகக் குறைவான மழைகூட வளரும் பயிர்களுக்கு அவசியமான நாட்களில் அல்லாமல் அங்குமிங்குமாகவும் பெய்தது. இதன் காரணமாக நீர்ப்பாசன ஏரிகளில் தேவையான காலங்களில் தண்ணீர் இல்லாமல், வறண்டு போயின. ஆற்றுப் பாசன சம்பந்தப்பட்ட நீர் நிலைகளில்கூட ஆறுதலளிக்கும் வகையில், நிலைமை அமையவில்லை. வறண்ட நிலப் பகுதிகளில் இயல்பாகவே வறட்சியின் கடுமை அதிகமாய் நிலவிற்று.

1974 டிசம்பர் மாதம் மூன்றும் வாரம், நில வருவாய் வாரிய உறுப்பினர்கள் வறட்சி நிலைமையைக் கண்டறிய மாவட்டந்தோறும் சுற்றுப் பயணம் செய்து அரசுக்கு ஓர் அறிக்கை சமர்ப்பித்தனர். அந்த அறிக்கையின்படி, நிரந்தரமான ஆற்று நீர்ப் பாசன வசதியற்ற, ஆனால் முன்னர் பெய்த பருவ மழையின் காரணமாகவும் அவ்வப்போது பெய்யும் மழைத் தண்ணீரை நீர் நிலைகளில் தேக்கி, அவைகளின் மூலம் வாலாயமாய் குறுகிய கால நெற்பயிர் சாகுபடி செய்யும் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களின் பெரும் பகுதியிலும் சேலம், தர்மபுரி மாவட்டங்களிலும், மேலும் ஆற்று நீர்ப்பாசனவசதியற்றும் சாதாரணமாகத்தென்மேற்குப் பருவமழை பெய்யாத காரணத்தினால் புஞ்செய் தானியங்களைக்கூட விளைவிக்க முடியாத, வடகிழக்குப் பருவ மழையையே நம்பி இருக்கும் பகுதிகளான இராமநாதபுரம், புதுக்கோட்டை, மதுரை ஆகிய மாவட்டங்களின் பெரும் பகுதிகளிலும், மேலும் கோவை மாவட்டங்களிலும் நெல் சாகுபடி செய்யும் சாத்தியக் கூறுகள் இல்லாமல் போய்விட்டது. தென்மேற்குப் பருவமழைத் தண்ணீரைக் கொண்டு பயிரிட்ட புஞ்செய்ப் பயிர்கள் வடகிழக்குப் பருவமழை தவறியதால் அடியோடு காய்ந்துவிட்டன.

பருவமழையை மட்டுமே நம்பியிராத ஆனால் நீர்ப் பிடிப்பு வசதியுள்ள மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் 'மெர்காரா முதலிய பகுதியிலிருந்து உற்பத்தியாகும் நதிகளின் நீரைக் கொண்டு நஞ்செய் தானியம் முக்கியமாக, நெல் சாகுபடி செய்யும் பகுதிகளான தஞ்சை, திருச்சி மாவட்டங்களின் பெரும்பாலான பகுதிகள், திருநெல்வேலி, தென்ஆர்க்காடு, கோவை, மதுரை மற்றும் தருமபுரி மாவட்டங்கள் தவிர தமிழ்நாடு முழுவதுமே வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. ஆற்று நீர்ப் பாசன வசதியுள்ள இம்மாவட்டங்களில்கூட நீண்ட கால நெற்பயிர்கள் அற்பமான மகசூலையே கொடுத்துள்ளன. இரண்டாம் போகப் பயிர்கள் பெரும்பகுதிகளில் சாவியாகிவிட்டன. மழையையே நம்பியுள்ள மானாவாரிப் பயிர்களின் உற்பத்தி அநேகமாக எல்லா மாவட்டங்களிலும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. அரசின் அனுமதியின்பேரில் பல்வேறு கிராமங்களை வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பிரகடனம் செய்துள்ளார்கள். இதுவரை அறிவிக்கப்படாத பகுதிகளையும் நேரில் பார்வையிட்டு அவசியமானல் 15.3.75-க்குள் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளாய் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

மேற்சொன்ன நிலைமையையும், வருவாய் வாரியத்தின் அறிக்கையையும் ஆய்ந்த அரசு, வறட்சிப் பகுதிகளெனப் பிரகடனம் செய்யப்பட்ட பகுதிகளுக்குக் கீழே கூறப்பட்டுள்ள உடனடி நிவாரணங்களை அளிக்க முடிவு செய்தது:—

(அ) நிலச்சுவான்தார்களுக்கு நிலவரி தள்ளுபடி, தண்டல் மற்றும் கடன் பாக்கி வசூல் ஒத்திவைப்பு.


(ஆ) பொதுமக்களுக்குக் குடிநீர் வசதிகளை அமைத்தல்.

(இ) உழவையே நம்பியுள்ள உழவர் பெருமக்களுக்கு வேலைவாய்ப்பினை நல்கிடும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளுதல்.

அங்கீகரிக்கப்பட்ட நிவாரணப் பணிகளில் முதற்கண் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்ட பகுதிகளில்

(அ)1384-ஆம் பசலியில் வசூலிக்கப்பட வேண்டிய சர்க்கார் கடன்கள் பழைய பாக்கி உள்பட, நடப்பு ஆண்டில் வசூலிக்கப்பட வேண்டிய பாக்கி வசூலை அடுத்த பசலிக்கு ஒத்திவைப்பு.

(ஆ) நடப்புப் பசலியில் வசூலிக்கப்பட வேண்டிய கூடுதல் நஞ்செய் தீர்வை உட்பட நிலவரி, நீர்த் தீர்வை, கூடுதல் நீர்த் தீர்வை, நஞ்செய் மற்றும்



புஞ்செய் மானுவாரி நிலங்களுக்கு உள்ளூர் வரி வஜா செய்யப்பட்டுள்ளது. வறட்சிப் பகுதிகளாக அறிவிக்கப்பட்ட பிரதேசங்களில், பஞ்சாயத்துத் தீர்வை மேல்வாரி விதிக்க வேண்டாம் என ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால் உள்ளாட்சிமன்றங்களுக்குச்செலுத்தப்பட வேண்டிய வரியும், மேல் வரியும் இப்பிரதேசங்களில் வசூலிக்கப்படுவதில்லை.

(இ)1383-ஆம்பசலி, அதற்கு முன்னர் உள்ள பசலிகளுக்கும் செலுத்தப்பட வேண்டிய நில வரி வசூல் 1385-ஆம் பசலிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஒத்தி வைக்கப்பட்டதும், வஜா செய்யப்பட்டதுமான வரிப் பணத்தின் சரியான தொகை எவ்வளவு என்பது வறட்சிப் பகுதிகளாக அறிவிக்கப்பட்ட பரப்பளவு, அதற்கான தீர்வை முதலான விவரங்களைக் கொண்டு மதிப்பிடப்பட வேண்டும். ஆயினும் வரி வஜா, உள்ளாட்சி மன்றங்களுக்குச் செலவு ஈடு செய்ய வேண்டிய தொகை, வசூல் ஒத்திவைப்புத் தொகை முதலி சுமார் ரூ. 25 கோடி ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக, உரிய காலங்களில் மழையில்லாத காரணத்தால் வறட்சிப் பகுதிகளில் நில நீர்மட்டம் குறைந்து கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பெருவாரியான கிணறுகள் வற்றி விட்டன. இதுகாறும் வற்றாத சில கிணறுகளிலும், தண்ணீர் மிக ஆழத்தில் உள்ளது. தமிழ் நாட்டில் டிசம்பர், சனவரி மாதங்களில் இம்மாதிரிக் குடிநீர்ப் பிரச்சினை ஏற்படுவது மிகவும் அபூர்வமான நிலையாகும். ஆகையால், வறட்சிப் பிரதேசங்களில்குடிநீர், தட்டுப்பாடில்லாமல் கிடைக்க ஏற்கெனவே உள்ள கிணறுகளை ஆழப்படுத்துவதிலும், மிக அத்தியாவசியமாகத் தேவைப்படும் இடங்களில் புதிய கிணறுகளைத் தோண்டுவதிலும் தீவிர முதல் கவனம் செலுத்தப்படுகிறது.

தண்ணீர்ப் பிரச்சினையைச் சமாளிக்க, வேளாண்மைத் துறையின் பொறியியல் பகுதியும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும், ஊராட்சி ஒன்றியங்களும் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன.

குறைந்த அளவுள்ள துளை போடும் இயந்திரக் கருவிகளும், கைத்துளைக் கருவிகளும் தீவிர மாகத் திட்டப்படி செயலாற்ற போதியவையாக இல்லை. 6 சம்மட்டித் துளை இயந்திரங்களை (Hammer in the hole rings) கடனுக வழங்கவும், 1,000 கைத்துளை (ஜால்ரு வகை) பம்புகளை நன்கொடையாகத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வழங்கும் படியும், மத்தியப் பேரரசின் மூலமாக இந்தியாவில் உள்ள யூனிசெப் ( UNICEF ) நிறுவனத்தாரைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. கர்நாடகம், ஆந்திரம், மராட்டியம் ஆகிய அரசுகளை, இம்மாநிலத்திற்குத் துளைபோடும் இயந்திரக் கருவிகளைத் தாற்காலிக உபயோகத்திற்குக் கொடுத்துதவுமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இராமநாதபுரம் போன்ற பகுதிகளில் தொன்றுதொட்டு மழைநீரை மிக ஆழமில்லாத ஊரணிகளில்தேக்கிக்குடிநீராக உபயோகப்படுத்தும் வழக்கம் உள்ளது. ஆகையால் பெருவாரியான வற்றிப்போன ஊருணிகள் ஆழப்படுத்தப்படுகின்றன. இம்மாதிரித் திட்டங்கள் விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பினை நல்கவும் பயன்படுகின்றன.

நகராட்சி மன்றங்களும் குடிநீர் வழங்குவதில் கடுமையான இடர்ப்பாடுகளைச் சமாளிக்க வேண்டியுள்ளது. சில நகராட்சி மன்றங்களின் நிதி நிலைமை உண்மையில் மோசமாக உள்ளது. நகராட்சிகளின் நிதி உதவிக் கோரிக்கை, தகுதியின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட வேண்டியுள்ளது. பற்றுக்குறை நிதி நிலைமையைச் சமாளிக்க இதுவரை சில நகராட்சிகளுக்கு ரூபாய் 29 இலட்சம் வரை, பாதி கடனுகவும் பாதி மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது. வறட்சிப் பகுதி என அறிவிக்கப்படாத பகுதிகளில் கூட எங்கெங்கு தேவையோ அங்கெல்லாம் குடிநீர் வழங்கும் திட்டங்கள் செயலாற்றப் படுகின்றன. குறிப்பாக, பேரூராட்சிகளில்கூட குடிதண்ணீர் வசதியைப் பெருக்குவதற்கு வேண்டிய நிதி உதவியை வறட்சி துயர் தணிப்பு நிதியிலிருந்து வழங்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

நீலகிரி மாவட்டத்தில் நில வரி ஒத்திவைப்புக்குத் தகுதி பெறும் வகையில், உதகை மற்றும் கூனூர் வட்டங்களில் காபி, தேயிலை முதலான மலைத் தோட்டப் பயிர் செய்யாத பகுதிகள் மட்டும் வறட்சிப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளன. குடிநீரைப் பொறுத்த வரையில் ரூபாய் 15.81 இலட்சம் மதிப்புள்ள வேலைகளைச் செயலாற்ற நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதே போன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் எந்தப் பகுதியும் வறட்சிப் பகுதியாக அறிவிக்கப்படாவிடினும் குடிநீர் வழங்க ரூபாய் 4 இலட்சம் மதிப்புள்ள திட்டங்களை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலே கூறியவாறு 1975-ஆம் ஆண்டு சனவரி முதல் செப்டம்பர் வரை விவசாய வேலைகளின்றி அல்லலுறும் உழவுத் தொழிலாளர்களுக்கும்

சிறு விவசாயிகளுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் நிவாரணப் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள இதுபோன்ற தொழிலாளர்கள் மற்றும் சிறு விவசாயிகளின் பொருளாதார வசதிகளை இம்மாதிரி நிவாரணப் பணிகள் செயலாற்றுவதின் மூலம்தான் அதிகரிக்க இயலும். நிவாரணத்திற்காகச் செயலாற்றப்படும் பணிகள் நாளடைவில் மாநிலத்தில் நிரந்தரமாகப் பயன்படும் நீர்நிலைகள், கிணறுகள், சாலைகள் போன்ற வசதிகளை ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படுகின்றன. சிறுபாசன நிலையங்களின் மேம்பாடு, பொதுப்பணித்துறை வேலைகள், சாலை செப்பனிடும் வேலைகள், மண்வளப் பாதுகாப்பு வேலைகள் இதில் அடங்கும். நிவாரண வேலைகளைத் தேர்ந்தெடுத்து மேற்கொள்ளும்போது, அந்தந்த வட்டாரங்களில் வேளாண்மையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை, பணி தொடங்க வேண்டிய இடங்களின் அமைப்பு, மற்றும் குறித்த வேலையை எத்தனை நாட்களில் முடிக்க இயலும் என்ற நிலைகளை ஆராய்ந்து அதற்கேற்ப மேற்கொள்ளப்படுகின்றன. நிவாரணப் பணியின் அளவு, செலவிடப்படும் மதிப்பீடு முதலியவைகளை வறட்சி நிவாரணப் பணி தொடங்க வேண்டிய இடத்தில் வேளாண்மையைச் சார்ந்த தொழில், மற்றும் இதர தொழிலில் ஈடுபடுவோர்களை நிவாரணத் தொழில்களில் ஈடுபடுத்த வேண்டிய கட்டாயத்தைப் பொறுத்து நிர்ணயிக்கப்படும். கூடியவரையில் நிவாரணப்பணிகளில் உள்ளூர் தொழிலாளிகளுக்கே வேலை வாய்ப்பளிக்க வேண்டுமெனக் கண்டிப்பான உத்தரவு இடப்பட்டிருக்கிறது.

நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட வேண்டிய தொழிலாளர்கள் எண்ணிக்கை, பணியின் கால அளவு இவைகளை மனத்திற் கொண்டு மிகக் குறைந்த கூலியாகிய நாள் ஒன்றுக்கு ஒருவருக்கு ரூபாய் 3/- என்ற அடிப்படையிலும் மாதம் ஒன்றுக்கு 20 நாட்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற அடிப்படையிலும் கணக்கிடும்போது ரூபாய் 55 கோடி இந்தப் பணிகளை மேற்கொள்ளத் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. சாதாரண (Unskilled) வேலைகளை மேற்கொள்ளும் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு ஊதியமாக ரூபாய் 3 க்குக் குறையாமல் கொடுக்கப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. பெரும்பாலான தொழிலாளர்கள் அன்றாடம் அவர்கள் முடிக்கும் பணிகளின் அடிப்படையிலும், நிர்ணயிக்கப்பட்ட விகிதாசாரப்படியும் நாளொன்றுக்கு ரூபாய் 4/-ம் அதற்கு மேலும் பெறுகிறார்கள்.

இவைகளின் அடிப்படையில் குடிநீர் வசதிப் பணிகளுக்கும் மற்ற நிவாரணப் பணிகளுக்கும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு மாநில அரசு தனி ஒதுக்கீடாகக் கீழ்க்கண்டபடி மூன்று தவணைகளில் ரூபாய் 10 கோடி அனுமதித்துள்ளது.

| நாள் | ஒதுக்கிய பணம் (கோடிக் கணக்கில்) |
|---|---|
| 13-12-74 | 3 |
| 4- 1-75 | 2 |
| 7- 2-75 | 5 |
| | 10 |

வறட்சியால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மாவட்ட நிலைமையைப் பற்றிய சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

**செங்கல்பட்டு மாவட்டம் :**

2,199 கிராமங்களில் 1,365 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்திற்கு ஒதுக்கியுள்ள தொகை ரூபாய் 65.00 இலட்சம். இதுகாறும் ரூபாய் 86.92 இலட்சம் மதிப்புள்ள 2,121 வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 22.2.75 வரை ரூபாய் 26.66 இலட்சம் மதிப்புள்ள வேலை செய்யப்பட்டுள்ளது. அதற்கு ரூபாய் 25.18 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**வட ஆர்க்காடு மாவட்டம் :**

1,921 கிராமங்களில் 1,051 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்திற்கு ஒதுக்கியுள்ள தொகை ரூபாய் 65.00 இலட்சம். இதுகாறும் ரூபாய் 62.00 இலட்சம் மதிப்புள்ள 2,188 வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 22.2.75 வரை ரூபாய் 12.99 இலட்சம் மதிப்புள்ள வேலை செய்யப்பட்டுள்ளது. அதற்காக ரூபாய் 6.84 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**தென்னார்க்காடு மாவட்டம் :**

2,391 கிராமங்களில் 1,889 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்திற்கு வறட்சிப் பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூபாய் 90.00 இலட்சம். இதுகாறும் ரூபாய் 76.00 இலட்சம் மதிப்புள்ள 2,591 வேலைகள் அனுமதிக் கப் பட் டுள் ளன. 22-2-75 வரை ரூபாய் 20.88 இலட்சம் மதிப்புள்ள வேலை செய்யப்பட்டுள்ளது. அதற்காக ரூபாய் 9.30 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.


**தஞ்சை மாவட்டம் :** 2,035 கிராமங்களில் 88 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்திற்கு வறட்சிப் பணிக்காக ஒதுக்கப்பட்டது ரூபாய் 45.00 இலட்சம். இதுகாறும் ரூபாய் 57.71 இலட்சம் மதிப்புள்ள 1,065 வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 22-2-75 வரை ரூபாய் 12.65 இலட்சம் மதிப்புள்ள வேலை செய்யப்பட்டு ரூபாய் 12.65 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.



**திருச்சி மாவட்டம் :** 939 கிராமங்களில் 710 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்திற்கு வறட்சிப் பணிக்காக ரூபாய் 75.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுகாறும் ரூபாய் 63.50 இலட்சம் மதிப்புள்ள 1,994 வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 22.2.75 வரை ரூபாய் 28.33 இலட்சம் மதிப்புள்ள வேலை செய்யப்பட்டுள்ளது. அதற்காக ரூபாய் 22.06 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**புதுக்கோட்டை மாவட்டம் :** 713 கிராமங்களில் 626 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்திற்கு வறட்சிப் பணிக்காக ரூபாய் 99.50 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இதுகாறும் ரூபாய் 135.32 இலட்சம் மதிப்புள்ள 3,434 வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 22-2-75 வரை ரூபாய் 7.68 இலட்சம் மதிப்புள்ள வேலை செய்யப்பட்டுள்ளது. அதற்காக ரூபாய் 3.66 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**மதுரை மாவட்டம் :** 1,077 கிராமங்களில் 828 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்திற்கு வறட்சிப் பணிக்காக ரூபாய் 100 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுகாறும் ரூபாய் 92.65 இலட்சம் மதிப்புள்ள 2,953 வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 22-2-75 வரை ரூபாய் 31.32 இலட்சம் மதிப்புள்ள வேலை செய்யப்பட்டு, ரூபாய் 22.96 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.



**இராமநாதபுரம் மாவட்டம் :** 1,370 கிராமங்களில் 1,336 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்திற்கு ஒதுக்கியுள்ளது ரூபாய் 150 இலட்சம். இதுகாறும் ரூபாய் 153.33 இலட்சம் மதிப்புள்ள 5,215 வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 22-2-75 வரை ரூபாய் 56.87 இலட்சம் மதிப்புள்ள வேலை செய்யப்பட்டுள்ளது. அதற்கு ரூபாய் 36.04 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**திருநெல்வேலி மாவட்டம் :** 1045 கிராமங்களில் 293 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்திற்கு ரூபாய் 74.50 இலட்டம் வறட்சிப் பணிக்காக ஒதுக்கப்பட்டது. இதுகாறும் ரூபாய் 97.00 இலட்சம் மதிப்புள்ள 1,298 வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 22-2-75 வரை ரூபாய் 14.98 இலட்சம் மதிப்புள்ள வேலை செய்யப்பட்டுள்ளது. அதற்கு ரூபாய் 4.58 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**சேலம் மாவட்டம் :** 1,019 கிராமங்களில் 992 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் ரூபாய் 70 இலட்சம் வறட்சிப் பணிக்காக ஒதுக்கப்பட்டது. இதுகாறும் ரூபாய் 94.59 இலட்சம் மதிப்புள்ள 2,243 வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 22-2-75 வரை ரூபாய் 13.43 இலட்சம் மதிப்புள்ள வேலை செய்யப்பட்டுள்ளது. அதற்கு ரூபாய் 8.63 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**தருமபுரி மாவட்டம் :** 1,109 கிராமங்களில் 519 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்திற்கு வறட்சிப் பணிக்காக ஒதுக்கப்பட்டது ரூபாய் 30 இலட்சம். இதுகாறும் ரூபாய் 41.73 இலட்சம் மதிப்புள்ள 1,102 வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 22-2-75 வரை ரூபாய் 9.82 இலட்சம் மதிப்புள்ள வேலை செய்யப்பட்டுள்ளது. இதற்கு ரூபாய் 8.66 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**கோவை மாவட்டம் :** 991 கிராமங்களில் 612 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்திற்கு வறட்சிப் பணிக்காக ரூபாய் 100.00 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இதுகாறும் ரூபாய் 164.75 இலட்சம் மதிப்புள்ள 2,478 வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 22-2-75 வரை ரூபாய் 33.50 இலட்சம் மதிப்புள்ள வேலை செய்யப்பட்டுள்ளது. அதற்கு ரூபாய் 23.96 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**நீலகிரி மாவட்டம் :** 54 கிராமங்களில் உதகை, கூனூர் வட்டங்களிலுள்ள 42 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டன. இந்த ஆண்டில் இதுகாறும் ரூபாய் 15.85 இலட்சம் மதிப்புள்ள வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதுவரை ரூபாய் 65 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது.

**கன்னியாகுமரி மாவட்டத்திலும்** குடிநீர் பற்றாக்குறை காரணமாக 124 கிணறுகளை ஆழப்படுத்தும் வேலைக்கு ரூபாய் 4 இலட்சம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

மாநிலத்தில் உள்ள மொத்தம் 17,069 ரெவினியூ கிராமங்களில் 10,968 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளன. வறட்சிப் பணிக்காக ரூபாய் 10 கோடி தனியாக ஒதுக்கப்பட்டது. இதுகாறும் ரூபாய் 11.41 கோடி மதிப்புள்ள 28,735 வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 22-2-75 வரை ரூபாய் 2.70 கோடி மதிப்புள்ள வேலை செய்யப்பட்டு அதற்கு ரூபாய் 1.84 கோடி செலவிடப்பட்டுள்ளது.

நிவாரணப் பணிகளுக்காக மதிப்பிட்ட ரூபாய் 55 கோடியில், ரூபாய் 17 கோடியை 1974-75 ஆண்டிலும் (சனவரி 75-லிருந்து மார்ச்சு 75 முடிய) எஞ்சிய ரூபாய் 38 கோடியை 1975-ஆம் ஆண்டு செப்டம்பர் வரையும் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் தனி ஒதுக்கீடான ரூபாய் 10 கோடி ஏற்கெனவே அரசால் மாவட்டங்களுக்குப் பட்டுவாடா செய்யப்

பட்டது. மேலும் ரூபாய் 7 கோடி 1974-75-ல் இயல்பான ஐந்தாண்டுத் திட்ட வேலைகளுக்கு ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து வறட்சிப் பிரதேசங்களில் மற்றப் பணிகளுக்காக சம்பந்தப்பட்ட துறையினர் மூலம் செலவிடப்படுகிறது. இந்த அடிப்படையில் 1974-75-ம் ஆண்டுக்கு இந்திய அரசு நமக்கு 7.5 கோடி தந்து உதவ வாக்களித்துள்ளது. 1975-76-ஆம் ஆண்டிலும் நிவாரணப் பணிகளின் முன்னேற்றத்தையும் அதற்கான செலவினங்களுக்கான தொகையை அவ்வப்போதே பட்டுவாடா செய்வதற்கேற்ற வகையிலும் இயல்பான நடைமுறை விதிகளைத் தளர்த்தியும் இயன்றவரை வறட்சிப் பணிகள் சம்பந்தப்பட்டுள்ள பல்வேறு அதிகாரிகளே மேற்கொள்ளும் வகையிலும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

வருவாய் வாரிய ஆணையர் ஒருவரை அரசு வறட்சி நிவாரண ஆணையராக நியமித்துள்ளது. அவர் அவ்வப்போது மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கலந்து நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வழிவகை செய்து வருகிறார். அவரே, அரசு மட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிக்காக அலுவலால் வருவாய்த்துறைத் தனிச் செயலாளராகவும் பணியாற்றி வருகிறார். இந்திய அரசுப் பணியைச் சேர்ந்த முதுநிலை அலுவலர் ஒருவர், ஆணையருக்கு வறட்சி நிவாரணப் பணியில் உதவ வேண்டி வருவாய்த்துறை வாரியத்தில் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். மாண்புமிகு மாநில முதலமைச்சர் அவர்களும், இதர அமைச்சர்களும் வறட்சி நிவாரண ஆணையர் முதலியவர்களும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிக்குச் சென்று நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டும் மேற்படி பணிகளை மேற்கொள்ளும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், இதர அலுவலர்களுடன் பேசியும் இந்தப் பணிகளைத் தீவிரப் படுத்தி வருகின்றனர். வறட்சி நிவாரணப் பணிகள் இப்போது விரைவாக நடைபெறுகின்றன. இனிமேல் வாரம் ஒன்றுக்குக் குறைந்த பட்சம் ஒரு கோடி ரூபாய் பெறுமானமுள்ள பணிகள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐந்தாண்டுத் திட்டச் செலவினங்களிலிருந்து நிவாரணப் பணிகளுக்காக ஒதுக்கப்படும் தொகையும் இவ்வாண்டு 31-3-75-க்குள் செலவிடப்படும் என எதிர்பார்க்கலாம்.

வறட்சி நிவாரணப் பணிகள் அந்தந்த வட்டாரங்களின் தேவைகளுக்கேற்பத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. ரூபாய் 5,000 வரையுள்ள பணிகளை வட்டார வளர்ச்சி அலுவலர்களே அனுமதிக்கின்றனர். ரூபாய் 5,000 முதல் ரூபாய் 10,000 வரை மதிப்புள்ள வேலைகளைக் கோட்ட வளர்ச்சி அலுவலர்களும், அதற்குமேற்பட்டு ரூபாய் ஒரு இலட்சம் வரை மதிப்புள்ள வேலைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அனுமதிக்கின்றனர். சம்பந்தப்பட்ட பொறியியல் அலுவலர்களால் மதிப்பீடுகள் தயார் செய்யப்படுகின்றன. வறட்சி நிவாரணப் பணிகள் அவசரமாய் முடிக்க வேண்டியுள்ளதால் ''டெண்டர்கள்'' இன்றி நேரிடையாய் ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்படைக்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. கண்மாய் வேலைகளில் ஆயக்கட்டுதாரர்களின் பிரதிநிதியாக யாராவது முன்வந்தால் அவருக்கே அந்த வேலையை ஒப்படைக்க வகை செய்யப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ்சாயத்துக்களின் சார்பில் வேலைகள் ஒப்புக் கொள்ளலாமே தவிர தன் சொந்தப் பொறுப்பில் ஒப்புக் கொள்ளக் கூடாது எனத் தெளிவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரத்திலும் மேற்கொள்ளப்படும் வேலைகளின் விவரங்களை அந்தந்த வட்டாரத்தில் உள்ள பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள், யாவருக்கும் தெரியப்படுத்தப் படுவதுடன் வாரம் ஒரு முறை கோட்டாட்சித் தலைவர் அலுவலகத்தில் கூடி, எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள், அவைகளின் முன்னேற்றம், ஆன செலவு முதலியன ஆய்வு செய்யப்படுகின்றன. அந்தச் சமயம் பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முதலானோரின் யோசனைகளையும் கேட்டுச் செயலாற்ற வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

வறட்சி நிவாரணப் பணிகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் கூலியைத் தானியங்களாக வழங்க வேண்டும் என்ற யோசனை கூறப்பட்டுள்ளது. ஆனால் அவ்வாறு வழங்குவதில் உள்ள நிர்வாகக் கஷ்டங்கள், அனுபவ சாத்தியங்கள் இவற்றை ஆராய்ந்து செயல்பட வேண்டியுள்ளதால் இந்த யோசனை விவரமாகப் பரிசீலிக்கப்படும்.


இராமநாதபுரம் மாவட்டத்தில் இனி வறட்சியே ஏற்படாதவாறு ஒரு ஐந்தாண்டு திட்டம் தயார் செய்ய வேண்டும் என்ற யோசனையைச் சில உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். ஏற்கெனவே. D.P.A.P. திட்டப்படி இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் திட்டங்கள் தயார் செய்யப் பெற்று அமலாக்கப்படுகின்றன. அம்மாதிரி வறட்சிப்பாங்கான பகுதிகளுக்கான திட்டங்களை அமல் நடத்த மாவட்டங்களை மத்திய அரசுதான் நிர்ணயிக்கிறது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உணவுத் தானியங்களைப் பரவலாக விநியோகம் செய்ய உணவுத் துறை தீவிரமாக நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. நம்முடைய மாநிலத்தில் 37.34 இலட்சம் குடும்பங்களுக்கு, பொது விநியோகத்தின்கீழ் உணவுத் தானியங்கள் முன்பு வழங்கப்பட்டு வந்தன. வறட்சி நிலைமையை முன்னிட்டு, இந்த விநியோகம் விரிவாக்கப்பட்டு, இப்போது 70 இலட்சத்துக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு உணவுத் தானியங்கள் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இந்த விநியோக முறையின் கீழ், பெரும்பாலான இடங்களுக்குக் கோதுமை வழங்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு பிப்ரவரி முதற்கொண்டு 41,000 டன் கோதுமையைப் பொது விநியோகத்திற்காக ஒதுக்கியுள்ளது. கோதுமையைத் தவிர, மற்ற மாநிலங்களிலிருந்து கேழ்வரகு, சோளம், கம்பு, முதலிய சிறு தானியங்களைப் பெருமளவில் வாங்கி, இங்கு விநியோகம் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. வறட்சிப் பகுதியில் ஓரளவாகிலும் அரிசி விநியோகம் செய்வதற்காக மத்திய



அரசு நமக்குக் கணிசமான அளவில் அரிசி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி வருகின்றோம். இதுவரை, மத்திய அரசிடமிருந்து நமக்கு அரிசி எதுவும் கிடைக்கவில்லை. இதற்குத் தனி ஒதுக்கீடு கிடைத்தால் கோதுமை, சிறு தானியங்களுடன் அரிசியையும் சேர்த்து வழங்க வழி ஏற்படும்.


வறட்சியால் பாதிக்கப்பட்ட. இன்றைய கடுமையான நிலைமையை எதிர்த்துப் போராடிச் சமாளிக்க, அரசு ஆவனவெல்லாம் செய்யத் தயங்காது என இம்மன்றத்திற்கு உறுதி கூறுகிறேன். வறட்சி நிவாரணப் பணித் திட்டங்களை துரிதமாகவும், திறமையுடனும் சமாளிக்க இம்மன்றத்தின் அங்கத்தினர்களை அரசுடனும் அதன் அலுவலர்களுடனும் முழு மனத்துடன் ஒத்துழைக்குமாறு வேண்டுகிறேன். வறட்சி நிவாரணப் பணிகளைச்செயலாற்றும் போது நமக்குள் ஏற்பட்டுள்ள அரசியல் வேறுபாடுகள்



குறுக்கே நிற்கவோ, நிற்கவிடவோ மாட்டாது என நிச்சயமாக நம்புகிறேன்.

[ குறிப்பு : மாண்புமிகு தமிழ்நாடு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் 25-2-1975 அன்று, சட்டப் பேரவையில் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குப் பதிலளித்து ஆற்றிய உரை. ]

## சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தில் கிடைத்த விடைகள்



# மனமிருந்தால் வழியுண்டு சேமிக்க

சம்பள தினம் என்ன? எந்த நாளிலும் சேமிக்கலாம், மனம் மட்டும் இருந்தால். சந்தேகமே இல்லை.

சேமிக்கத் தீர்மானியுங்கள். (இன்றே இதைச் செய்யலாமே) சேமிக்கும் தொகையை தபால் நிலைய ரிகரிங் டெபாசிட் கணக்கில் போடுங்கள். மாதம் 10 ரூபாய் போட்டு வந்தால் கணக்குத் தொகை 5 ஆண்டுகளில் 750 ரூபாயாக வளரும். அதாவது, உங்கள் பணத்திற்கு 9.25% தொடர் வட்டி கிடைக்கும.

நீங்கள் 2 ஆண்டுகள் சீராகச் சேமித்தால் சிறியதொரு இன்ஷ்யூரன்ஸ் வசதியும் கிடைக்கும்; கணக்கு வைத்திருப்பவர் ஒரு வேளை அகால மரணம் அடைந்தால், மேற்கொண்டு பணம் செலுத்த வேண்டிய அவசியமின்றி, கணக்கின் முழுத் தொகையான 750 ரூபாயும் அளிக்கப்படும்.

**விவரங்களுக்கு
அருகிலுள்ள
தபால் நிலையத்தில்
விசாரியுங்கள்.**

அல்லது இந்த
முகவரிக்கு எழுதுங்கள்:
**தேசிய சேமிப்பு
நிறுவனம்**
த. பெ. எண் 96
நாக்பூர்

davp 74/309

# புத்துகிராமங்களுக்கு ஒரு தொழிற்சாலை!

எஸ். டி. வைத்திலிங்கம் எம். ஏ. எம். லிட். இணை இயக்குநர் சர்க்கரை (திட்டங்கள்)

சிறிய சர்க்கரை ஆலைகள் இலாபகரமாக இயங்க முடியுமா என்ற ஐயப்பாடு எழுவது இயற்கையே! தமிழ் நாட்டில் பதினாறு சர்க்கரை ஆலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவைகள் பல வகையான உற்பத்தித் திறன்கள் கொண்டவை. 1972-73—ஆம் ஆண்டில் அவற்றில் ஒரு மூட்டை சர்க்கரை உற்பத்திச் செய்ய என்ன செலவாயிற்று என்கிற விவரம் அட்டவணை 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த பதினாறு ஆலைகளில் ஒன்று, நாள் ஒன்றுக்கு 350 டன்னிகள் கரும்பு அறைக்கும் திறன் கொண்ட சிறிய ஆலையாகும். இது மதுரை மாவட்டத்தில் பாண்டியராஜபுரம் என்ற ஊரில், 'மதுரை சுகர்ஸ்' என்ற பெயரில்-'பெரிய ஆலைகள்தான் இலாபகரமாக இயங்க முடியுமென்கிற கூற்றைப் பொய்பித்துக்கொண்டு' நல்ல முறையில் பல ஆண்டுகளாக இயங்கிக் கொண்டு வருகிறது. அந்த ஆலை சம்பந்தப்பட்ட விவரங்களை, பிற பெரிய ஆலைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், சிறிய சர்க்கரை ஆலைகளும் இலாபகரமாக இயங்க முடியும் என்பது புலனாகிறது.

### அட்டவணை—1.

**1972—73 ஆண்டுக்கான விவரங்கள் (தணிக்கை செய்யப்படாத கணக்குகளின் அடிப்படையில்)**

| ஆலைகளின் பெயர். | அரைவைத் திறன் (நாள் ஒன்றுக்கு டன்னிகள்). | அரைத்த கரும்பின் அளவு (இலட்சம் டன்னிகளில்). | உற்பத்தி செய்த சர்க்கரை (இலட்சம் மூட்டைகளில்) | சர்க்கரை கட்டுமானம் (சதம்). | கரும்புக்கு இந்திய அரசு நிர்ணயித்த விலை (டன்னி ஒன்றுக்கு) | கரும்புக்கு கொடுக்கப்பட்ட விலை (டன்னி ஒன்றுக்கு ரூபாய்). | சர்க்கரையின் உத்தேச அடக்க விலை (மூட்டை ஒன்றுக்கு ரூபாய்). | கரும்பு விலை எல்லா ஆலைகளிலும் டன்னி ஒன்றுக்கு ரூபாய் 100 ஆக இருந்திருந்தால் சர்க்கரை ஒரு மூட்டையின் உத்தேச அடக்க விலை (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| **கூட்டுறவு ஆலைகள் :** | | | | | | | | |
| ஆம்பூர் ... | 2,200 | 2.26 | 1.99 | 8.86 | 96.00 | 110.00 | 179.17 | 167.00 |
| மதுராந்தகம் | 800/1,000 | 1.96 | 1.76 | 8.97 | 90.30 | 120.00 | 179.53 | 158.00 |
| அமராவதி | 1,250 | 2.23 | 1.82 | 8.14 | 90.30 | 100.00 | 188.44 | 188.44 |
| சேலம் | 1,000 | 2.47 | 2.00 | 8.09 | 90.30 | 104.00 | 181.13 | 176.15 |
| கள்ளக்குறிச்சி | 1,250 | 0.93 | 0.75 | 8.07 | 88.50 | 95.00 | 200.00 | 206.25 |
| தேசீய கூட்டுறவு சர்க்கரை ஆலை | 1,000 | 1.63 | 1.41 | 8.63 | 95.00 | 100.00 | 174.93 | 174.93 |
| தருமபுரி | 1,250 | 1.42 | 1.24 | 8.73 | 80.00 | 90.00 | 186.49 | 198.79 |

**கூட்டுப்பங்கு ஆலைகள் :**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஈ. ஐ. டி. பாரி ... | 2,750 | 4.87 | 3.80 | 7.81 | 80.00 | 90.00 | 187.68 | 199.56 |
| காவேரி சுகர்ஷ் அண்ட் கெமிக்கல்ஸ் | 1,000 | 1.77 | 1.38 | 7.79 | 87.50 | 92.50 | 194.47 | 203.77 |
| டெக்கான் சுகர்ஸ் அண்ட் அப்காரி | 1,500 | 3.10 | 2.41 | 7.75 | 94.40 | 99.40 | 197.44 | 198.18 |
| சவுத் இந்தியா ஸ்டில் அண்ட் சுகர்ஸ் | 1,500 | 2.31 | 1.97 | 8.52 | 86.60 | 91.60 | 183.13 | 192.56 |
| அருணு சுகர்ஸ் | 3,000 | 3.23 | 2.60 | 8.04 | 90.30 | 95.30 | 197.52 | 203.72 |
| சக்தி சுகர்ஸ் | 2,000 | 7.40 | 6.33 | 8.56 | 97.90 | 115.00 | 206.06 | 187.21 |
| மதுரை சுகர்ஸ் | 350 | 0.69 | 0.55 | 7.91 | 93.20 | 98.20 | 198.21 | 200.66 |
| கோத்தாரி சுகர்ஸ் அண்ட் கெமிக்கல்ஸ் | 1,500 | 2.24 | 1.97 | 8.76 | 95.00 | 100.00 | 185.23 | 185.23 |
| திரு ஆரூரான் சுகர்ஸ் | 1,200 | 1.55 | 1.10 | 7.13 | 87.50 | 87.50 | 199.62 | 217.17 |

சர்க்கரை மூட்டை ஒன்றின் உத்தேச அடக்க விலையை கரும்புக்கு, டன் ஒன்றுக்கு எல்லா ஆலைகளும் ரூபாய் 100 விலையாக கொடுத்திருந்தால், என்னவாகவிருக்கும் என்று கணக்கிட்டு அந்த அடிப்படையில் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சிறிய அளவு அறைவைத் திறன் உள்ள ஆலையின் அடக்க விலை, அதிகத் திறன் உள்ள ஆலையின் அடக்க விலையை விட அதிகமானதாக இல்லை என்று தெரியவருகிறது. அதிகமான திறனுள்ள சில ஆலைகளில் அடக்கவிலை, சிறிய திறனுள்ள ஆலையின் விலையைவிட அதிகமாக—ஒரு ஆலையில் மிகவும் அதிகமாகக் கூட-இருப்பதைக் காணலாம். எனவே, அரைவைத்திறன் ஒன்றைமட்டும் அளவுகோலாக கொண்டு ஒரு ஆலையின் இயக்கத்தையோ, திறமையையோ மதிப்பிடக்கூடாது என்பது கண்கூடாக விளங்குகிறது.

சர்க்கரைக் கட்டுமானம் ஆலையின் திறமையை ஒப்பிட மற்ருெரு அளவுகோலாகும். இந்த அடிப்படையில் பார்க்கும்போதும் சிறிய அளவு அறைவைத் திறனுள்ள ஆலையின் சர்க்கரைக் கட்டுமானம், அதிக அளவு அரைவைத்திறனுள்ள பல ஆலைகளைவிட அதிகமாகவே இருக்கிறது என்பதனைக் காணலாம்.

பெரிய ஆலைகளுடன் ஒப்பிட்டு நோக்கும்போது ஒரு சிறிய ஆலை, சர்க்கரை உற்பத்திச் செலவு, சர்க்கரைக் கட்டுமானம் போன்ற இனங்களில் எவ்வாறு திறம்பட இயங்கி வருகிறது என்பதனை மேலே பார்த்தோம். இது பொருளாதாரத்தை மையமாக வைத்த (Economic aspect) மதிப்பீடு. தொழில் நுட்ப வேலைத்திறனை மையமாக வைத்து (Technical aspect) இந்த சிறிய ஆலையின் திறனை ஆராய்ந்தால் இந்த வகையிலும், சிறிய ஆலை திறம்படவே இயங்கிவருகிறது என்பதனைப் புரிந்து கொள்ளலாம். உதாரணமாக, சர்க்கரை ஆலைகளுக்கான கரும்பு விலை, சம்பந்தப்பட்ட ஆலையின் முந்தைய ஆண்டின் சர்க்கரைக் கட்டுமானத்தை (Sugar recovery) அடிப்படையாகக் கொண்டு இந்திய அரசால் ஒவ்வொரு ஆலைக்கும் கரும்பு விலை நிர்ணயிக்கப்படுகிறது. சர்க்கரை கட்டுமானம் அதிகம் கிடைக்கிற ஆலைகளுக்குக் கரும்பு விலை அதிகமாகவும், குறைவாகக் கிடைக்கிற ஆலைகளுக்குக் குறைவாகவும் இருக்கும்.

சர்க்கரைக் கட்டுமானம் கரும்பின் தரத்தையும், ஆலையின் திறமையையும் பொறுத்து ஆலைக்கு ஆலை மாறுபடுகிறது. அதிகச் சர்க்கரைச் சத்துள்ள கரும்பிலிருந்து, அதிக அளவில் சர்க்கரையைப் பெறுவது ஆலையின் வேலைத் திறமையைப் பொறுத்தது. கரும்பில் சர்க்கரை சத்து அதிகமாக இருந்தபோதிலும், ஆலை திறம்பட இயங்காமற்போனால், அந்த அதிக சர்க்கரை கரும்புச் சக்கையிலும் (Bagasse) கழிப்பாக்கிலும் (Molases) கழிவு மண்ணிலும் (Filter mud) வீணாகிப் போகுமே தவிர சர்க்கரையாக ஆலைக்குக் கிடைக்காது. இந்த சர்க்கரைக் கட்டுமானத்தை அடிப்படையாகக் கொண்டு கரும்பு விலை நிர்ணயிக்கப்படுகிறபோது இந்திய அரசு நிர்ணயிக்கும் கரும்பின் விலையை வைத்து ஆலையின் திறனை ஓரளவுக்கு மதிப்பீடு செய்யலாம். இந்த அடிப்படையில் பார்த்தால் பதினுறு ஆலைகளில், இரண்டிற்கு கரும்பிற்கு டன்னி ஒன்றுக்கு ரூபாய் 80 ஆகவும், அதற்கும் மேலாக டன் ஒன்றுக்கு ரூபாய் 86.60 ஆக ஒரு ஆலைக்கும், ரூபாய் 87.50 ஆக இரண்டு ஆலைகளுக்கும், ரூபாய் 88.50 ஆக ஒரு ஆலைக்கும், ரூபாய் 90.30 ஆக நான்கு ஆலைகளுக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சிறிய ஆலைக்கு நிர்ணயிக்கப்பட்ட கரும்பு விலை டன் ஒன்றுக்கு 93.20. அதாவது நாள் ஒன்றுக்கு 1,000 டன்கள் முதல் 3,000 டன்கள் வரை

அரைவைச் சக்தி கொண்ட பத்து ஆலைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட, இந்த சிறிய ஆலைக்கு-நாள் ஒன்றுக்கு 350 டன்கள் அரைவை சக்தி கொண்ட சிறிய ஆலைக்கு-நிர்ணயிக்கப்பட்ட விலை கூடுதலாக உள்ளது. மிகக்குறைந்த விலையான ரூபாய் 80-க்கும் (நாள் ஒன்று 2,750 டன்கள் அரைவைச் சக்தி கொண்ட ஆலைக்கான விலை), சிறிய ஆலைக்கான விலையான ரூபாய் 93.20-துக்கும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது சிறிய ஆலைக்கான விலை டன் ஒன்றிற்கு ரூபாய் 13.20 கூடுதலாக உள்ளது. இந்த ஆலை, தொழில் நுட்ப வேலைத் திறனில் திறம்பட செயல்படுகின்றது என்பதற்கு இது ஒரு சான்றாகும். ஆலைகள் திறம்பட இயங்காது போனால், விவசாயிகள் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதற்கும் இது சான்றாகும்.

மேலும் ஆலையின் தொழில் நுட்ப வேலைத் திறனை வேறு பல அளவுகோல்கள் மூலமாகவும் மதிப்பீடு செய்யலாம். அவற்றில் முக்கியமான இரண்டு அளவுகோல்கள், கரும்பிலிருந்து சாறு பிழியும் திறன் (Reduced mill extraction) கரும்பிலுள்ள சர்க்கரையில்—கரும்புச் சாற்றைச் சர்க்கரையாக மாற்றும் வகையில் - மொத்தம் எவ்வளவு சேதாரமானது (Total sugar losses) என்பவையாகும். இந்த அளவுகோல்களின் படியும் இந்த ஆலை சம்பந்தப்பட்ட விவரங்களைப் பார்த்தால், பல பெரிய ஆலைகளை ஒப்புநோக்குமிடத்து, சிறிய சர்க்கரை ஆலை திறம்படவே இயங்குகிறது என்று அறியலாம். விவரங்கள் அட்டவணை 2-ல். கொடுக்கப்பட்டுள்ளன.

## அட்டவணை—2.

| ஆண்டுகள் | கரும்பிலிருந்து சாறு பிழியும் திறன் (சதவிகிதம்) | மொத்த சேதாரம் (சதவிகிதம்) |
| --- | --- | --- |
| 1969—70 | 90.90 | 2.79 |
| 1970—71 | 92.36 | 2.73 |
| 1971—72 | 92.40 | 2.51 |
| 1972—73 | 91.12 | 2.64 |

புதிதாக ரூபாய் 625 இலட்சம் செலவில் நிறுவக்கூடிய—நாள் ஒன்றுக்கு 1,250 டன்கள் கரும்பு அரைவைத் திறன் கொண்ட-ஆலை ஒன்றிலும், ரூபாய் 190 இலட்சம் செலவில் நிறுவக்கூடிய-நாள் ஒன்றுக்கு 350 டன்கள் கரும்பு அரைவைத் திறன் கொண்ட—சிறு ஆலை ஒன்றிலும், இரண்டு ஆலைகளும் ஆண்டு ஒன்றுக்கு 210 நாட்கள் அரைவை செய்யுமென்றும், கரும்புக்கு விலை டன் ஒன்றுக்கு ரூபாய் 100 என்றும், சர்க்கரை கட்டுமானம் 9.5 சதவிகிதம் என்றும், பங்கு மூலதனம் முறையே ரூபாய் 235 இலட்சம் ரூபாய் 70 இலட்சம் என்றும், சம்பள செலவு முறையே ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 20 இலட்சம், ரூபாய் 8 இலட்சம் என்றும் அடிப்படை வைத்துக் கணக்கிட்டுப் பார்த்தால், ஒரு மூட்டைச் சர்க்கரையின் உற்பத்தி செலவு உத்தேசமாக பின்வருமாறு இருக்கும்.

நாள் ஒன்றுக்கு 1,250 டன்கள் கரும்பு பிழியும் ஆலையில் ஒரு மூட்டைச் சர்க்கரையின் உற்பத்திச் செலவு =181.76 ரூபாய்.

நாள் ஒன்றுக்கு 350 டன்கள் கரும்பு பிழியும் ஆலையில் ஒரு மூட்டைச் சர்க்கரையின் உற்பத்திச் செலவு=189.06 ரூ.

இது சம்பந்தமான உத்தேச மதிப்பீடுகள் அட்டவணை-3-ல் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## அட்டவணை—3.

**நாள் ஒன்றுக்கு 1,250 டன்னிகள் கரும்பும் 350 டன்கள் கரும்பும் அறைக்கக்கூடிய இரண்டு ஆலைகளில் உத்தேசமாக ஒரு மூட்டைச் சர்க்கரை உற்பத்தி செய்ய ஆகக்கூடிய செலவும், இந்த ஆலைகளுக்கு கிடைக்கக் கூடிய நிகர ஆதாயமும்.**

விவரங்கள் கீழ்க்கண்ட உத்தேசங்களின் அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளன. இரண்டு ஆலைகளுக்கும் பொதுவான உத்தேசங்கள்.

1. கரும்பு அரைவை செய்யும் நாட்கள் ஆண்டுக்கு...210
2. கரும்பு விலை டன்னி ஒன்றுக்கு ரூபாய் 100
3. சர்க்கரைக் கட்டுமானம் 9.5 சதவிகிதம்.
4. பங்கு மூலதனம் : கடன் 1:1:7
5. கடனுக்கு வட்டி 12 சதவிகிதம்.
6. இயந்திரங்களின் மீது தேய்மானம் 10 சதவிகிதம்.
7. கட்டடங்கள் மீது தேய்மானம்—5 சதவிகிதம்.
8. சர்க்கரை விற்பனை: கட்டுப்பாடு விலையில் மொத்த உற்பத்தியில் 70 சதவிகிதம்; வெளிச்சந்தை விலையில் 30 சதவிகிதம்.
9. சர்க்கரையின் கட்டுப்பாடு விலை மூட்டை ஒன்றுக்கு ரூபாய் 155.49.
10. வெளிச்சந்தை விலை மூட்டை ஒன்றுக்கு ரூபாய் 285.00.
11. சர்க்கரையின் சராசரி விலை மூட்டை ஒன்றுக்கு ரூபாய் 191.34.

| | நாள் ஒன்றுக்கு 1,250 டன்னிகள் கரும்பு அரைக்கும் ஆலை. | நாள் ஒன்றுக்கு 350 டன்னிகள் கரும்பு அரைக்கும் ஆலை. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| | (1) | (2) |
| மொத்த மூலதனச் செலவு | 625 | 190 |
| பங்கு மூலதனம் | 235 | 70 |
| மூலதனச் செலவிற்குக் கடன் | 390 | 120 |
| இயந்திர சாதனங்களின் விலை (போக்குவரத்து, வரிகள், நிறுவனச் செலவு உட்பட) | 425 | 130 |
| கட்டடங்கள் | 175 | 55 |
| இதரச் செலவுகள் | 25 | 5 |
| சம்பளச் செலவுகள் (ஆண்டுக்கு) | 20 | 8 |
| நடை முதல் மூலதனக் கடன் | 75 | 21 |

**ஒரு மூட்டைச் சர்க்கரையின் அடக்க விலை :**

| | (ரூபாய்) | (ரூபாய்) |
|---|---|---|
| கரும்பு விலை (வரிகள் உட்பட) | 118.26 | 118.26 |
| உற்பத்திச் செலவு | 8.55 | 8.55 |
| **இதரச் செலவுகள் :** | (ரூபாய் இலட்சத்தில்) | |
| சம்பளம் | 20.00 | 8.00 |
| மூலதனக்கடனுக்கான வட்டி | 46.80 | 14.40 |
| இயந்திர சாதனங்கள் மீதான தேய்மானம் | 42.50 | 13.00 |
| கட்டடங்கள் மீதான தேய்மானம் | 8.75 | 2.75 |
| நடைமுதல் மூலதனக் கடனுக்கு வட்டி | 9.00 | 2.52 |
| சாக்குப் பைகள் | 9.97 | 2.76 |
| மொத்தம் | 137.02 | 43.46 |
| உற்பத்திச் செய்யக்கூடிய சர்க்கரை மூட்டைகள் | 2,49,375 | 69,825 |
| ஒரு மூட்டைக்காகும் செலவு (ரூபாய்) | 137.02 / 2,49,375 = 54.95 | 43.46 / 69,825 = 62.25 |
| மொத்த அடக்கவிலை | ..... 181.76... | .. 189.06 |
| மூட்டை ஒன்றுக்கு நிகர ஆதாயம் ரூ. | 194.34 (—)181.76 = 12.58 | 194.34 (—)189.06 = 5.28 |
| மொத்த நிகர ஆதாயம் (ரூபாய்) | 2,49,375 (×) 12.58 =31,37,137.50 | 69,825 (×) 5.28 =3,68,676.00 |
| | ரூ. 31.37. (இலட்சம்) | ரூ. 3.69 (இலட்சம்) |

தற்போதுள்ள முறைப்படி உற்பத்தியில் 70 சதவிகிதம் கட்டுப்பாடு விலையிலும், 30 சதவிகிதம் வெளிச்சந்தை விலையிலும் விற்பனை செய்வதாகக்கொண்டு-தற்போதுள்ள கட்டுப்பாட்டு விலை மூட்டை ஒன்றுக்கு ரூபாய் 155.49, வெளிச்சந்தை விலை ரூபாய் 285 என்ற அடிப்படையில் - கணக்கிட்டுப் பார்த்தால், சராசரி விலை மூட்டை ஒன்றுக்கு ரூ. 194.34 ஆக இருக்கும். இந்த இரண்டு ஆலைகளும் ஆண்டு உற்பத்தி செய்யக்கூடிய முறையே 2,49,375 மூட்டைகள், 69,825 மூட்டைகள் சர்க்கரை விற்பனையின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு முறையே ரூபாய் 31.37 இலட்சமும், ரூபாய் 3.69 இலட்சமும் நிகர ஆதாயம் பெறக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

(குறிப்பு: தற்பொழுது மொத்த உற்பத்தியில் 35 சத அளவை வெளிச் சந்தையில் விற்றுக் கொள்ளலாம் என இந்திய அரசு அறிவித்துள்ளதால், நிகர ஆதாயம் இன்னும் அதிகமாகக் கூடும்).

சமீபத்தில் கிடைத்த தகவலின்படி., நாள் ஒன்றுக்கு 300 டன்னிகள் கரும்பு .அரைக்கும் திறன் கொண்ட சிறிய ஆலை ஒன்றை சுமார் 100 இலட்சம் ரூபாய்கள் மூலதனச் செலவில் அமைத்துத் தர ஒரு நிறுவனம் முன்வந்துள்ளது. இந்த அளவு குறைந்த மூலதனச் செலவின் அடிப்படையில் கணக்கிட்டுப் பார்த்தால் மூலதனச் செலவு குறைவு காரணமாக வட்டி, தேய்மானச் செலவுகள் குறையுமாதலால், சிறிய ஆலையொன்றில் ஆண்டொன்றுக்கு கிடைக்கக்கூடிய இலாபம் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளபடி சுமார் ரூபாய் 3.69 இலட்சங்களுக்குப் பதிலாக சுமார் ரூபாய் 18 இலட்சங்களாக இருக்கலாம்!

சிறிய அரைவைத் திறனுள்ள ஆலைகளை இலாப நோக்கம் ஒன்றை மட்டும் முக்கியமாகக் கருதாமல், நமது மாநிலத்தில் பல இடங்களில் நிறுவினுலுங்கூட அவைகளும் நிச்சயம் இலாபகரமாக இயங்க முடியும் என்பதையே இது காட்டுகிறது.

மேலும், வங்காளத்திலும் நாள் ஒன்றுக்கு 300 முதல் 500 டன்னிகள் வரை அரைக்கும் திறனுள்ள சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிகிறது. ''இத்தகைய சிறிய சர்க்கரை ஆலைகளை நிறுவப்பட வேண்டியது விரும்பத்தக்கதும் அவசியமானதுமாகும்'' என்கிற கருத்தை வங்காளத்தின் சர்க்கரை பெருக்கு கழகத்தின் (Sugar development Corporation) தலைவர் சிறிய ஆலைகள் நிறுவுவதின் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வெளியிட்டிருக்கிருர். வங்காளத்தில் சிறிய அளவு அறைவை திறனுள்ள ஆலைகள் இயங்க முடியுமாஞல், தமிழ்நாட்டில் மட்டும் அவைகள் இயங்க முடியாதா? இது குறித்து ஆழ்ந்து, ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியம். இது சம்பந்தமாக இலாப நோக்கத்தில் மட்டும் ஆராய்ந்து பார்க்காமல், நமது மாநிலத்தில் பரந்து கிடக்கும் கிராமப்புற மக்களின் பொருளாதார அபிவிருத்தி விரைவில் நடைபெற வேண்டும் என்கிற நோக்கிலும், 'டீஸல்' எண்ணெய் கிடைப்பதில் நிச்சயமற்ற நிலை இருப்பதால் கரும்பு கொண்டு வருவதற்கு பெரும் அளவில் சுமையுந்துகளை நம்பியுள்ள பெரிய ஆலைகளை விட (அவை லாப நோக்கில் சிறந்தவைகளாக இருந்தபோதிலும்), சுமையுந்துகளை நம்பியில்லாத சிறிய ஆலைகளை (அவை சிறிய அளவிலேயே இலாபம் சம்பாதிக்க இயலும் என்ற நிலையிலும்) நிறுவுவது நல்லதில்லையா என்று சிந்தித்துச் செயல்படுவது அவசியம்.


தமிழரசு

அடுத்த இதழுடன்

1975-'76 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது சட்டப் பேரவையிலும், சட்ட மன்ற மேலவையிலும் நடைபெற்ற விவாதங்களுக்கு,

முதல்வர் கலைஞர் அளித்த பதிலுரை

இலவச இணைப்பாக வெளிவரும்.



## அதிசய நீர் ஊற்று நிபுணர்

குழாய்க் கிணறு இறக்கவும், புதிய கிணறு வெட்ட (பழைய கிணற்றில் போரிங் குழி இறக்க) குறிப்பிட்ட பூமியில் உள்ள நீர் ஊற்றுக்களை எல்லாம் விஞ்ஞான முறைப்படி கண்டுபிடித்து அந்த நீர் ஊற்றுக்களிலேயே மிக அதிகமான தண்ணீர் உள்ள 2 நீர்ஊற்றுக்கள் கிராஸ் செய்யும் சரியான இடமும், அதில் கிடைக்கும் தண்ணீரின் அளவும், நீர் ஊற்று உள்ள ஆழம் முதலிய விவரங்களையும் தெரிவிக்கப்படும்.

என்னுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு நான் குறிக்கும் இடத்தில் குழாய்க் கிணறு இறக்குபவர்களுக்கு அதில் தண்ணீர் சப்ளை கிடைக்கவில்லை என்று நிரூபித்தால் 2:3 என்ற விகிதத்தில் ரூ. 3,000 நஷ்டஈடு கொடுக்கப்படும்.

விவரங்களுக்கு 25 நயா பைசா ஸ்டாம்பு அனுப்புக.

**K. கந்தசாமி,**

(Ex. Member of the British Society of Dowers, London)

நீர் ஊற்று நிபுணர், கணபதி அஞ்சல்,
கோயமுத்தூர்-6.

தொலைபேசி எண் 31912.

# இந்தியன் ஓவர்சீஸ் பாங்கிலிருந்து இப்போது

## விவசாயிகளுக்கும் ஓர் விசேஷ சலுகை!

முதன்மை அடிப்படையில்

## விவசாய டிராக்டர்கள்

**(இதுவரை வழங்கப்பட்ட கார்கள், ஸ்கூட்டர்கள் தவிர)***



இப்போது — உங்களுக்கு விருப்பமான டிராக்டரை முதன்மை அடிப்படையில் பெற ஓர் வாய்ப்பு! நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இவ்வளவே. வெளிநாட்டிலிருக்கும் உங்களுடைய உறவினரை இந்தியாவிலுள்ள ஐஓபியின் எந்தக் கிளையிலாவது 'நான்-ரெஸிடென்ட் எக்ஸ்டர்னல் கணக்கைத் துவக்கச் சொல்லுங்கள். பின்னர், அவரை டிராக்டர், கார் அல்லது ஸ்கூட்டர் விலை +10% மதிப்பீட்டை உங்கள் பெயரில் ஒரு கணக்கிற்கு மாற்ற அங்கீகரிக்கச் சொல்லுங்கள். (இந்தக் கணக்கு இயக்க முடியாதது; மாற்றமுடியாதது.)

உங்களுடைய உறவினரும் பல வகைகளில் பயனடையலாம். அவைகளில் சில:

- 23 சதவிகிதமோ அதற்கு மேலோ எங்களுடைய மறுமுதலீட்டுத் திட்டமூலமாக வட்டி — வரி விலக்குடன்.
- எந்தக் கட்டுப்பாடுமில்லாமல் மொத்தத் தொகையும், வட்டியும் வெளிதேச கரன்சியில் திரும்பிப்பெற வசதி.
- சேமிப்புத் தொகையிலிருந்து விருப்பப்படி இந்தியாவினுள் செலவு செய்ய வசதி.

விபரங்களுக்கு உங்களுக்காக உதவக் காத்திருக்கும் எங்கள் மானேஜரை அருகிலுள்ள கிளையில் சந்தியுங்கள். அல்லது பிஸினஸ் பிரமோஷன் டிவிஷன் இந்தியன் ஓவர்சீஸ் பாங்க், 151, மவுண்ட் ரோட், சென்னை-600002 என்ற முகவரிக்கு எழுதுங்கள்:


**இந்தியன் ஓவர்சீஸ் பாங்க்**

உங்கள் வளர்ச்சிக்கோர் உத்தம நண்பன்

HT/IOB/8063

***இப்பொழுது சிமெண்ட்டும் முதன்மை அடிப்படையில் வழங்கப்படுகிறது.**

# எழிலார் இலஞ்சி மன்றம்



கோ. இளங்கோவன், பி.ஏ., பி.டி., எம்.எல்.ஏ.

மெய்வகை தெரிந்த மேலோர் ஏத்தும் ஐவகை மன்றம் பற்றி 'இந்திர விழவூர் எடுத்த காதையில்' இளங்கோவடிகள் பேசுகிறார். எடுத்துரைக்கப்பட்ட மன்றங்களில், வெளியான இடத்தினை உடைய வெள்ளிடை மன்றம் ஒன்றாகும். எழிலும் ஏற்றமும் கொண்ட 'இலஞ்சி மன்றம்' இரண்டாகும். ஒளிமிகுதியோடு உயர்ந்து விளங்குவது நெடுங்கல் நின்ற மன்றமாகும். பூமிதனில் யாங்கணுமே காணாத பூதச்சதுக்கம் நான்காகும். பார்தனில் சிறந்து விளங்கும் பாவை மன்றம் ஐந்தாகும். இரண்டாவதாக இடம்பெற்ற இலஞ்சி மன்றம் பற்றி எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**'கூனும் குறளும் ஊமும் செவிடும்**

**அழுகு மெய்யாளரும்**
**முழுகினராடிப்**

**பழுதில் காட்சி நன்னிறம் பெற்று**

**வலஞ்செயாக் கழியும் இலஞ்சி**
**மன்றமும்'**

என எடுத்தியம்புகிறது சிலப்பதிகாரம்.

இலஞ்சியென்றால் 'பொய்கை' என்பது பொருளாகும். பொய்கையோடு கூடிய மன்றம் 'பொய்கை மன்றம்' ஆகும். மன்றின் சிறப்பு குன்றின் மேலிட்ட விளக்குப் போல் நின்று நிலவுவதைக் காணலாம்.

கூன் விழுந்தவர்கள் இக் குளத்தில்மூழ்கினால் வான் நிமிர்ந்து பார்ப்பரென வையம் உரைக்கிறது. குறள் ( Dwarf ) கூட நெடிய வடிவில் காட்சி தருமெனக் குவலயம் செப்புகிறது. ஊமை பேசுமென உலகு கூறுகிறது. செவிடும் செவிச் சுவை அறியுமெனச் செகத்தோர் முழங்குகின்றனர். குணமடைய மாட்டாதார் என்னும் தொழுநோயாளரும் குளத்தில் மூழ்கினால் நல்லுருப்பெற்று, நன்னிறம் பெற்றுப் பன்னெடு நாள் வாழ்வரெனப் பகர்கின்றன பாட்டின் வரிகள். நடைபெறுங்காரியமா? நம்மவர் வியக்கின்றனர். அன்றைய நிலையென்ன? அறுதியிட்டு உறுதியாகக் கூறமுடியாது! எழுபத்தொன்றிற்குப் பிறகு, இன்றைய நிலையென்ன? எடுத்து இயம்புவோம்;

பராரியாய் வாழாதே எனத் தொழு நோய்ப் பிச்சைக்காரர்களைப் பரணூரும் பருகூரும் அழைக்கின்றன. ஊர் ஊராகத் திரியாதே என்று உளுந்தூர்ப்பேட்டை கூறுகிறது. மறு வாழ்வு வேண்டுமா? என்று கேட்டு மனையேரிப்பட்டியும் மல்லபாடியும் அழைக்கின்றன. புதுவாழ்வு பெறப் புறப்படுவெனப் புதுக்கோட்டையும் புதுப்பட்டியும் கூவுகின்றன. விண்ணமுடன் வாழத் தேவையில்லை; நல்ல பண்ணமுடன் வாழ்வோம் வா!'' என விண்ணப்பள்ளி விளம்புகிறது. இன்னும் பலப் பல இடங்கள்—அழுகு மெய்யாளரின் அவலம் போக்க—


ஊமும் செவிடும், கூனும் குறளும் உய்ய வேண்டி—ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண வேண்டி—எழுபத்து நான்கில் ஒரு கோடி நிதி திரட்டிட முடி சூடா மன்னர் கலைஞர் முன் வந்துள்ளார். ஏறத்தாழ இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்டவர் பயன் பெறுவரென எதிர்பார்க்கப் படுகிறது.

கண்ணிழந்தோர் — காது பழுது பட்டோர்—

கையிழந்தோர்—கால் முடமானோர் (கருத்திழந்தோர் நீங்கலாக) எண்ணிலாத் தமிழ் மக்கள் இனிப் பயன்பெறுவர்.

பயன் பெற்ற பலரும் பூம்புகார் செல்ல வேண்டும்; இலஞ்சி மன்றத்து எழில் நீராட வேண்டும்.

தொல்லைபடு தொழு நோயாளரும்—அல்லலுறும் கூனும் குறளும் ஆற்றலிழந்த ஊமும் செவிடும் ஏற்றமுற வழிகாணாது இலஞ்சி மன்றம் போற்றுகின்ற வகையில் பல்வேறு ஆற்றல்களைப் பெற்றிருந்தால் என்னவெனக் கண்ணகி காலத்தார் கண்ட கனவாகக் காப்பியம் கூறுவதைக் கண்ணுற்ற கலைஞர், வேண்டுவன செய்து மீண்டபின், எண்ணற்ற காரியங்களை எடுத்து முடித்தற்குக் காரணமாயிருந்த இலஞ்சி மன்றம் போற்ற வேண்டி உருவாக்கிக் கொண்டிருக்கும் உண்மை கண்டு உரைக்க



வேண்டியமைமக்கப்படும் எழில் மிகு இலஞ்சி மன்றம், வட்ட வடிவிலமைந்த வண்ணத் தடாகம் இரண்டினைத் தன்னகத்தே கொண்டிருக்கும். அளவான ஆழமுள்ள வளமான குளங்களில் ஆடவர், மகளிர் ஆடி மகிழலாம். மார்பளவு—உயரத்தில், சுரக்கும் உமிழ் நீரைச் சொரிய துவாரங்கள் (நீரின் தூய்மை நீங்காதிருக்க, பாய் குழாய்—வடிகுழாய்—பல்வேறு அமைப்புகள்).

ஆடி முடிந்தபின் ஆடை உடுத்தவோ அறைகள் இரண்டு முறையொடு அமையுமாம்! ஒப்பனை முடித்த பின் செப்பிய மன்றத்துள் படி தாண்டிச் சென்றால் பளிங்குச் சிலைகள் குளிக்கும் அழகினை வெளிக்குக் காட்டும். அழகுச் சிலைகள் ஆறினைக் கண்டவர், ‘காணாத கண் என்ன கண்ணே! கண்ணிமைத்துக் காண்பார்தம் கண் என்ன கண்ணே!’ எனப் பாடத் தொடங்கி விடுவர்.

''வாழ்க கலைஞர்! வளர்க சிற்பக் கலை!''

## சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தில் கிடைத்த விடைகள்

தமிழ்நாட்டில் தொழில்—நுட்பக் கல்வி வாரியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

* * *

மாநிலத்தின் தொழில்-நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி அபிவிருத்தித் திட்டங்களை ஒருங்கிணைத்துச் செயலாக்க அரசுக்கு ஆலோசனை கூறுவதும், மாநிலத்திலுள்ள தொழில் நுட்பப் பயிலகங்களில் பயிற்றுவிக்கப்படும் பொறியியல் பயிற்சியின் தரத்தை மேம்படுத்துவதும், அப் பயிலகங்களில் பயிற்றுவிக்கும் பயிற்சி வகுப்புகளுக்கு அனுமதி வழங்குவதும் பயிலகங்களுக்கும், தொழில் கூடங்களுக்கும் இடையே நட்புறவைப் பேணுவதும் மற்றும் தொழில் நுட்பக் கல்வித் தேர்வுகள் நடத்துவதும் அதன் தலையாய பணிகளாகும்.

* * *

இம்மாநிலத்தில் அறிவியல் கல்வி நிறுவனத்தை ஏற்படுத்தி 1974 சனவரியில் அரசு ஆணை வெளியிடப்பட்டது. அந்நிறுவனம் 1974–75 முதல் செயல்படுகிறது.

திருவாரூரில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள அரசினர் மருத்துவ மனையில் 70 படுக்கைகள் உள்ளன. மேலும் தனியார் நன்கொடைகள் மூலம் 16 படுக்கைகள் கொண்ட தனிப் பகுதிகள் கட்டுவது ஆய்வில் உள்ளது.

* * *

இம்மாநிலத்தில் பொதுத் துறையில் நிறுவப்பட்ட சதர்ன் போராக்ஸ் லிமிடெட் ஆண்டொன்றுக்கு 15,000 டன் போராக்சும், 3,000 டன் போரிக் அமிலமும் தயாரிப்பதற்காகத் தொழிற்சாலை ஒன்றை நிறுவி வருகிறது. இந்த ஆண்டின் மத்தியில் உற்பத்தி தொடங்கப்படும்.

* * *

ஊராட்சி மன்றங்களில் தெரு விளக்குகளுக்குப் பயன்படுத்தப்படும் மின்சாரத்தைக் கணக்கிடத் தனி மீட்டர் அமைக்கவும், இத்திட்டத்தை ஓராண்டுக்குள் எல்லா இடங்களுக்கும் அமல் செய்து முடிக்கவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

* * *

சென்னை, மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம் ஆகிய நகரங்களில் உள்ள அனாதைக் குழந்தைகள் இல்லங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு குழந்தைக்கு ரூ. 14ம், மற்ற ஊர்களிலுள்ள குழந்தைக்கு ரூ. 13ம், மலைப்பகுதிகளில் உள்ள குழந்தைகள் இல்லங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு குழந்தைக்கு ரூ. 18ம் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. உதவித் தொகையினை அதிகரித்துக் கொடுப்பதற்கு அரசு பரிசீலனை செய்து வருகிறது.

# குடும்பப் பாதுகாப்புத் திட்டம்

## —முதல்வர் கலைஞர் (சட்டப்பேரவையில்)



குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 1974-ஆம் ஆண்டு 934 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. செங்கற்பட்டு மாவட்டத்தில் 98 குடும்பங்கள், வட ஆர்க்காடு மாவட்டத்தில் 69 குடும்பங்கள், தென்னார்க்காடு மாவட்டத்தில் 56 குடும்பங்கள், தஞ்சை மாவட்டத்தில் 50 குடும்பங்கள், திருச்சி மாவட்டத்தில் 59 குடும்பங்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில் 9 குடும்பங்கள், இராமநாதபுரம் மாவட்டத்தில் 65 குடும்பங்கள், திருநெல்வேலி மாவட்டத்தில் 100 குடும்பங்கள், குமரி மாவட்டத்தில் 35 குடும்பங்கள், சேலம் மாவட்டத்தில் 46 குடும்பங்கள், தர்மபுரி மாவட்டத்தில் 21 குடும்பங்கள், கோவை மாவட்டத்தில் 75 குடும்பங்கள், நீலகிரி மாவட்டத்தில் 20 குடும்பங்கள், சென்னை மாவட்டத்தில் 145 குடும்பங்கள்.

நிரந்தரமாக்கப்பட்ட ஊழியர்கள், தற்கால ஊழியர்கள், 'பென்சன்' தகுதி பெருதவர்கள், மாநில அரசு பதவியைச் சார்ந்த ஐ. ஏ. எஸ். போன்ற அதிகாரிகளுக்கும் இந்த நிதியுதவி வழங்கப்படுகிறது. எல்லாக் கடைநிலை ஊழியர்களும் இத்திட்டத்தின்படி பயன்பெற்று வருகிறார்கள்.

உள்ளாட்சித்துறை ஊழியர்கள், சென்னை, மதுரை மாநகராட்சி ஊழியர்கள், மின்வாரிய ஊழியர்கள், போக்குவரத்துப் பணியாளர்கள் ஆகியோருக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை கிராம அதிகாரிகளுக்கும் விஸ்தரிப்பது அரசின் கவனத்தில் உள்ளது.

பயன்பெற்ற 934 குடும்பங்களில் மாத வருமானம் ரூ. 300க்கும் குறைவாக, உள்ள குடும்பம் 800 ஆகும்.

இந்தக் குடும்பப்பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மாதாந்தர ஊதியத்தில் ரூ. 1 தான் பிடிக்கப்படுகிறது. பத்து ரூபாய் கட்டவேண்டும் என்ற திட்டம் கைவிடப்பட்டது. இந்தத் திட்டத்தின்படி 13 மாதங்கள் கட்டியிருக்கிறார்கள். ஒருவர் 130 ரூபாய் வீதம் தந்திருக்கிறார். இதை பிராவிடெண்ட் பண்டில் சேர்க்கலாம் என்று அரசு யோசித்திருக்கிறது. இந்தத் தொகையை புதிதாகத் துவங்கியிருக்கிற சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்த்தும் பயன்பெறலாம்.

இறந்தவர்களின் சடலத்தை உடனடியாக எடுக்கக்கூட முடியாத குடும்பத்தினர் உள்ளனர். அந்தச் சூழ்நிலையில் ஆங்காங்குள்ள அதிகாரிகளே பணத்தைத் தந்து, பிறகு இந்தப் பணத்தில் கழித்துக் கொண்டு வழங்கினார்கள். கழிக்க வேண்டாமென்று நான் சொல்லி இருக்கிறேன்.



## மின்வாரியம் பெற்ற பரிசு

பொங்கல் சுற்றுலாப் பொருட்காட்சியில் பொதுத் துறையின் சார்பில் இடம்பெற்ற அரங்குகளில் முதற்பரிசு பெற்ற தமிழ்நாடு மின்வாரிய அரங்குக்குரிய பரிசை, மின்வாரியத்தின் பொது மக்கள் தொடர்பு அலுவலர் திரு. வி. ஜனார்த்தனம் அவர்கள் மேதகு ஆளுநரின் மனைவியார் திருமதி மதுபென்ஷா அவர்களிடமிருந்து பெறுகிறார்.